கோகுலம்


GOKULAM

செப்டம்பர் '92 விலை ரூ. 3.00




DON'T MISS THE LATEST COLOURS!
NOT TO BE MISSED THE LATEST STYLE TOO!
BUY THE QUALITY!
Advanced Technique for MORE COMFORT.
TIME
TIME
LATEST-FASHION
We are in step with TIME.
action®
SHOES

கோகுலம்
1992 - செப்டெம்பர் மாத இதழ்
மலர் : 10 இதழ் : 8



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

அடேயப்பா! எத்தனைவிதமான வாழ்த்துகள்! கல்கி பொன் விழாவுக்காக நீங்கள் அனுப்பிய வாழ்த்து மடல்களைத்தான் குறிப்பிடுகிறேன். குடும்பத்தினர் அனைவரும் வாழ்த்திக் கையெழுத்திட்ட பல வாழ்த்து மடல்கள்! குழந்தைகள் தங்கள் வயதைக் குறிப்பிட்டு அனுப்பியுள்ள வாழ்த்துகள்! ஆசிரியர்கள் அனுப்பியுள்ள வாழ்த்துக்கள் என்று பலவகைப்பட்ட அன்பு மடல்கள் கோகுலம் ஆசிரியருக்கு வந்து குவிந்துள்ளன. சேலத்தில் இருந்து ஒரு சிறுவன் ஓவிய மலர்களாலேயே வாழ்த்தியிருக்கிறான். இதையெல்லாம் பார்க்கும் போது கல்கி இதழின் மேல் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் உள்ள அன்பின் ஆழத்தை உணர முடிகிறது. உங்கள் அனைவருக்கும் நன்றி.

தமிழ் எழுத்துலகின் குருபீடமாக இன்றும் திகழும் அமரர் கல்கியவர்களின் பிறந்த நாள் இந்த மாதம் வருகிறது. தனது எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் சிறுவர் இலக்கியத்திற்கு இடமளித்து அதை மேன்மையுறச் செய்த அந்தப் பேனா மன்னனை சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.


'நூறு ரூபாய் இரகசியம்' தொடர் கதையின் சிறப்பையும் நடையையும் பாராட்டி ஏராளமானோர் எழுதியிருக்கிறார்கள். இதில் அதிசயம் ஏதுமில்லை. பூவண்ணனின் கதைகளையும் நாவல்களையும் ஏற்கெனவே படித்தவர்களுக்கு இது வியப்பாகத் தோன்றாது. இப்படி இல்லை என்றால்தான் இது அதிசயம். குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பா அவர்களின் முதன்மைச் சீடரான அவர் 1949 ஆம் ஆண்டில் இருந்தே குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கி, இன்றும் தொடர்ந்து எழுதி வருபவர். சிறுவர் இலக்கியத்தைச் செழுமையாக்கிய இந்தப் பேராசிரியருக்கு இந்த மாதம் ஐந்தாம் நாள் அறுபது வயது தொடங்குகிறது. கவிஞராகவும், நாவல் - சிறுகதை ஆசிரியராகவும் திறமைமிக்க பேச்சாளராகவும் திகழும் இந்தப் பேராசிரியரை பல்லாயிரக்கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் வாழ்த்துவதுடன் இன்னும் பல ஆண்டுகள் இவர் நலமுடன் வாழ்ந்து சிறுவர் இலக்கியத்தை மெருகூட்ட இறைவன் திருவருள் புரிய வேண்டும் என்றும் இந்த நல்ல நாளில் வேண்டுகிறோம்.

கோகுலத்திற்குத் தங்கள் படைப்புகளை அனுப்புவோர், தங்கள் முகவரியைக் குறிப்பிடுவதே இல்லை. இது பற்றிப் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். இருந்தும் பல பேர் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. அருமையான சில சிறுகதைகள், பாடல்கள் முகவரி இல்லாமையால் வெளியிட முடியாது போய் விட்டன. இந்தத் தவறை மீண்டும் செய்யாதீர்கள். உங்கள் படைப்பின் தலைப்பிலோ, இல்லை கடைசியிலோ முகவரியைத் தவறாது எழுதுங்கள். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுங்கள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,


(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்

கோகுலம்
செப்டம்பர்
1992


இந்த இதழில்...




சிலந்திக்கு எத்தனை கண்கள்? பக்கம் 11



புலி பசித்தால் ஜாங்கிரியும் தின்னும்! பக்கம் 85



அதிசய ஆக்டோபஸ்



உலகெங்கும் கேட்கும் உன்னத மணியோசை பக்கம் 92

அன்னதான நாமதேவர் பக்கம் 45





* எழுத்தாளர் ஆர். வி.க்குச் சிறப்பு



* சிறப்புத் தபால் முத்திரை, முதல் நாள் உறையுடன்

தபால் முத்திரையில் கல்கி விநாயகர்!

ஆகஸ்ட் முதல் தேதி. சென்னை அண்ணா சாலையில் உள்ள காமராசர் மாளிகையின் அரங்கம், வாசகப் பெரு மக்களின் நெரிசல் தாங்காது திக்கித் திணறியது. ஒரு இலக்கிய விழாவுக்காக இத்தனை கூட்டத்தை இந்த அரங்கம் கண்டதே இல்லை என்று எல்லோரும் வியந்தனர்.

மங்கல இசையைத் தொடர்ந்து, கல்கி ஆசிரியர் வரவேற்க காலை நிகழ்ச்சிகள் தொடங்கின. பொன் விழாப் போட்டிகளில் பரிசு பெற்றோருக்கு நீதிபதி மு. மு. இஸ்மாயில் அவர்கள் பரிசு வழங்கி உரையாற்றினார். கல்கி இதழின் பொன் விழாவை முன்னிட்டு இந்திய தபால் துறை சிறப்பு தபால் முத்திரை ஒன்றை அன்றைய தினம் வெளியிட்டு பெருமைப்படுத்தியது. இதில்



* பொன் விழா மலரை வெளியிட்டு ஆர்.வி. பேசுகிறார்



* பரிசளிப்பு நிகழ்ச்சி - எம். எஸ்., சதாசிவம், மூ. மூ. இஸ்மாயில், சுரேஷ்கிருஷ்ணா.

கல்கியின் விநாயகர் திருவுருவம் இடம்பெற்றிருந்தது. பெருமைக்கு .ரிய இந்த சிறப்புத் தபால் முத்திரையை, முதன்மை தலைமை தபால் துறைத் தலைவர் வெளியிட்டார். பட்டிமன்றத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

மாலை நிகழ்ச்சிகளை எம். எஸ். அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் விழா மலரை வெளியிட ஏராளமானோர் சிறப்புரையாற்றினார். பூர்ணம் விசுவநாதனின் கல்கி எழுதிய நாடகத்துடன் விழா நிறைவுற்றது.

சமூகத்தில் மிக உயர்ந்த பதவிகளில் இருக்கும் தலைசிறந்த எழுத்தாளர்கள், தொழிலதிபர்கள் போன்றோர் உட்கார இடமில்லா நிலையில், மண்டபப் படிகளில் அமர்ந்து விழா நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தது திகைக்க வைத்த காட்சியாக இருந்தது!

ஏதோ தங்கள் வீட்டுத் திருமணத்திற்கு வருவது போலவே பொது மக்களும், வாசகர்களும், திரளான கல்கி ஏஜெண்டுகளும் குடும்பத்தினருடன் வந்திருந்தனர். நாள் முழுவதும் இருந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்துச் சிறப்பித்தனர்.



எங்கள் ஊரில் நடந்தது!

புகைந்த காரணம்

எங்கள் ஊரின் கோவிலில் உள்ள சாமியின் பெயர் சத்தியவாகீசுவரர். கோபுரத்தின் நிழல் தரையில் விழுவதில்லை. அத்தனை உயரம்!


இந்த உயர்ந்த கோபுரத்தில் புகை வருவதாக, அதுவும் சரியாக மாலை ஆறு மணிக்குப் புகை வருவதாக ஒரே பேச்சு! மக்கள் எல்லோரும் கோவிலுக்கு முன்னால் கூடி விட்டனர்.



''நெருப்பு இல்லாமலே புகை வருவது அதிசயம். அதனால் ஏதோ சாமி குத்தம்தான்'', என்று பெரியவர்கள் பேசினர். ''இப்படி கோபுரம் புகைவது ஊருக்குப் பேராபத்து'' என்று இன்னும் சிலர் பேசினர். எல்லோரும் அச்சத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றனர்.


இந்த புகை விஷயம் மாவட்டத்தின் தலைமை அதிகாரிவரை போய் விட்டது. மக்களின் அச்சத்தைப் போக்கவும் உண்மையை அறியவும் எங்கள் ஊர்க் காவல் அதிகாரி, தனது இரு உதவியாளர்களுடன் தானே துணிவோடு கோபுரத்தின் மேல் ஏறிப் போனார். திரும்பி இறங்கி வந்த போது அவரிடம் இருந்த பை நிறைய அடை அடையாகக் கொசுக்கள் இருந்தன! ''ஆயிரக் கணக்கில் கொசுக்கள் மொத்தமாகப் பறக்கும் போது புகை போல் கீழிருந்து பார்க்கும் போது தெரிகிறது. இது தெய்வ குத்தமும் இல்லை. எந்த விபரீதத்திற்கான முன்னறிவிப்பும் இல்லை. இந்த அளவுக்குக் கொசுக்களை வளர விட்டவர்களுக்குத்தான் தண்டனை'' என்று உண்மையை உடைத்தார் போலீஸ் அதிகாரி!

- ஐ. அமலன், களக்காடு.


DIAMOND COMICS
DIWALI DHAMAKA
FREE
GREETING CARD
with every comic
RUSH! LIMITED STOCK
ONE GREETING CARD FREE WITH EVERY DIAMOND COMICS PUBLISHED IN SEPTEMBER
PINKI AND MITHU
LAMBOO MOTU... THE BLOODY ORNAMENTS
Tauji... THE GEM FROM NAGLOK
FAULADI SINGH... THE EXPLOSION IN THE SPACE
DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002
RIBUTORS : Madras : • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. Hyderabad : • Neelkamal Book Distributors, Sultan Bazar.
alore : • Sapna Book Stall, Opp. Tribhuvan Theatre, Gandhi Nagar • A.K. Agencies, 2094, 8 'A', Main Road, 'E' Block, Rajaji Nagar, 2nd stage.

கண்ணாடி எங்கே?

பக்கத்து வீட்டு மாமா ரயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். பெட்டி, படுக்கை, சாப்பாடு எல்லாம் ரெடி பண்ணி விட்டார்கள். கடைசி நேரத்தில் மாமாவின் கண்ணாடியைக் காண



வில்லை.

மாமா குத்தோ குத்தென்று குத்த, மாமியும் குழந்தைகளும் பரபரத்துத் தேடிக் கொண்டிருந்தனர். கண்ணா டியை எங்கும் காணவில்லை! ''இந்தச் சனியன் பிடித்த வீட்டில் எதுவுமே வைத்த இடத்தில் இருக்காதே'' என்று மாமா இரைந்தார்!

படுத்துக் கொண்டிருந்த மூன்று வயது வித்யா எழுந்து பார்த்தாள். விஷ யத்தை அறிந்து கொண்டதும் ''ஐயையே, கண்ணாடி உங்க முகத் துலயே இருக்கே மாமா!'' என்றாள். ஆமாம், அந்தப் பொல்லாத கண்ணா டியை அணிந்திருந்த மாமாதான், அதைத் தேடி அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தார்!

- நா. தீபா, உதகை.

நான்தான் கதவைத் திற!

எங்கள் வீடும் அடுத்த வீடும் ஒரே மாதிரி இருக்கும். ஒரு நாள் இரவு. மின்சாரம் இல்லை. எங்கள் வீட்டுக் கதவை யாரோ தட்டினார்கள். நாங்கள் ''யார்?'' என்று கேட்டோம். ''நான் தான் கதவைத் திற!'' என்று புதிய குரலில் பதில் வந்தது!


மறுபடி ''யார் நீங்கள்?'' என்று கேட்டோம் படைபடப்புடன்.

''நான்தான்னு சொல்றேனே? கத வைத் திற!'' என்று கோபத்துடன் பதில் வந்தது.

டார்ச் விளக்கை வைத்துக் கொண்டு, தடி, கல் சகிதம் எல்லோரும் உஷாருடன் நிற்க, அப்பா மெதுவாகக் கதவைத் திறந்தார்!


எங்கள் வீட்டுப் பக்கத்து வீட்டுக்கு வந்திருந்த விருந்தாளிதான் நின்றிருந் தார்! வீடு மாறி வந்திருக்கிறார்! தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர் போனார். அன்றிலி ருந்து வீட்டுக் கதவை நாங்கள் தட்டும் படி இருந்தால் ''நான் தான் கதவைத் திற'' என்று சொல்லிச் சிரித்து விடுகி றோம்!

- அர். அம்பிகா, மதுரை - 3.



தொள்ளனுக்கு ஒரு டிக்கெட்!

நான் பயணம் செய்த பஸ்ஸில் இருவர் ஏறினர். ஒரு பெண். ஒரு சிறுவன். சிறுவன் மலைவாழ் பகுதியைச் சேர்ந்தவன் என்பது தெரிந்தது.



கண்டக்டர் வந்த போது அந்தப் பெண் ''சாந்திக்கு ஒரு டிக்கெட்'' என்று கேட்டாள். சாந்தி என்பது ஒரு பஸ் நிறுத்தம்.

சிறுவனின் முறை வந்த போது அவன் ''தொள்ளனுக்கு ஒரு டிக்கெட்'' என்று கேட்டான். பஸ் டிரைவர் உட்பட எல்லோரும் திகைப்புடன் பார்த்தனர் அவனை.

''எம் பேரு தொள்ளன். இந்த பஸ்ல அவங்கவங்க பேர் சொல்லித்தான் டிக்கெட் வாங்கணும் போல இருக்கே?'' என்றான் சிறுவன்.

எல்லோரும் சிரித்துச் சிரித்து மகிழ்ந்தோம்!

- ஜி. ராஜேஷ், எம். பாலாடா, P.O.


பதினைந்து வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டுமே இந்தப் பகுதிக்கு எழுதலாம். வீட்டில், தெருவில், கடையில், பள்ளியில் நடக்கும் எல்லாமே எங்கள் ஊரில் நடந்த பகுதிக்கு ஏற்றவைதான். ஒரே நிபந்தனை. தபால் கார்டில் மட்டுமே எழுத வேண்டும். உங்கள் முழு முகவரியையும் தர வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர் கோகுலம், ''எங்கள் ஊரில் நடந்தது பகுதி'', 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை - 600 097.

மகாகவி பாரதி பல பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவும் சில பத்திரிகைகளுக்குத் துணை ஆசிரியராகவும் பணியாற்றியவர். பெண்களுக்கென்று சிறப்பாகத் தனிப் பத்திரிகையை நடத்திய முதல் பத்திரிகையாளரும் பாரதியே! 'சக்கரவர்த்தினி' என்று அந்த மாத இதழுக்குப் பதின் மூன்று மாதங்கள் ஆசிரியராக இருந்து வந்தார். இந்தியா, விஜயா, பால பாரதா, கர்மயோகி, சுதேச மித்திரன் இப்பத்திரிகைகளில் பணிபுரிந்துள்ளார். முதல் முதலாகத் தமிழ் இதழ்களில் கார்ட்டூன் சேர்த்தவரும் பாரதியே! விஜயா, இந்தியா - இதழ்களில் - பாரதியின் கார்ட்டூன்கள் வெளியாகியுள்ளன. ஞானபாநு, விவேக பாநு, செந்தமிழ் போன்ற தமிழ் ஏடுகளில் பாரதி கட்டுரை எழுதியுள்ளார். நியூ இண்டியா, காமன்வீல், ஹிந்து போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளிலும் அவரது கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

அந்தக் காலத்தில் அவர் 'ஆல் ரவுண்டராகவே' இருந்து வந்துள்ளார்.

- த. நவமணி, நல்லாலம்.





சிலந்திக்கு எத்தனை கண்கள்?

ரேவதி

மாடிப் படிக்கட்டின் கீழே ஒரு வளைவு. அது தான் முத்துவும் தேன்மொழியும் தங்கள் 'ஷூ'க்களை வைக்கும் இடம்.

சனி ஞாயிறு விடுமுறையாதலால் இருவரும் ஷூக்களைத் தொடவில்லை. திங்கட்கிழமை பள்ளி உண்டு ஷூவுக்குப் பாலீஷ் போட்டுக் கொண்டு வராவிட்டால், தண்டனையாக மைதானத்தில் குப்பை பொறுக்க அனுப்பிவிடுவார்கள். அதனால் பாலீஷ் போட மாடிப்படி வளைவுக்கு வந்தான் முத்து.

வளைவுக்குள் யாரோ மண்ணெண்ணெய் டின்னைக் கொண்டு வந்து வைத்திருந்தார்கள். அதன் விளிம்பையும், மாடிப்படி விளிம்பையும் இரு ஓரங்களாக வைத்து சிலந்தி ஒன்று வலை பின்னியிருந்தது.

அதைக் கவனிக்காது முத்து வேகமாக முகத்தை நுழைந்தான். வலை குலைந்தது. அவன் முகமெங்கும் ஒட்டிக்கொண்ட அறுந்த மெல்லிய இழைகள், 'குறுகுறு'ப்பு உணர்வைத் தந்தன! 'சூ! பூ' என்று முகத்தைக் கைகளால் துடைத்துக் கொண்டான்.

வாசல் அழைப்பு மணி கேட்டது. முத்து ஓடிச் சென்று பார்த்தான். வகுப்பு நண்பன் சாரதி நின்று கொண்டிருந்தான்.

''முத்து, நேற்றுப் பெய்த அடை மழையில் பள்ளியில், தண்ணி குளமா தேங்கிக் கிடக்கு. அதனால் இன்றைக்கு விடுமுறை விட்டிருக்கிறார்கள். அதைச் சொல்லத்தான் வந்தேன்'' என்றான் சாரதி.

''எங்களுக்கு ஒரு நடை மிச்சம். நான் இப்பத்தான் 'ஷூ'வுக்'கு 'பாலீஷ்' போடக் கிளம்பினேன்'' என்று நண்பனை உள்ளே அழைத்து வந்தான் முத்து.

''பாலீஷைப் போட்டு வைச்சுடு, நாளைக்கு வேண்டியிருக்குமே'' என்றான் சாரதி.

பேசிக் கொண்டே இருவரும் மாடி வளைவுக்கு வந்தனர், புதிய வலையைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது அந்தப் பொல்லாத சிலந்தி!

'சை!' என்று அதை அறுத்துப் பென்சிலால் தள்ளி விட முயன்றான் முத்து.

''வேண்டாம் முத்து, கூட்டைக் கலைக்காதே. அது எப்படித் தன் வலையைக் கட்டுகிறது. என்பதைப் பார்ப்போம்'' என்று அவனைத் தடுத்தான் சாரதி.

குறுக்குச் சட்டங்களைப் போட்டு முடித்து, இடைவெளிச் சட்டங்களை அமைத்துக் கொண்டிருந்தது சிலந்தி. நண்பர்கள் இருவரும் ஆவலாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''என்னண்ணா! இன்னுமா பாலீஷ் போடறே?'' என்று கேட்டுக் கொண்டே ஓடிவந்த தேன்மொழி, தலையை உள்ளே விட்டு 'ஷூ'க்'களை எடுத்தாள். சிலந்தி வலை இழைகள் முகத்தில் ஒட்டிக் கொள்ள குறுகுறுப்புடன் துடைத்துக் கொண்டாள்.

''இன்னிக்குப் பள்ளி விடுமுறை. அதுனால, இந்தச் சிலந்தி வலை பின்னுவதைப் பார்க்க உட்கார்ந்தோம். நீ கலைச்சிட்டே!'' என்றான் முத்து.

அந்தப் பொல்லாத சிலந்தி, படிக்கட்டு விளிம்பிலிருந்து மறுபடி வலை பின்னத் தொடங்கிக் கொண்டிருந்தது.

''முத்து மறுபடி வலை பின்னப் போவுது போல இருக்கு! பார்ப்போம்'' என்றான் சாரதி.

மூவரும் உட்கார்ந்து கொண்டு ஆவலோடு பார்த்தனர்.

இழைவிட்டபடி, அதிலேயே தொங்கிக் கொண்டு இறங்கியது சிலந்தி. கீழ்த் தட்டைத் தொட்டதும் பக்கவாட்டில் இழைவிட்டபடி ஓடியது. இழை விட்டபடியே உயரே ஏறியது. மறுபடி தொங்கி இழையிட்டபடி ஒரு சதுரத்தை இழையாலேயே அமைத்து முடித்தது. ஓரச் சட்டங்கள் முடிந்ததும் ஓடி ஓடி குறுக்குச் சட்டங்களைப் பின்னி ஒட்டியது! ஒவ்வொரு பக்கமும் படிக்கட்டு போன்ற அழகான கம்பி இழைச்



சட்டங்களை இணைத்து சுற்றுப் படிக் கட்டுகளை முடித்தது! முழு வலையும் தயார்!

மூவரும் வைத்த கண் வாங்காது அது இழைவிட்டபடி சுறுசுறுப்பாக இறங்கி, துளியும் கோணல் மாணலாக இன்றி முடித்த நேர்த்தியைப் பார்த்தபடி இருந் தனர். வலையை முடித்த சிலந்தி அதன் நடுவே உட்கார்ந்து கொள்ளாது ஒரு மூலையில் இருந்து கொண்டது.

முத்து உள்ளே போய் பெரிய பிடி போட்ட பூதக்கண்ணாடியைக் கொண்டு வந்தான். மாறி மாறி மூவரும் அதை வைத்துக் கொண்டு சிலந்தியைப் பார்த் தனர்.

''எட்டுக் கண்கள் இருக்கு அண்ணா!'' என்றாள் தேன்மொழி.

'''கால்கள் கூட எட்டு இருக்கு. அது னாலதான் இதை எட்டுக்கால் பூச்சின் னும் சொல்றாங்க'' என்றான் முத்து.


''அப்படிச் சொன்னாலும் எட்டுக் கால் பூச்சி என்னும் சிலந்தி, பூச்சிகளின் இனத்தைச் சேர்ந்தது அல்ல. 'அர்ச்ச னீஸ்' என்னும் பிரிவைச் சேர்ந்தது,'' என்று புதிய குரல் கேட்டது. மூவரும் திரும்பிப் பார்த்தனர்.


அக்காதான் நின்று கொண்டிருந் தாள். கல்லூரியில் விலங்கியல் பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்தாள். முத்து கொண்டு வந்திருந்த பூதக் கண் ணாடி அக்காவினுடையதுதான்.

''அக்கா, நான்தான் உன்னைக் கேட் காது பூதக் கண்ணாடியை எடுத்து வந் தேன். விளையாட அல்ல. இந்த சிலந்தி யைப் பார்க்க'', என்று தன் தவறைக் கூறிக் கெஞ்சினான் முத்து.

''போனாப் போறது போ. இந்த மாதிரி அறிவைப் பெருக்கக் கூடிய காரியத்திற்கு எடுத்து வந்தால் நான் எதுவும் சொல்ல மாட்டேன். பார்த்து முடிச்சதும் கவனமா மறுபடி எடுத்த இடத்திலேயே கொண்டு போய் வைச்சி டுங்க'' என்று கூறிய அக்கா, பூதக் கண்ணாடியை வாங்கி சிலந்தி வலை யைப் பார்த்தாள்.

ஜன்னல் வழியாகத் தோட்டத்தில் இருந்து பறந்து வந்த சிறு வண்டு சிலந்தி இருந்த இடத்திற்கு வெகு அருகில் சென்று உட்கார்ந்தது.





''இவ்வளவு கிட்டத்தில் இந்த வண்டு வந்து உட்கார்ந்திருக்கு... சிலந்தி பேசாம இருக்கே!'' என்று கேட்டான் சாரதி.

''சிலந்தி, தன் வலையில் வந்து சிக்கிக் கொள்ளும் பூச்சி புழுக்களைத் தான் இரையாகக் கொள்ளும்... ஓணான், பல்லியைப் போல் வாயால் எந்த இரையையும் எடுக்காது'' என்றாள் அக்கா.

வண்டு பறந்தது. சிலந்தி பின்னி யிருந்த வலையின் ஒரு குறுக்குச் சட்டத்தில் வந்து சிக்கிக் கொண்டது. தன்னை விடுவித்துக் கொள்ள அது செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதற்குள் மூலையில் மறைந்திருந்த சிலந்தி கிடுகிடுவென்று வந்து, வலையில் ஓடி வண்டை நெருங்கிக் கால்களால் பிடித்தது.

''ஒவ்வொரு காலின் முனையிலும் ஒரு சின்னக் கொடுக்கு இருக்கு பார்த்தீங்களா?'' என்று கேட்டாள் அக்கா. மூவரும் பூதக் கண்ணாடியில் பார்த்து வியந்தனர்.

சிலந்தி தனது தாடையைத் தூக்கியதை. மூவரும் பூதக் கண்ணாடியில் பார்த்தனர்.

''மேல் தாடையில் கீழ் நோக்கிய கோரைப் பற்கள் இருக்கும். இதில் விஷப்பை இணைந்திருக்கும். இதனால் கடித்து இரையின் மேல் நஞ்சைப் பாய்ச்சி அதைச் செயலிழக்க வைத்து விடும்.'' என்றாள் அக்கா.

''என்னது வண்டைக் கடித்து, அப்படியே விட்டு விட்டு மறுபடி தன் பழைய இடத்திற்கே போகிறதே சிலந்தி?'' என்றான் முத்து.

''காரணமாகத்தான் போகுது. சிலந்தியால் தன் இரையை விழுங்க முடியாது. இரையின் உடம்பில் இது பாய்ச்சியிருக்கும் நஞ்சும் உமிழ்நீரும் சிறிது நேரத்தில் இரையைக் கூழ்போல் இளக்கிவிடும். சிலந்தி மறுபடி வந்து அதை உறிஞ்சிக் குடித்து விடும்'' என்றாள் அக்கா.

''அக்கா, பூச்சிகளும் வண்டுகளும் மட்டும் இதன் வலையில் சிக்கிக் கொள்ளும் போது, சிலந்தி மட்டும் அந்த வலையில் சிக்கிக் கொள்ளாது, வெகு வேகமாக அந்த வலையின் மேல் நடந்து வருகிறதே! எப்படி?'' என்று கேட்டான் முத்து.

''வலை பின்னவும், இரையைச் சிக்கச் செய்யவும் பயன்படும் பிசினானது இதன் உடம்பின் அடிவயற்றில் உள்ள சுரப்பிகளில் இருந்து வெளியாகிறது. வெளியே வரும் போது இது திரவமாக இருக்கும். காற்றுப் பட்டதும் திடப் பொருளாகிவிடும். இதில் மூன்று வகைப் பிசின்கள் சுரக்கும். ஒன்று ஒட்டாத வகை. இதைத்தான் வலையின் வெளிப்புறச் சட்டங்களுக்கும் குறுக்குச் சட்டங்களுக்கும் சிலந்தி பயன்படுத்தும். இரண்டாவது வகை ஒட்டும் குணமுடையது. இதைக் கொண்டுதான் இழைகளைப் பின்னும். பூச்சிகள் இதில் தான் சிக்கிக் கொண்டு, சிலந்திக்கு இரையாகும். மூன்றாவது வகை, இரைகளை திரவப் பொருளாக்கப் பயன்படும். சிலந்திக்கு, தன் வலையில், ஒட்டிக்

கொள்ளாத இழையால் ஆன குறுக்குச் சட்டம் எங்கே இருக்கிறது என்பது தெரியும். அதனால், அது மிகவும் கவனமாக அதில் ஓடும். நடக்கும்," என்று கூறிய அக்கா "இங்கே கூட ஒரு சிலந்தி இருக்கே பார்த்தீர்களா" என்று கூட்டிக் காட்டினாள்.

மாடி வளைவு அலமாரிக்குள் செங்கல் பெயர்ந்த இடத்தில் இருட்டில் ஒரு பெரிய சிலந்தி காணப்பட்டது.

"அதன் நடுவே வயிற்றுப் பகுதிக்குக் கீழே என்னவோ வெளுப்பாக இருக்கிறதே!" என்று வியந்தான் முத்து.

"அது முட்டை பை. அது நிறைய சிலந்தி முட்டை இருக்கும். அம்மாச் சிலந்தி, தான் போகும் இடமெல்லாம் அந்தப் பையை வயிற்றுக்குக் கீழே வைத்துக் கொண்டு போகும். நீங்கள் அண்ணனும் தங்கையும் சண்டை போட்டுக் கொள்வது போல், முட்டை பொரிந்து குஞ்சுகளாக வெளிவந்ததும் சண்டை போட்டுக் கொண்டு, வலிமையான குஞ்சு எளிமையானவற்றைத் தின்று விடும். இதெல்லாம் அந்தப் பைக்குள்ளேயே நடக்கும்! பையில் அம்மா இடும் சுமார் இருநூறு முட்டைகளில், உருப்படியாகப் பொரிந்து குஞ்சுகளாக வெளிவருபவை ஒருசிலவே!" - என்றாள் அக்கா.

"வலை பின்னுவது அம்மா சிலந்தியா அப்பா சிலந்தியா?" என்று கேட்டான் சாரதி.

"பெரும்பாலும் அம்மா சிலந்தி தான். அதுதான் அப்பாவை விட வலிமையானது. முட்டையிடு முன் அம்மா சிலந்தி அப்பாவையே கொன்று தின்று விடும்" என்றாள் அக்கா.

சன்னல் வழியாகப் பறந்து வந்த குருவி ஒன்று, வலையின் ஓரமாக இருந்த சிலந்தியைக் குறி பார்த்து இறங்கியது. மூக்கில் கொத்திக் கொண்டு பறந்தது!

அறிவியல் உண்மைகள்

★ சிலந்தி எட்டுக்கால் பூச்சி என்று அழைக்கப்பட்டாலும் அது பூச்சி இனம் அல்ல. அர்ச்சனிஸ் என்னும் தனிப் பிரிவைச் சேர்ந்தவை.

★ சிலந்தியிடம் மூன்று வகை பிசின்கள் சுரக்கின்றன. குறுக்குச்சட்டம் போட, வலை பின்ன, இரையை திரவமாக்க, முட்டையைத் தயாரிக்க இவை பயன்படுகின்றன.

★ தான் பின்னும் வலையில் தான் மட்டும் சிக்கிக் கொள்ளாது சிலந்தி நடப்பது இயற்கையின் விநோதம்!

★ சராசரி ஆயுள் ஒரு ஆண்டு. சிலந்திகளில் 15000 வகைகள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான வலையைப் பின்னும்!

★ சிலந்திக்கு எட்டுக் கண்கள் இருந்தாலும் அதற்குப் பார்வை குறைவே!


★ சிலந்திகள் விடா முயற்சி மிக்கவை. எத்தனை முறை கலைத்தாலும் திரும்பத் திரும்ப வலை பின்னும். அதுவும் கலைந்த பழைய வலையைப் போலவே இருக்கும்.


★ கண்களை விட தன் வலையின் அசைவுகளைக் கொண்டே இது இரை சிக்கியதை உணர்கிறது!


"மூணு கவர், அஞ்சு கார்டு எவ்வளவு...?"

"மூணு ரூபாய், எழுபத்தஞ்சு பைசா கொடு, இந்தா...!"

"எனக்கு வேண்டாம். கணக்கு ஹோம்-ஒர்க் செய்யத்தான் கேட்டேன்!"




ரெண்டு பேருமா கொண்டு வாங்க!



பணக்கார மாப்பிள்ளை!

மங்களபுரத்தில் ஒரு பணக்காரர் இருந்தார். அவருக்கு ஒரே பெண். அவளை ஓர் பணக்கார இளைஞனுக்குத் தான் திருமணம் செய்து கொடுப்பேன் என்று பணக்காரர் ஒரே பிடிவாதமாக இருந்தார். ஆ ன ா ல் பெண்ணுக்கோ தனக்கு வரும் மாப்பிள்ளை புத்திசாலி யாக இருக்க வேண்டும் என்று ஒரே ஆசை.

பக்கத்து கிராமத்தில் மாடு மேய்த்து வந்த இளைஞன் சொக்கன் பார்ப் பதற்கு அழகாக இருப்பான். புல்லாங் குழல் வாசித்தால் கே ட் டு க் கொண்டே இருக்கலாம். ஏ ழை மே ய தவிர அறிவில் சிறந்தவன்.

சொக்கனை பணக்காரப் பெண் ணுக்குப் பி டி த் து ப் போய்விட்டது. சொக்கனுக்கும் அவளைப் பிடித்து விட்டது.

''என்னைக் கல்யாணம் செ ய் து கொண்டால், ஒரு வேளை கஞ்சிதான். குடிசையில்தான் வாழ வே ண் டு ம்'' என்று பயப்படுத்தினான் சொக்கன்.

''நீங்கள் அறிவாளி, எ ன் னி ட ம் அன்பு கொண்டவர் என்ற நிறைவு இருக் கும் போது மற்றவைகளைப் பற்றி நினைக்க வில்லை. எங்கப்பாவை எப் படி ஏமாற்றுவது என்பது உங்களுக்கா தெரியாது? சீக்கிரம் எங்கப்பாவிடம் பெண் கேட்க வாருங்கள்'' என்று தன் முடிவைச் சொன்னாள் அவள்.

சொக்கன், சலவைத் தொழிலாளி ஒருவரிடம் கேட்டு ஜரிகை வேட்டி,




தினம் தினம்

மாதம் ஒரு தொகுதி

அன்பு பெற்றோரே!

உங்கள் குழந்தைக்கு தினந்தோறும் ஒரு கதை சொல்ல வேண்டும
கவலையே வேண்டாம். கண்மணி கிரியேடிவ் வேவ்ஸ்
உங்கள் சிரமத்தைக் குறைக்கிறது. ஆமாம்!

- மாதம் ஒரு தொகுதியாக உலகின் சிறந்த அற்புதக் கதைகளை (FAIRY TALES) தொகுத்து பத்திரிகைத் துறையி சுமார் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்ற பாவைசந்திரன் வழங்குகிறார்.
- நீங்கள் செய்ய வேண்டியது மாதம் ரூ.20 செலுத்தி புத்தகம் வாங்குவதுதான்.
  - ஒவ்வொரு தேதிக்கும் ஒரு கதை.
  - ஒவ்வொரு கதைக்கும் ஒரு சித்திரம்.
  - சித்திரத்தை வரைவது பிரபல ஓவியர்கள்.



ஒரு கதை

எமது வெளியீடுகள்

	ரூ.பை.
தினம் தினம் ஒரு கதை (தொகுதி-1)	18-00
தினம் தினம் ஒரு கதை (தொகுதி-2)	16-00
தினம் தினம் ஒரு கதை (தொகுதி-3)	20-00
தினம் தினம் ஒரு கதை (தொகுதி-4)	20-00
தினம் தினம் ஒரு கதை (தொகுதி-5)	20-00
செ. யோகநாதன் எழுதிய சிறுவர் கதைகள் எல்லோரும் நண்பர்களே	20.00

நூல் கிடைக்குமிடங்கள் :

காந்தளகம்
834, அண்ணாசாலை, சென்னை-2.

ஏஷியன் புக்ஸ்
தாயார் சாகிப் தெரு, சென்னை-2.

விஜயா பதிப்பகம், கோவை.

அன்னம் புத்தக மையம், மதுரை.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
153 டி.டி.கே. சாலை, சென்னை-18.

கண்மணி கிரியேடிவ் வேவ்ஸ்
92, டி.எஸ்.வி. கோயில் தெரு,
சென்னை - 600 004.



பட்டுச்சட்டை அங்கவஸ்திரம் எல்லாம் இரவலாக வாங்கிக் கொண்டு, பணக்கார வேஷத்துடன், பணக்காரனிடம் போய் பெண் கேட்டான்.

சொக்கனுடைய தோரணையையும், தோற்றத்தையும் பார்த்துப் பணக்காரர் அசந்து போனார். ''உங்க சொத்து விவரம் சொல்லுங்க'' என்று கேட்டார்.

''என் வீட்டுக்குள் இருந்தபடி சூரிய உதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் பார்க்கலாம். என் மாடுகளுக்குத் தண்ணீர் காட்டித் திரும்பவே ஒரு நாள் பொழுது போதாது'' என்றான் சொக்கன். பணக்காரர் மகிழ்ந்து போய் மகளைத் திருமணம் செய்து வைத்தார்.

மனைவியை அழைத்துக் கொண்டு சொக்கன் ஊருக்குப் புறப்பட்டான். சில நாள் கழித்து மகளையும் மருமகனையும் காண சொக்கன் வீட்டுக்கு வந்த பணக்காரர், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார்.

சொக்கனின் மண் குடிசைக் கூரை ஓட்டை வழியே சூரிய உதயமும், சூரிய அஸ்தமனமும் தெரிந்தன! அவனிடம் இருந்த இரண்டு பசு மாடுகளும் காலொடிந்தவை. அவைகளை அழைத்துச் சென்று தண்ணீர் காட்டித் திரும்ப ஒரு நாள் போதவில்லை!

ஆனாலும் மகள் மகிழ்ச்சியாக இருப்பதையும், மருமகன் புத்திசாலியாக இருப்பதையும் பார்த்து அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

- அ. முருகன், சங்கராபுரம்.

மீனும் சமையலும்!

முல்லாவுக்கு மீன் சமைத்துச் சாப்பிட ஆசை எழுந்தது. நண்பர் ஒருவரைப் பிடித்து மீனை எப்படியெல்லாம் சமைப்பது என்று கேட்டு ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டு வந்தார். அடுத்த நாள் கடைக்குப் போனார். ஒரு நல்ல கொழுத்த மீனை விலை பேசி வாங்கிக் கொண்டு எடுத்து வந்தார்.



வரும் வழியில் அவர் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த நேரம் பார்த்து ஒரு பருந்து மின்னலாகப் பாய்ந்து அவரிடமிருந்த மீனைக் கொத்திக் கொண்டு பறந்து விட்டது.

பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ''என்ன முல்லா, உங்க மீனைப் பருந்து கொத்திக் கொண்டு போயிடுச்சே?'' என்று துக்கம் விசாரித்தனர்.

தனது ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாத முல்லா, ''முட்டாள் பருந்து. அந்த மீனை என்ன செய்ய முடியும்? அதைச் சுவையாகச் சமைக்கும் குறிப்பு எழுதிய காகிதம் என்னிடம் தானே இருக்கு?'' என்று கூறிக் கொண்டு நடந்து சென்றார்.

- எஸ்.ஏ. அப்துல் ஹகீம் அலி, திருச்சி - 1.

அண்டப் புளுகன் அய்யாசாமி!

அண்டப் புளுகன் அய்யாசாமியை உங்களுக்குத் தெரியாது என்றால் நீங்கள்



கொடுத்து வைத்த புண்ணியவான். ஆனால் எந்த நிமிடம் வேண்டுமானா லும் நீங்கள் அவரிடம் சிக்கிக் கொண்டு விடலாம். எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது புளுகிக் கொண்டே இருப்பார்.

ஒரு முறை அய்யாசாமி காசிக்குப் போய் வந்தார். அவரைக் காண நண்பர் களும் உறவினர்களும் வந்தனர்.

''நான் எந்த அமெரிக்காவுக்குப் போனாலும் ஒரு துரும்பைக் கூடத் தொலைத்து விட்டு வந்தது கிடையாது. அவ்வளவு கவனமாக இருப்பேன்'' என்று தனது பிரதாபத்தைப் பீற்றிக் கொண்டிருந்தார் அய்யாசாமி.

அப்பொழுது உள்ளேயிருந்து வந்த அவரது மனைவி கண்ணம்மா, ''என் னங்க, நீங்க கொண்டு போன வெள்ளி டம்ளரைக் காணுமே?'' என்று கேட் டாள்.

அய்யாசாமியா அயருவார்? ''காசி யில, என் நண்பர் வஜ்ரவேலுவைப் பார்த்தேன். ரொம்ப ஏழையா இருக் கான். அதனால அவனுக்கு இருந்துட் டுப் போகுதேன்னு நான்தான் அதை அவனுக்குக் கொடுத்துட்டு வந்தேன்'' என்றார்.

அரை மணிக்குப் பிறகு கண்ணம்மா ஒரு வெள்ளி டம்ளருடன் வந்தாள். ''என்னங்க அந்த வெள்ளி டம்ளர் இதோ இருக்கே! நீங்க வஜ்ரவேலுவுக்குக் கொடுத்ததா சொல்றீங்களே?'' என்று பிடித்துக் கொண்டாள்.

''இது உன் தாய் வீட்டு சீதனம் ஆச்சே. கொடுத்த பிறகுதான் அது நினை வுக்கு வந்தது. அதனால வேற புது டம்ளரை வாங்கி வஜ்ர வேலுவுக்குக் கொடுத்துட்டு அவன்கிட்ட கொடுத் திருந்த உன்னோட இந்த டம்ளரைத் திருப்பி வாங்கி வந்தேன்'' என்றார் அய்யாசாமி!

- மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

நிழலுக்கு விலை!

பூபதி பலே கெட்டிக்காரன். பேச் சிலே பலே கில்லாடி. எப்படியாவது எல்லாரையும் ஏமாற்றி விடுவான். அவனிடம் ஏமாறாதவர்களே ஊரில் கிடையாது.

பூபதியை மட்டம் தட்ட புதிதாக ஊரில் இருந்து வந்திருந்த சபாபதி



கிளம்பினான். அவன் போன போது மாரியம்மன் கோவில் வாசலில் தன்னைச் சுற்றி ஒரு கூட்டத்தை வைத்துக் கொண்டு பூபதி பேசிக் கொண்டிருந்தான்.

அங்கே வந்த சபாபதி, ''பூபதி ஐயா, உங்களுடைய பெருமையே பெருமை! அறிவாளியான உங்களை நான் அப் படியே விலைக்கு வாங்கிட மாட்டோமான்னு துடிக்கிறேன். அதுக்கு எனக்கு சக்தி ஏது? அதனால எங்கிட்ட இருக்கிற ஆயிரம் ரூபாய்க்கு உங்களோட நிழலை வாங்கிக்கிட்டுப் போகலாம்னு வந் திருக்கேன்'' என்று காலில் விழுந்தான்.

'இவன் மடையர்களில் கடைந்தெடுத்த மாங்கா மடையன்' என்று எண்ணிக் கொண்ட பூபதி, ''சரிப்பா, ஆயிரம் ரூபாயைக் கொடுத்துட்டு என் நிழலை வாங்கிக்க'' என்றான்.

பணத்தைக் கொடுத்த சபாபதி, ''இனிமே உங்க நிழல் உங்க கூட இருக்கக் கூடாது. என்னிடந்தான் இருக்கணும். என்னை நீங்க ஏமாத்திட்டீங்கன்னு தெரிஞ்சா பத்தாயிரம் ரூபாய் தந்திடணும். இவங்க எல்லோரும் சாட்சி'' என்றான்.

அடுத்த நாள் நடுப்பகல், பூபதி தன் நண்பர்களுடன் ஒரு திருமணத்திற்குச் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். திடீரென்று பூபதி வழியை மறித்து அலறினான் சபாபதி.

''என்னய்யா இது அநியாயம்! எனக்கு நிழலை வித்துட்டு அத அனுப்பாம இப்படி உங்களோடயே வெச்சிக்கிட்டு என்னை ஏமாத்தறீங்களே! இது ஏமாத்தறதா ஆகாதா? நிபந்தனைப்படி பத்தாயிரம் ரூபாய் கொடுங்க'' என்று ஆர்ப்பாட்டம் செய்து அழுதான்.

பூபதியிடம் ஏற்கெனவே ஏமாந் திருந்தவர்கள் சபாபதியுடன் சேர்ந்து கொண்டனர். வேறு வழியில்லாது பத்தாயிரம் ரூபாய் கொடுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டார் சபாபதி.

- பா. கார்த்திக் குமார், கோபி.

மடையன் மாடச்சாமி!

மடையன் மாடச்சாமியை அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள். அவன் செய்யும் காரியங்கள் அவ்வளவு மடத்தனமாக இருக்கும். அதுதான் அந்தப் பட்டப் பெயர் ஒட்டிக் கொண்டது அவனுடன்.

ஒரு முறை மாடச்சாமி கோவிலுக்குப் போய்க் கொண்டிருக்கும் போது, குளத்தில் யாரோ விழுந்து கத்தும் சத்தம் கேட்டது. மாடச்சாமி ஓடிப் போய்ப் பார்த்தான். ஒரு பணக்காரர் குளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

மாடச்சாமி சற்றும் தயங்காது குளத்தில் குதித்து பணக்காரரைக் கரைக்கு இழுத்து வந்தான். மாடச்சாமிக்கு நன்றி கூறிய பணக்காரர், ''நீ செய்த உதவிக்கு உனக்கு ஐம்பது ரூபாயாவது பரிசு தர எண்ணுகிறேன். ஆனால் என்னிடம் நூறு ரூபாயாக இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, மாடச்சாமி அவரை மறுபடி குளத்திற்குள் தள்ளினான்.. அவர் தத்தளித்துத் தவித்ததும், நீரிலே பாய்ந்து அவரை இழுத்து வந்து



கரையேற்றினான். ''உங்களை ரெண்டு முறை காப்பாற்றி விட்டேன். நூறு ரூபாயாகக் கொடுங்கள்'' என்று மாடச்சாமி கேட்டதும், பணக்காரர் அவனை இழுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார்! என்ன காரணம் என்று புரிகிறதா?

- எம். மதன், கோட்டையூர்.

சராசரி ஆழம்!

ஒரு குருவிடம் மூன்று சீடர்கள் இருந்தார்கள். அந்த மூவரும் வடிகட்டின முட்டாள்கள். குரு அவர்களை வைத்துக் கொண்டு மிகவும் திண்டாடினார்.

ஒருமுறை குரு தனது முட்டாள் சீடர்கள் மூன்று பேருடன் காட்டைக் கடந்து கொண்டிருந்தார். வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது.

''ஆற்றின் ஆழம் எவ்வளவு இருக்கிறது என்று பாருங்கள். நம்முடைய உயரம் அதிக அளவு ஐந்தரை அடிதான். நம்முடைய உயரத்தை விட ஆறு அதிக ஆழம் இருந்தால், ஆற்றைக் கடப்பது ஆபத்தானது. வெள்ளம் வடியும் வரை காத்திருக்க வேண்டும்'', என்று கூறினார் குரு.

சீடர்கள் மூவரும் ஆற்றில் இறங்கினர். ஒருவன் ''நான் அளந்து பார்த்த இடத்தில் ஆழம் ஐந்து அடிதான்'' என்றான். இரண்டாமவன் ''நான் பார்த்த இடத்தில் நான்கு அடி ஆழம் இருந்தது'' என்றான். மூன்றாமவன் ''நான் பார்த்த இடத்தில் ஆறடிதான் இருந்தது என்றான்.


மூவரும் யோசித்தனர். மூவருக்கும் பொதுவாக சராசரி உயரத்தைக் கணக்குப் போட்டு முடிவெடுக்க முடிவு செய்தனர். பதினைந்தடி வந்தது. அதை மூன்றால் வகுத்தனர். ஐந்தடி வந்தது.

''குருவே, ஆற்றின் ஆழம் சராசரி ஐந்து அடிதான்'' என்றனர்.

பாவம் குரு. அவர்கள் போட்ட சராசரிக் கணக்கு எப்படி வந்தது என்பதை அவர் கேட்கவில்லை.

முட்டாள் சீடர்களின் அறிவில்லாத செயலால் தன் மூன்று சீடர்களுடன் குரு ஆற்றில் சிக்கி பரலோகம் போனார்!

- சுகாராஜ், மதுரை.



தபால் தலை

பாலாஜி, அப்பா பெயருக்கு வந்திருந்த அந்தக் கல்யாணப் பத்திரிகையை மறுபடி பார்த்தான். அதில் ஒட்டியிருந்த காந்தி ஒரு ரூபாய் ஸ்டாம்பில் தபாலாபீஸ் முத்திரை விழவில்லை. அதை நலுங்காமல் எடுத்து, தனது குறிப்பேட்டில் வைத்துக் கொண்டான். அடுத்த வாரம் 'ஐஸ்கிரீம்' பத்திரிகைக்குக் கதையனுப்ப நன்கு பயன்படும். ஒரு ரூபாய் இலாபம் என்று மகிழ்ந்தான்.

ஆனால், உண்மையில் ஒரு ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டமல்லவா? அந்த ஒரு ரூபாய்க்கு உண்டான பயணத்தை அந்தத் திருமணப்பத்திரிகை செய்து



விட்டு ஒழுங்காக வந்து சேர்ந்து விட்டது. தபாலாபீஸ் முத்திரை இல்லை என்றாலும் அது வாங்கப்பட்ட காசுக்கான காரணத்தை அது முடித்து விட்டது! மறுபடி அதைப் பயன்படுத்த நினைப்பது அரசாங்கத்தை ஏமாற்றுவது மாதிரித்தானே?

மனசாட்சி உறுத்தினாலும் பாலாஜி அதற்கு விடை கொடுத்துவிட்டு தன் போக்குக்கு நடந்து கொண்டான்.

அன்று மாலை பள்ளியிலிருந்து திரும்பி வந்ததும், அம்மா சீனி ஒரு கிலோ, வாங்கிவரச் சொல்லி பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தாள். கடையில் ஒரே கூட்டம். பில் போட்டுக் காசு கொடுக்க வேண்டிய பகுதி தனி. பில்லைக் காட்டி சாமான் வாங்கும் பகுதி தனி. பாலாஜி நெக்கியடித்துப் பத்து ரூபாய் கொடுத்து ஒரு கிலோ சீனிக்கான சீட்டை வாங்கிக் கொண்டு, சாமான் வாங்கும் பகுதியில் கொடுத்தான்.

''தம்பி, சீட்டிலே பணம் கொடுத்ததற்கான 'பெய்டு' முத்திரை போடலே. பணம் கொடுத்து முத்திரை வாங்கிட்டுவா'' என்றார் பணியாளர்.

மறுபடி பில் போடும் பகுதிக்கு வந்து கேட்டான் பாலாஜி, ''தம்பி, பில் நான்தான் போட்டேன். காசைக் கொடுத்திருந்தால் உடனே 'பெய்டு' ஸ்டாம்ப் போட்டிருப்பேனே. நீ காசே தரலே போல இருக்கே?'' என்றார் கடைக்காரர்.

பாலாஜி அதிர்ந்து நின்றான். அவனது நிலையைப் புரிந்து கொண்ட முதலாளி, ''தம்பி நீ காசு கொடுத்தது நிசமானா, இரவு ஒன்பது மணிக்கு மேல் வா. நான் கணக்குப் பார்க்கிறேன். சரியா இருந்தா உனக்கு சீனி தந்து விடுகிறேன்'' என்றார்.

குறிப்பேட்டில் பிய்த்து வைக்கப்பட்டிருந்த தபால் தலையில் இருந்த காந்தித்தாத்தா தன்னைப் பார்த்துச்



சிரிப்பது போல தோன்றியது பாலாஜிக்கு. அந்த ஸ்டாம்பை எடுத்துக் கிழித்துப் போட்டான். மனம் அமைதியடைந்தது.


இரவு ஒன்பது மணிக்கு பாலாஜி மளிகைக் கடைக்குப் போனபோது, ''தம்பி, கணக்குப் பார்த்துட்டேன். சரியா இருக்கு. நீ காசு கொடுத்துட்டே. நான்தான் பெய்டு போடலே. மன்னிச்சுக்கப்பா'' என்று குழைந்தார் கடைக்காரர்.


பாலாஜி இரட்டிப்பு மகிழ்ச்சியுடனும் மன அமைதியுடனும் சீனியை வாங்கிக் கொண்டு திரும்பினான்.

பி.ஆர். பார்த்தசாரதி,
மன்னார்குடி.

அதிசய ஆக்டோபஸ்


ஆழி





கடலில் வசிக்கும் 'ஆக்டோபஸ்' என்னும் 'பேய்க் கணவாய்', மெல்லுடலிகள் என்னும் பிரிவைச் சேர்ந்தது. இதற்கு எலும்பே கிடையாது. இதன் உடல் நுங்கைப் போல் இளக்கமாக இருக்கும். எனவே, இது சிறு இடுக்குகளிலும் உடலைச் சுருக்கிக் கொண்டு நுழைந்து செல்லும். இதற்கு 8 கைகள் [அல்லது கால்கள்] உண்டு. 'ஆக்டோபஸ்' என்றால் 8 கைகளை உடையது என்பது பொருள்.

ஆக்டோபஸ்ஸுக்குத் தலையிலிருந்தே கால்கள் முளைத்திருக்கும். எனவே, இதை 'தலைக்காலி' என்றும் குறிப்பிடுவார்கள்.



ஆக்டோபஸ்ஸின் வாயில் கிளியின் மூக்கு போன்ற உறுப்பு இருக்கிறது. இதன் மூலம் இரையை நசுக்கிப் பிய்த்துத் தின்கிறது.





கைகளில் உள்ள உறிஞ்சிகள்


ஆக்டோபஸ்ஸின் கைகள் ½ மீட்டர் முதல், 5 மீட்டர்கள் நீளம் வரை இருப்பது உண்டு. இந்தக் கைகள் அல்லது கால்களைக் கொண்டு, கடலின் அடியில் 'நடந்து' செல்லும். இந்த 8 கைகளிலும் சிறு சிறு கிண்ணங்கள் போன்ற உறிஞ்சு உறுப்புகள் இரு வரிசைகளாக இருக்கின்றன. இந்தக் கிண்ணங்களால் இரையின் இரத்தத்தை உறிஞ்சிக் கொள்ளுகிறது. இந்தக் கைகளால் மனிதர்களைக்கூட வளைத்துப் பிடித்து, நீருக்குள் இழுத்துச் சென்றுவிடும்!





இதன் இரை நண்டுகளும், சிப்பிகளும், கிளிஞ்சல்களும், மீன்களும். இதற்குப் பசிவந்து விட்டால் — இரை ஒன்றும் கிடைக்காவிட்டால் — தன் கைகளில் ஒன்றைக் கடித்துத் தின்றுவிடும்! ஆனால், அந்தக் கை முன்போலவே வளர்ந்துவிடும்!




கடலின் ஆழமான பகுதிகளிலும், கரை ஓரங்களிலும், பாறைகளின் இடுக்குகளிலும், பவழத்திட்டுக்களின் இடையிலும் ஆக்டோபஸ்கள் வாழ்கின்றன.


ஆக்டோபஸ், தலைக்கு அடியில் உள்ள புனல் போன்ற ஓர் உறுப்பின் மூலம், தண்ணீரைப் பீச்சிப் பின்பக்கமாக நீந்திச் செல்லுவதும் உண்டு.



பச்சோந்தியைப் போலவே ஆக்டோபஸ்ஸும் நிறத்தை அழக்கடி மாற்றிக் கொள்ளும். எதிரியைக் கண்டு விட்டால், அதன் உடல் பயத்தால் வெளுத்து விடும்!


ஆக்டோபஸ், எதிரிகளிடமிருந்து தப்பிக்கக் கருமையான 'செப்பியா' என்னும் மை போன்ற திரவத்தைப் பீச்சிப் பரவ விட்டுவிட்டு, அதிலேயே மறைந்து, வேறு இடத்திற்குப் போய்விடும்! அந்த திரவத்தை முகரும் மற்ற பிராணிகள், மோப்ப உணர்ச்சி பாதிக்கப் பட்டுச் செயலிழந்து விடுகின்றன!




ஆக்டோபஸ்ஸின் உமிழ் நீரிலிருந்து எடுத்த நஞ்சைக் கொண்டு, இரத்தத்தை உறையாமல் தடுக்கும் மருந்து தயாரிக்கிறார்கள்.


பெண் ஆக்டோபஸ், ஒரு பருவத்தில் வெண்மையான சிறு அரிசி அளவுள்ள சுமார் 45,000 முட்டைகளை இடுகிறது. அவற்றை நீண்ட தோரணம் போன்று பாறைகளில் வைக்கிறது. 6 முதல் 8 வாரங்கள் வரை அந்த முட்டைகளின் மேல் நீரைத் தெளித்துக் கொண்டிருக்கிறது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளி வருகிற வரையில் ஆக்டோபஸ் இரை உட்கொள்ளுவதில்லை! பட்டினிதான்!



ஆக்டோபஸ்களில் சுமார் 100 வகைகள் இருக்கின்றன. நம் விரல் நக அளவு முதல் சுமார் 1 மீட்டர் குறுக்களவு வரை உள்ளவை இருக்கின்றன.



ஆக்டோபஸ் குஞ்சு.



முதுகெலும்பு இல்லாத பிராணிகளிலேயே அதிக மூளை வளர்ச்சியுடையது ஆக்டோபஸ் தான் என்று இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டில் கண்டுபிடித்திருக்கிறார்கள்!



இந்த ஆக்டோபஸ்ஸை உணவாகத் தயாரித்து, சீனாவிலும் இத்தாலியிலும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்!



★ மு. மதியழகன், இடைப்பாடி.


தமிழ் நாட்டில் உள்ள காவலூர் வானாராய்ச்சி நிலையம் ஏதாவது சாதனை புரிந்துள்ளதா?



குறிப்பிடத்தக்க சாதனை ஒரு புதிய சிறிய கிரகத்தைக் கண்டுபிடித்து அடையாளம் இட்டிருப்பது. உலக கிரக மையம் (அமெரிக்கா) இந்த கிரகத்தை ஏற்று இதற்கு 4130 எனப் பெயரையும் அளித்துள்ளது!

★ வெ. பூவரசன், சத்தியமங்கலம்.

திமிங்கலம், யானை, டால்பின் ஆகியவற்றில் எதனுடைய பாலில் கொழுப்புச் சக்தி அதிகம்?



டால்பினின் பாலில்தான் கொழுப்புச் சக்தி அதிகம் (460). அடுத்தது திமிங்கலம் (200). 3வதுதான் யானை (190). இது ஒரு லிட்டர் பாலில் காணப்படும் அளவாகும்.

★ மு. முகமது சையது, காயல்.

குத்துச் சண்டை வீரர் முகமது அலியின் இயற்பெயர் வேறு என்று என் நண்பன் கூறுகிறான். நான் மறுத்து பந்தயம் கட்டியிருக்கிறேன். எது சரி?


நீங்கள் தோற்றுவிட்டீர்கள். முகமது அலியின் சொந்தப் பெயர் கேசியஸ் கிளே (CASSIUS CLAY).



★ ம. கமலக்கண்ணன், அறந்தாங்கி.

சந்திரனை விட சூரியன் பல கோடி மடங்கு பெரியது என்கிறார்கள். அப்படியிருக்கும் போது சந்திரனின் புவிசர்ப்பச் சக்தியை விட சூரியனின் புவி ஈர்ப்புச் சக்தி அதிகமாகத் தானே இருக்க

வேண்டும்? அப்படி இல்லாததற்கு என்ன காரணம்?



சந்திரனை விடச் சூரியன் பல கோடி மடங்கு பெரிதாக இருந்தும், அதன் புவி ஈர்ப்புச் சக்தி சந்திரனை விடக் குறைவாக இருப்பதற்குக் காரணம் அது பூமியிலிருந்து நெடுந் தொலைவு விலகியிருப்பதே. தொலைவு புவிஈர்ப்புச் சக்தியைக் குறைத்து விடுகிறது. பூமியும் பிழைத்துக் கொண்டிருக்கிறது!

★ மு. கதிர்வேல், கடயம்.

காப்பிப் பொடியில் சிக்ரி கலக்கிறார்கள் என்று கூறுகிறார்களே. இந்த 'சிக்ரி' எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது? புகையிலையில் இருந்தா?




இல்லை. சூரியகாந்தி இனத்தைச் சேர்ந்த காசினிச் செடியின் வேர்தான் சிக்ரி. இதைத்தான் உலர்த்தி, வறுத்து, அரைத்துக் காப்பிப் பொடியுடன் கலக்கிறார்கள். இது பார்வையைப் பாதிக்கும் என்பது மருத்துவக் கண்டுபிடிப்பு.

★ கு. புண்ணியசாமி, பாளையம் கோட்டை.

ஆபரேஷன் செய்ய அதிக நேரம் எடுத்துக் கொண்டு சாதனை புரிந்து கேஸ் எது?

கின்னஸ் புத்தகத்திலும் இது தெளிவாக இல்லை. உலகப் புகழ்பெற்ற சயா



மிய இரட்டையர்கள் பெஞ்சமின், பேட்ரிக்கைப் பிரிக்க ஓர் ஆபரேஷன் செய்யப்பட்டது. இதைச் செய்வதற்கு முன் ஒரு பொம்மையை வைத்து 'ரிஹர்சல்' ஆபரேஷன் செய்து கொண்டார்கள். மிகச் சிக்கலான உண்மை ஆபரேஷன் 70 நிபுணர்களுடன் 22 மணி நேரம் பதினெட்டு நிமிடங்கள் தொடர்ந்து நடந்தது!

★ மு. நிம்மி, மு. பொம்மி சகோதரிகள், விருதுநகர்.

பாம்புக்கு ஜுரம் வருமா? வைத்தியம் பண்ணுவார்களா? என்ன வைத்தியம்?



பாம்புகளுக்கும் ஜுரம் வரும். ஜுரம் அதிகமானால் ஊசியும் போடுவார்கள்!

★ கு. சம்பந்த மூர்த்தி, கோட்டையூர்.

'கடம்' வாத்தியத்தைப் போல் மண்ணால் ஆன இசைக் கருவி வேறு ஏதாவது இருக்கிறதா?

தண்டோரா போடப் பயன்படும் தமுக்கு என்ற கருவியின் அடிப்பாகம்



மண்ணால் ஆனதே. நம்முடைய 'ம்(மி)ருதங்கம்' என்ற வாத்தியம் இருக்கிறதே, இதுவே புராண காலத்தில் மண்ணால் செய்யப்பட்டு, தோலால் இறுக்கப்பட்டு வந்ததே! இப்பொழுதுதான் பலா மரத்தில் செய்கிறார்கள்.

★ வ. லவங்கி, சிவகாசி.

சிற்பக் கலையில் உலகப் புகழ்பெற்ற பெண் சிற்பிகள் யாராவது இருக்கிறார்களா?



இரண்டாவது உலகப் போரின் நினைவுச் சின்னம் ஒன்று ரஷ்யாவின் ஓல்கா கிராட் என்ற நகரில் உள்ளது. ஒரு வீர மங்கை கையில் வாளை உயர்த்தியிருக்கும் தோற்றமுடைய சிலை இது. உலகப் புகழ்பெற்ற இந்தச் சிலையை உருவாக்கியவர் ஜெனி உச்சிடிக் என்ற ஒரு ரஷ்யப் பெண்.

★ எம். இருதயம், நாகர்கோவில்.

கத்தரிக்கோலை யார் கண்டுபிடித்தார்கள்?



உலகப் புகழ்பெற்ற ஓவியரான லியனார்டோ டாவின்சிதான் கத்தரிக்கோலைக் கண்டுபிடித்தார். ஆனால் அவரால் கண்டுபிடிக்கப்பட்ட கத்தரிக்கோலுக்கு விரல்களை மாட்டிக் கொள்ளும் வளையம் இருக்கவில்லை. பெட்டி மூடிகளில் இருப்பது போன்ற பால வடிவ வளைவுதான் இருந்தது.

★ க. சிந்தாமணி, க. காந்தாமணி, குளித்தலை.


கண்ணகி என்ற பெயர் கொண்ட பாத்திரம் சிலப்பதிகாரத்தைத் தவிர வேறு எதிலேயாவது வருகிறதா?



கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகனைப் பற்றிப் படித்திருக்கிறீர்கள் அல்லவா? மயிலுக்குக் கம்பளிப் போர்வை போர்த்திய அதே பேகன்தான். பேகனுடைய மனைவியின் பெயரும் கூடக் கண்ணகிதான்!

★ வெ. காசி விசுவநாதன், சுவாமி மலை.


'நல்லதங்காள்' கதை எந்தப் புராணத்தில் வருகிறது?



ஏழு குழந்தைகளையும் துன்பம் தாளாது கிணற்றில் தள்ளித் தானும் உயிர்நீத்த நல்லதங்காள் கதைதானே? இது எந்தப் புராணத்திலும் இல்லை. அம்மானைப் பாடலில் வழங்கி வரும் நாடோடிக் கதை.

★ வி. அமலாதிபதி. திருவரங்கம்.


எக்சார்சிஸ்ட் என்ற புகழ்பெற்ற ஆங்கிலச் சினிமாப் படத்தின் கதையை எழுதியவர் யார்?



எல்லா வயதினராலும் விரும்பிப் பார்க்கப்பட்ட இந்தப் பேய்க் கதையை எழுதியவர் வில்லியம் பீட்டர் பிளாட்டி. இவர் முதலில் இதே தலைப்பில் நாவலாக இதை எழுதினார். அதன் அமோக விற்பனையைக் கண்டு படமெடுக்க விரும்பிய வார்னர் பிரதர்ஸ் பட நிறுவனம், திரைக்கதை வசனம், தயாரிப்பு ஆகிய எல்லாப் பொறுப்புகளையும் அவரிடமே தந்தது. படத்தின் வெற்றிக்கு இதுவும் ஓர் காரணம்.

★ ஏ. காளியப்பன், திருத்தணி.

எருமைப் பால் வெண்மையாகவும், பசும் பால் சிறிது மஞ்சளாகவும் இருக்க என்ன காரணம்?



பசும் பாலில் கரோட்டீன் என்ற சத்து உள்ளது. இதுவே பாலுக்கு மஞ்சள் நிறத்தைத் தருகிறது. இது எருமைப் பாலில் இல்லை.


கேள்வி கேட்போர் கவனத்திற்கு

கேள்வி கேட்போர் தங்கள் முழு முகவரியையும் தர வேண்டும். ஏற்கப்படாத கேள்விகளை எக் காரணத்தைக் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது. எனவே தபால் தலைகளை இணைத்து அனுப்ப வேண்டாம். இது குறித்து எந்தக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள இயலாது. ஏற்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போதே கேள்வி கேட்டவர்களுக்கு இது அறிவிக்கப்படும். ஒரு கடிதத்தில் ஒரே ஓர் கேள்வியை மட்டுமே கேட்கலாம்.

கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் : 'கோகுலம்',
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

அறிவியல் போட்டி



இடமிருந்து வலம் :

1) ஊசல் (பெண்டுலம்) என்றதுமே இந்த பைசா நகரத்து விஞ்ஞானியின் பெயர் நினைவுக்கு வரவேண்டும்.

2) சிறுவாகை இருக்கையில் வாத்து முட்டையை அடைகாத்துப் பரபரப்பை ஊட்டிய விஞ்ஞானி!

3) தொலைபேசியைத் தந்த இவர்தான் அலெக்சாண்டர் கிரகாம்.........

4) புவிசர்ப்பு ஆற்றலை அறிவித்த சர் ஐசக்.......................

5) தந்தி இவரது கண்டுபிடிப்பே.

6) வைட்டமின் கண்டுபிடிப்பில் சிறந்த பணியாற்றிய இந்த பிரிட்டிஷ் விஞ்ஞானியின் பெயரால் பம்பாயில் மிகப் பெரிய ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது.

7) கார் என்றதும் ....போர்டின் பெயர்தான் நினைவுக்கு வரும்.

8) இங்கேதான் தமிழ்நாட்டின் அணுமின் நிலையம் உள்ளது.

மேலிருந்து கீழ்...

9) காயம் சீழ்பிடிக்க நுண்ணுயிரிகளே (பாக்டீரியாக்களே) காரணம் என்பதை அறிவித்த ஜோசப்...

10) ரேடியம் என்றதும் இந்த விஞ்ஞானி அம்மையார் பெயர் நினைவுக்கு வரவேண்டுமே!

பெயர் :	....
வயது :	....
முகவரி :	....
	....
	....
	....
பின் கோடு :	....
முடிவு தேதி :	15.9.92


11) அம்மை நோய்க்கு முடிவு கட்டிய விஞ்ஞானி இந்த எட்வர்டு...

12) இவரது ஆராய்ச்சி முடிவுகளே அணுகுண்டு தயாரிக்க உதவின. காந்தியிடத்தில் மதிப்பு மிக்கவர்.

13) கேரளாவில் உள்ள ராக்கெட் ஏவு தளம் இங்குதான் உள்ளது.

14) இரத்த ஓட்டம், நாடித் துடிப்பு பற்றி இவர் கண்டறிந்த உண்மைகள் மருத்துவத்தில் முன்னேற்றங் காண புதிய கதவுகளைத் திறக்க வைத்தன. இவர்தான் வில்லியம்...

15) இந்திய அணு இயல் தந்தை என்று புகழப்படுபவர் அமரர் ஹோமி...





கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

கே. கணேசன், மகிழஞ்சேரி.

? என் தங்கைக்கு வயது 11 ஆகிறது. இரண்டு வருடங்களாகப் பேச்சு வர வில்லை. மீண்டும் பேச்சு வருமா?

! உங்கள் தங்கைக்கு திடீரெனப் பேச்சு தடைபட்டதற்கு மூளை தொடர்பான நோயோ அல்லது நாக்கின் நரம்புக் கோளாறோ இருக்கலாம்! மன அதிர்ச்சி கூட சில சமயங்களில் பேச்சை நிறுத்தி விடும். எதற்கும் நீங்கள் நரம்பியல் நிபுணர் ஒருவரிடம் உங்கள் தங்கை யைப் பரிசோதித்துப் பார்ப்பது நல்லது!

ஏ.வி. இளங்கோ, ஆ. புதூர்.


? காதில் குருமி சேருவது எதனால் டாக்டர்? இதனால் நமக்கு என்ன பயன்?

! காதில் சேரும் அழுக்கை அகற்று வதற்காக வெளிக்காதின் தோலில் ஒரு திரவம் சுரக்கிறது. இது மொத்தமாகக் காதில் திரளும் போது 'குருமி' (Ear-wax) யாகிறது. குருமியை அகற்றும் போது காதிலுள்ள அழுக்கும் சேர்ந்து வெளியே வந்து விடுகிறதல்லவா? இது தான் குருமியால் நமக்குக் கிடைக்கக் கூடிய நன்மை!

எம். ஜி. இராமச்சந்திரன்,சங்கமங்கலம்.

? வயதானவர்களின் தோலில் சுருக்கம் தோன்றக் காரணம் என்ன டாக்டர்?

! வயதானவர்களுக்கு தோலின் நெகிழ்வுத் தன்மை (Elasticity) குறைந்து போவதாலும், தோலுக்கடியிலிருக்கும்



கொழுப்புத் திசு கரைந்து விடுவதாலும் தோலில் சுருக்கங்கள் விழுகின்றன.

இராஜ். சரவண பிரசாந்த்.
எஸ். ஜெயந்தி, காங்கயம்.

? காச நோய் எப்படி உண்டாகிறது?

! 'மைக்கோ பாக்டீரியம் டியூபர்குலோசிஸ்' (Mycobacterium Tuberculosis) எனும் பாக்டீரியா கிருமிகளின் பாதிப்பால் வருவது காசநோய் (TB). இக்கிருமிகள் காசநோய் உள்ளவர்களின் சளியில் காணப்படும். அவர்கள் பலமாக இருமும்போது லட்சக்கணக்கான காச நோய்க் கிருமிகள் சளி மூலம் வெளியேறும். அப்போது அருகிலிருப்பவர்கள் தங்கள் உள் மூச்சு மூலம் இக்கிருமிகளையும் சேர்த்து உள்ளிழுத்துக் கொள்கிறார்கள். இதனால் அவர்களுக்கும் காசநோய் வருகிறது. காசநோய் உள்ளவர்கள் பொது இடங்களில் இருமுவதாலும், தெருக்களில் சளியைத் துப்புவதாலும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதாகக் காச நோய் பரவி விடுகிறது.

நா.யூ. வித்யாலட்சுமி, தியாகராஜபுரம்.

? மருதாணி ஒரு அழகுப் பொருள். சிலருக்கு இது அழகைத் தருகிறது. இன்னும் சிலருக்கு தோலில் கருத்துப் போகிறது. இதற்குக் காரணம் என்ன, டாக்டர்?

! மருதாணி போட்ட இடத்தில் தோல் கருத்துப் போவதற்கு ஒவ்வாமை (Allergy) தான் காரணம். ஒவ்வாமை உள்ளவர்கள் மருதாணி போடுவதைத் தவிர்ப்பது நல்லது!

ஜி. மவுனப்பித்தன், ஆனைமலையன் பட்டி.


? உடற்பயிற்சி செய்தவுடன் தண்ணீர் குடிக்கலாமா, கூடாதா?


! குடிக்கலாம், தம்பி! தயக்கம் வேண்டாம்.

சீ. சிவா, சட்டநாதபுரம்.

? தைராய்டு சுரப்பி அதிகமாக சுரந்தால் உயர்வாக வளர்வோமா, குள்ளமாக இருப்போமா? கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள், டாக்டர் ப்ளீஸ்!

! சிவா தம்பியின் கேள்வியில் சின்னக் குழப்பம்! தைராய்டு சுரப்பியைப் பற்றிக் கேட்கிறாரா? இல்லை பிட்யூட்டரி சுரப்பியைப் பற்றிக் கேட்கிறாரா? ஏனென்றால் தைராய்டு சுரப்பிக்கும் உயரத்திற்கும் தொடர்பில்லை. பிட்யூட்டரி சுரப்பியில் வளர்ச்சி ஹார்மோன் (Growth Hormone) அதிகமாகச் சுரந்தால் உயர்வாக வளர்வோம்! குறைவாகச் சுரந்தால் குள்ளமாக இருப்போம்! தைராய்டு சுரப்பி அதிகமாகச் சுரந்தால் உடல் எடை குறையும்; குறைவாகச் சுரந்தால் உடல் எடை அதிகரிக்கும்! நான் இரண்டு சுரப்பிகளைப் பற்றியும் சொல்லி விட்டேன். தம்பியின் சந்தேகம் தீர்ந்திருந்தால் சந்தோஷப்படுவேன்.




சிரிப்பு...
நம்மைக் கல்லால் அடிக்கும் பாலுவை பழி வாங்கிட்டியா! எப்படி?
பரீட்சைக்குப் போகும் போது குறுக்கே ஓடிட்டேன்!
ஏன் அந்த டாக்டர் தலைதெறிக்க ஓடறாரு!
என் முன் பல்லைப் பிடுங்கிவிடச் சொன்னேன்!
காவேரிப்பட்டணம் சோமசேகர்
என் பிறந்த நாளுக்குப் பரிசா என்ன கொண்டு வந்திங்க?
ஒரு குயர் போஸ்டர் பேப்பர் கொண்டு வந்திருக்கேன்
கே.எஸ். சாந்தமூர்த்தி
விடுமுறைக்கு எந்த ஊருக்கு போனே?
கோழிக்கோடு தான்!
நீ இருக்கிற வீட்ல எலி மருந்து வச்சும் எப்படி தப்பிச்ச?
அது போலி மருந்து ஆச்சே
எஸ். பாண்டியராஜ்
நடராஜ சிவகுமார்

நூறு ரூபாய் இரகசியம்



டாக்டர் பூவண்ணன்

4. தப்பு!

நாகேந்திரனுக்கு ஸ்கூட்டர் ஓட்டத் தெரியும். காரும் ஓட்டத் தெரியும். ஆனால் எதை ஓட்டவும் அவனிடம் லைசென்ஸ் இல்லை. என்றாலும், தான் பிரபலமான ஒரு மில் முதலாளியின் ஒரே மகன் என்னும் காரணத்தால்; கர்வத்தால் ஏதோ ஒரு வாகனத்தை ஓட்டிக் கொண்டு செல்வது நாகனின் குணம். தப்பு என்று தெரிந்தும் ஒன்றைச் செய்வது அவன் குணம். அதிலே அவனுக்கு ஒரு வகை சுகம்.

அன்றும் அது போலவே ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு தடாகம் சாலையில் சென்றவன், பரதனைப் பார்த்து, அவனைக் குழியில் தள்ளிவிட்டு ஸ்கூட்டரில் ஏறிச் சென்றான். வேலாண்டிப் பாளையம் வரை சென்றவன், வண்டியைத் திருப்பி அதே வழியில் திரும்பி வந்து, பரதனைத் தள்ளி விட்ட இடத்தில் நிறுத்தினான். பரதனின் குரல் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டான்.

சாலையில் அந்த இரவு வேளையில் வாகனங்களின் சத்தமே அதிகமாக இருந்தது. ஆட்கள் ஒருசிலரே சென்றனர். வாகனங்கள் செல்லும் சத்தத்தில், அவற்றின் ஹாரன் சத்தத்தில் பரதனின் குரல் கேட்கவில்லை.

நாகன் ஸ்கூட்டரிலேயே அமர்ந்திருந்தான்.

வாகனங்கள் குறைந்து, ஓரளவு அமைதி தோன்றிய சில விநாடிகளில், ''என்னைக் காப்பாத்துங்கோ'' என்ற குரல் இலேசாகக் கேட்டது.

நாகன் முகத்தில் லேசான புன்னகை!

''பரதன் தப்பிர்க்கப் போகலே''

ஸ்கூட்டரிலிருந்து இறங்கி, பரதனைத் தள்ளிய குழியின் அருகே போய் அதன் விளிம்பில் நின்று, கீழே பார்த்தான்.

பரதன் குழிக்குள் நின்று மேல் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஹலோ பிரண்ட்! சௌக்யமா?''

''சௌக்யந்தான். என் உடம்பிலே எங்கேயும் காயம் படலே. என் உள்ளத்திலேயும் காயம் படலே. நாகா, பிரண்ட்டுன்னு கூப்பிட்டே. பின்னே ஏன் என்னைக் குழியிலே தள்ளினே?''

''ஒரு பிரியந்தான்! அறிவினால் ஆகாதது இல்லை! அறிவு ஆஸ்தியைக் கொடுக்கும்! ஆபத்தைத் தடுக்கும்னு சொன்னையே! அது உண்மையான்னு நீயே டெஸ்ட் செய்துக்கறதுக்காக ஒரு சின்ன சான்ஸ்! இப்போது ஆபத்து வந்திருக்கு. அறிவாலே தடுத்துக்கோ.''


பரதன் மௌனமாக நாகனைப் பார்த்தான்.

''என்ன பிரண்ட்! அறிவு இருக்குதா? இல்லேன்னா சொல்லு! நான் தூக்கி விடறேன்''

பரதன் அப்போதும் ஒன்றும் சொல்லவில்லை.

''நான் புறப்படறேன். குட் நைட். சொல்றதா குட்-பை சொல்றதான்னு தெரியலே... நான் இங்கிருந்து என் ஸ்கூட்டருக்குப் போக பத்து செகண்ட் ஆகும். அதுக்குள்ளே உனக்கு அறிவில்லேன்னு நினைச்சா, நாகான்னு குரல் கொடு. உன்னைக் காப்பாத்துறேன். அறிவு இருக்குன்னு நினைச்சா, ஆபத்தைத் தடுத்துக்கோ.''

நாகன் திரும்பி நடந்தான்.



"பிள்ளையாரே எப்படியாவது... பாஸ் செய்யணும்... பத்து தேங்கா உடைக்கறேன்...."

"முதலில் போன வருஷம் பாஸ் செய்ய வேண்டிண்ட தேங்காயை உடைடா...!"

- ராஜிராதா

அடி மேல் அடி வைத்து நிதானமாக நடந்தான். 'ஒண்ணு, ரெண்டு மூணு' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு நடந்தான். எந்த நிமிடமும், "நாகா என்னைக் காப்பாத்து" என்னும் பயக்குரல் - அபயக்குரல் கேட்கும் என்று நினைத்தபடி, எதிர்பார்த்தபடி நடந்தான்.

'எட்டு, ஒன்பது, பத்து'

நாகன் ஸ்கூட்டரை அடைந்து விட்டான். ஆனால் புறப்படவில்லை. மேலும் சில நொடிகள் காத்திருந்தான்.

பரதனின் குரல் கேட்கவில்லை.

"திமிர் பிடிச்ச பயல்! ராத்திரி பூரா இந்தக் குழியிலேயே கிடக்கட்டும். குழி யிலே பூரான், பாம்பு, தேளு - எதுவுமே இல்லாமலா போகும்? ஏதாவது கடிக்க துடிக்கட்டும்."

நாகன் சாபம் கொடுத்துக் கொண்டே ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தான்.

ஸ்கூட்டர் சீறிக் கொண்டு ஆர். எஸ். புரத்தை நோக்கிப் பாய்ந்தது. அங்கே தான் அவனது அரண்மனை போன்ற பங்களா இருந்தது.

சுவரிலிருந்த சொகுசுக் கடிகாரம் இசை ஒலி எழுப்பி மணியை அறிவித்தது.

படுக்கையில் தூக்கம் வராமல் புரண்டுக் கொண்டிருந்த நாகன் அந்த இசை ஒலியை எண்ணிக் கொண்டே வந்தான். எண்ணம் வேறெங்கோ இருந்ததால் கணக்குத் தவறி விட்டது.

மணி என்ன?

பத்தா?

பதினொன்றா?

நாகன் எழுந்து விளக்கைப் போட்டுப் பார்த்தான்.

மணி பன்னிரண்டு!

"ஓ, காட்! பன்னெண்டு மணியா? நடுராத்திரியா? இன்னும் தூக்கம் வர மாட்டேங்குதே?"

நாகன் படுக்கையில் விழுந்து கண்ணை இறுக மூடிக் கொண்டான். தூக்கம் வரவழைப்பதற்காக அவன் எங்கோ படித்த ஒரு யோசனையைப் பின்பற்ற முயன்றான். ஒன்று, இரண்டு' என்று எண்ணத் தொடங்கினான்.

"பத்து!

பதினொன்று!

பன்னெண்டு!"

நாகன் அதற்கு மேலே எண்ணிக்கையைத் தொடராமல் சட்டென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

"பன்னெண்டாயிடுச்சு. பரதன் குழியிலேயே அழுதுகிட்டிருப்பானோ? ஊஹூம்! அவன் அழ மாட்டான். தேளே கொட்டினாக் கூட அந்தத் துன்பத்தை தாங்கிக்குவானே தவிர, அவன் அழற டைப் இல்லே... தேளோ, பாம்போ கடிக்க அவனுக்கு ஏதாவது ஏற்பட்டா?"

நாகனின் மனம் நடுங்கியது.

அதே நேரத்தில் ஒரு ஜன்னல் கதவு, கொக்கி போடாததால் சட்டென்று சன்னலில் மோதும் சப்தம் கேட்டது.

நாகன் எழுந்து சன்னலருகே வந்தான்.

வெளியே வேகமான காற்று. தோட்டத்து மரங்களும் செடிகளும் தலை விரித்துப் பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தன. புழுதி கிளம்பி சன்னல் வழியே நுழைந்து அவன் முகத்தில் கரி பூசுவது போல அப்பியது. சடசடவென்று பெரும் துளிகளாக மழை இறங்க, மண்வாசனை திடீரென மேலேயிருந்து அவன் மூக்கில் நுழைந்தது.

சில நொடிகளில் மழை வலுக்க, மழைத் தாரைகள் சவுக்காக சன்னலிலும் சுவரிலும் சரக் சரக்கென்று தாக்கின.

நாகன் சன்னலை மூடி விட்டுப் படுக்கைக்குப் பின்வாங்கினான்.

''ஆடிக் குழியில் இந்த மழையும் சேர்ந்து பரதனை அதிகமாக வாட்டுமோ?''

பரதனைத் துன்புறுத்தி அதிலே சுகம் காண நினைத்த தன் மனம் அவனுக்காக இரங்குவதை எண்ணி வியப்படைந்தான் நாகன்.

''உடனே போய் பரதனைக் காப்பாற்றி விடலாமா?''

நினைத்த நாகன் மாடியிலிருந்து மடமடவெனப் படிகளில் இறங்கத் தொடங்கினான்.

நாகன் வீட்டில் கார்கள் பல உண்டு. டிரைவர்களும் பலர் இருந்தனர். அவசரத் தேவைக்காக இரவில் யாராவது ஒரு டிரைவர் பங்களாவில் படுத்துக் கொள்வது வழக்கம். அந்த டிரைவரை எழுப்பிக் காரிலே போய்ப் பரதனைக் காப்பாற்றி விட வேண்டும்.

படியிறங்கிக் கீழே வந்த நாகன் திடுக்கிட்டு நின்றான்.

ஹாலில் அவனுடைய தந்தை காளியப்பா உட்கார்ந்து ஏதோ ஒரு கணக்குப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

நாகன் வந்த சப்தம் கேட்டு, நிமிர்ந்து பார்த்த அவர், ''என்ன கண்ணா?'' என்று பாசத்தோடு கேட்டார்.

''காத்து மழை சத்தத்திலே விழிச்சுக்கிட்டேன். தண்ணி சாப்பிடலாம்னு வந்தேன். ரூம்லே தண்ணி வைக்க மறந்துட்டாங்க.''

நாகன் பொய் சொன்னான்.

காளியப்பா ''இதோ இங்கே தண்ணியிருக்கு குடி'' என்று தன்முன் இருந்த டீபாயைக் காட்டினார். அங்கே ஒரு வாட்டர் ஜக்கும் டம்ளரும் இருந்தன.

நாகன் தண்ணீர் குடித்து விட்டு மாடிக்குப் போனான். ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.



லேசான தூறல்.

'பலத்த மழை பெய்ய வில்லை' என்று ஆறுதல் அடைந்து படுக்கையில் விழுந் தான். அவன் தூங்குவதற்கு வெகு நேரமானது.

மறுநாள்!

பள்ளிக்கூடத்து வாட்ச்மேன், வகுப்பறைகள் திறப்பதற்கு முன்னரே காரில் வந்து இறங்கிய நாகனைப் பார்த்து வியப்படைந் தான்.

''வாட்ச்மேன், பரதன் வந் துட்டானா?''

''யாருங்க? குள்ளமா அகத் தியன் மாதிரி ஒருவன் புதுசா சேர்ந்திருக்கானே அவனுங் களா?''

நாகன் தலையசைத்தான்.

''வரலேங்க. பரதன் மட்டு மா, இன்னும் யாருமே வர லேங்க. இன்னைக்கு நீங்கதாங்க முதல்லே வந்திருக்கறீங்க.''

நாகன் அப்போதுதான் அந்தப் பெரிய பள்ளிக்கூடத்தின் அமைதியை உணர்ந்தான். வகுப் பறைக் கதவுகள் மூடியிருப் பதைக் கண்டான்.


அதனால் வாயிலின் அருகே இருந்த ஒரு வேப்பமரத்தை நோக்கிச் சென்றான். அதன் கீழே இருந்த சிமெண்டு பெஞ் சில் உட்கார்ந்து வேலைக்குப் போன தாயை எதிர்பார்த்து வீட்டிலே காத்திருக்கும் எல்.கே. ஜி. குழந்தையைப் போலப் பரதனை எதிர் பார்த்து, வாயி லையே வைத்த விழிவாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

நிமிடங்கள் மணிகளாக நகர்ந்தன.

மாணவர்கள் பள்ளிக்கூடத் துக்கு வரத் தொடங்கினர்.

அந்தோணிசாமி வாயிலே நுழைந்தான். நுழைந்தது மே தூரத்திலிருந்து நாகன் தன்னை நோக்கி ஓடி வருவதைப் பார்த் தான். அவனை வரவேற்கும்





முகத்தான் தானும் வேகமாக நடந்தான்.

ஆனால், ஆனால்...

நாகன் அந்தோணி சாமியைக் கடந்து ஓடினான்.

அந்தோணி திரும்பிப் பார்த்தான்.

சிறிது தூரத்தில் ஞானசம்பந்தம் வந்து கொண்டிருந்தான். நாகன் அவன் முன்னே நின்று, ''ஞானம், பரதனைப் பாத்தாயா?'' என்று கேட்டான்.

''இல்லையே! என்ன விஷயம், பரதனைத் தேடுறே? பொழுதுபோகலைன்னு அவனைக் கேலி செய்யவா?''

ஞானத்தின் பதில் நாகனைக் குத்தியது.

அதற்குள் அந்தோணி அவர்கள் இருக்கும் இடத்துக்கு வந்து விட்டான். அவன், ''நாகா, அதோ அந்தக் குள்ளன் வரான்'' என்று பின்னே கட்டிக்காட்டினான்.


''ஷட்டப்! அவனைக் குள்ளன் கின்னு சொல்லாதே.''

நாகன் தன்னைக் கண்டிப்பதைக் கண்டு திடுக்கிட்டான் அந்தோணி.

"எதுக்குடா வாயைக் கட்டிக்கிட்டு தண்ணி அடிக்கிறே?"

"பைப்ல மணல் வருது. வாய்ல துணியைக் கட்டிக்கிட்டு தண்ணி அடின்னு அப்பாதான்டா சொன்னார்!"

– சீர்காழி வி. ரேவதி



அந்தோணியின் குத்தல் பேச்சையும் நாகனின் கோபப் பேச்சையும் கேட்டபடி அங்கே பரதன் வந்து சேர்ந்தான்.

''நாகா, அந்தோணியை ஏன் திட்டறே?'' என்றபடி தன் கால் சட்டையில் கை விட்டு ஒரு சிறிய புத்தகத்தை எடுத்து அந்தோணியிடம் காட்டிய பரதன், ''இது என்ன தெரியுமா?'' என்று கேட்டான்.

அந்தோணி அதைப் பார்த்து, ''குறள்'' என்றான்.

அது திருக்குறள்! தீப்பெட்டி சைஸில் இருக்கும் திருக்குறள்!

''கரெக்ட். இது குறள். குறள்னு சொன்னா குள்ளம் - குள்ளன்னு அர்த்தம். ஒரு மனிதனின் உயரம் சுமார் ஆறடி. ஒரு பாட்டின் உயரம் நாலடி. நாப்பதடி - நானூறடி! அதுக்கு எல்லை இல்லே. பாட்டு வகையிலே ரொம்பவும் மினி சைஸ் குறள்தான். ஒன்னே முக்காலடி. அதிலே வள்ளுவர் கூறிய பொருள் நிறைவானது. திருக்குறள் பெரிய அளவு புத்தகம் உண்டு. இது குட்டி சைஸ்! ஆனால் முழுமையானது! குறையற்றது! 1330 பாடலும் முழுசா இருக்கு. நானும் குறள் பாட்டுப் போல நிறைவானவன். இந்தக் குறள் எடிஷன் போல கம்ளீட் அண்ட் அன் அப்ரிட்ஜ்டு! நான் ஆறு அறிவுகளும் பெற்ற முழு மனிதன்.''

பரதனின் விளக்கத்தை ஞானம் ரசித்தான். ஆனால் நாகன் அதைக் கவனிக்கவில்லை. அதில் கருத்துச் செலுத்த விரும்பவில்லை. அவன், ''பரதா உனக்கு ஒன்னும் ஆகலையே? குழியிலேருந்து எப்போ தப்பிச்சே? எப்படித் தப்பிச்சே?'' என்று பதட்டத்துடன் கேட்டான்.

''குழிலேயிருந்து எப்ப தப்பிச்சானா? பரதன் எப்ப குழியிலே விழுந்தான்? எப்படிக் குழியிலே விழுந்தான்? எங்கே குழியிலே விழுந்தான்?''


ஞானத்தின் பதட்டம் அதிகமாக இருந்தது.

ஆழக் குழியிலிருந்து அடர்ந்த இருளில் பரதன் எப்படித் தப்பினான்?

அதை அவனே சொல்லத் தொடங்கினான்.

(தொடரும்)

மாடியை அடைய எத்தனை படிகள் ஏற வேண்டும்?



விடை : 27 படிகள்



குற்றாலம்

விண்ணும், நெடிய மலைத்தொடரின்
விளிம்பும் தழுவும் குற்றாலம்!
வண்ணத் தமிழின், அகத்தியரின்
வசந்த நிலையம் குற்றாலம்!

உண்ணற் கினிய கனிமரங்கள்
உயர்ந்தே தெரியும் குற்றாலம்!
திண்ணை, தெருவில் குரங்குகளும்
திரண்டே திரியும் குற்றாலம்!


பொன்னின் துகளாய் மழைத்துளிகள்
புவியில் உதிரும் குற்றாலம்!
தென்றல் உடனே துவட்டி விடல்
தினமும் நிகழும் குற்றாலம்!

வெண்ணெய் வழுகி விழுவதுபோல்
விளங்கும் அருவிக் குற்றாலம்!
மண்ணோர் மதமும், மொழி, நிறமும்
மறந்தே குழுமும் குற்றாலம்!

எண்ணற் கரிய மூலிகைகள்
இருக்கும் மலையாம் குற்றாலம்!
அண்டும் கொடிய மனநோயை
அகற்றும் தலைமரம் குற்றாலம்!


இன்னும் பலவாய்ப் பெருமையுடன்
இலங்கும் அறிவாய் குற்றலாம்
உன்னைக் கனிவாய் அழைக்கிறது
ஒருமுறை வருவாய் குற்றலாம்!

- தளவை : இளங்குமரன்



அன்னதான நாமதேவர்


கதை : குமரன்
சித்திரம் : லலிதா






சௌகாரிடம் பணம் பெற்று வந்து மகனிடம் தந்தாள்...
நாமதேவா! வட்டியுடன் திருப்பித் தருவதாய் வாக்களித்திருக்கிறேன். நன்கு யோசித்து, நல்ல வியாபாரம் செய்!
நாமதேவர் யோசித்தார்...
யாருக்கும் தீங்கிழைக்காத நல்ல வியாபாரமாயும், இருக்கணும்; நிறைய சம்பாதிக்கவும் செய்யணும்... உம்... என்ன அது?
நாமதேவர் சில வேதியர்களைச் சந்தித்த பின்...
குற்றமில்லாத வியாபாரமா? நிறையச்சம்பாதிக்கணுமா? ஓ! அதுக்கு வழியிருக்கே!
சொல்லுங்கள்!
கங்கைக் கரையில் ஒரு மடம் கட்டி, யாத்திரிகளுக்கு அன்ன தானம் பண்ணு! நிறையப் (புண்ணியம்) சம்பாதிக்கலாம்! தீதில்லாத வியாபாரம்!
அப்பாவியான நாமதேவர் அதை நம்பி...
ஆ... மடம் எத்தனை அழகாக அமைந்து விட்டது! பாக்கியுள்ள அறுநூறு வராகனில் நிறைய அன்னதானம் பண்ணலாம்!


மறு நாள்...
சமையல் ஆச்சா? சாதுக்கள் பசியோடு காத்திருக்கிறார்கள்...
இதோ தயார்!
இன்று நூறுபேர் சாப்பிட்டிருக்கிறார்கள். நல்ல லாபம் வரும்!
பண்டரிபுரத்தில்...
எல்லாரும் கூட்டமா எங்கே போறீங்க?
நாமதேவர் அன்னதானம் பண்ணி, தட்சிணையும் தருகிறாராம். அதை விடுவானேன்!
சௌகார் வியப்படைந்து...
என்னது! என்னிடம் ஆயிரம் வராகன் கடன் பெற்றுப் போனானே! அதற்குள் அன்னதானம் பண்ணுமளவுக்கு அதை விருத்தி பண்ணி விட்டானா, அவள் மகன்!
சௌகார் கங்கைக் கரைக்கு வந்தார்...
ஐயோ! என் பணத்தை வியாபாரத்தில் முதலீடு செய்யாமல், மடம் கட்டி, அன்னதானம் பண்ணுகிறானே!


நாமதேவா, என் பணத்தை இப்படி வீணடிக்கிறாயே!
நன்றாகச் சம்பாதிக்கிறேன்! கவலைப் படாதீங்க!
நீ புண்ணியத்தைத் தவிர வேறு ஒன்றும் சம்பாதிக்க மாட்டாய்! என் பணத்தைத் திருப்பிக் கொடு!
முதலீடான பணத்தை என்னால் இப்போ எப்படித் திருப்ப முடியும்? நான் சம்பாதிப்பது முழுதும் உங்களுக்குத்தான்...
சாதுக்களே! உங்களுக்கு அன்ன தானம் செய்வது நானல்ல; இந்த சௌகார்தான்! புண்ணிய லாபம் முழுதும் இவரையே சேர அருள் புரியுங்கள்!
அப்படியா! வாழ்க! வாங்க சௌகார்! நீர் வாழ்த்துக் கொடுங்க! புண்ணியம் எல்லாம் உங்களையே சேரும்!




சௌகார் கலங்கினார்...
காசு செலவாகுமே என்று என் தாய் தந்தையருக்கு சிராத்தம் கூடச் செய்ததில்லை! தரும காரியம் எதுவும் செய்ததில்லை...
வேதியர், யாத்திரிகர்...
ஐயா... பசியோடு இருக்கோம்; சீக்கிரம் நீர் வார்த்துக் கொடுங்க!
உம்... என் பணமெல்லாம் செலவாகிறது...!
நீங்களைக் அசுசி நீர் வார்க்கிறேன். இந்தப் புண்ணியமெல்லாம் நாமதேவனையே சேரட்டும். எனக்கு வேண்டாம்...
யாத்திரிகர் சென்றபின் சௌகார் கோபமாக...
இதோ பார் நாமதேவா! என் பணத்தைத் திருப்பித் தந்து விடு. இல்லாவிட்டால் என் இதயம் வெடித்து உன் எதிரேயே மரணம் தான்...!!
என்னைக் கொன்ற பழி உன்னையே சேரட்டும்.
இறைவா! இப்படிக் கடன் பட்டுப் போனேனே! இவருக்கு என்ன பதில் கூறுவேன்!



அப்போது ஒரு குழந்தை தோன்றி...
என்னுடன் வா!
மடத்தை ஒட்டி ஓடிய கங்கைக் கரைக்கு நாமதேவரை அழைத்துச் சென்று...
சௌகார் இங்கே நதியில் மூழ்கினால் அவருக்குப் பணம் கிடைக்கும்!
குழந்தை மறைந்தது...
என்ன ஆச்சர்யம்! எம்பிரான் தான் குழந்தை ரூபத்தில் வந்திருக்க வேண்டும்!
நாமதேவர் சௌகாரை வேண்ட...
நதியில் மூழ்கி என்னைச் சாகச் சொல்கிறாயா?
இல்லை... கடன் தீரும் என்ற நம்பிக்கை!
பணத்துக்கு ஆசைப்பட்ட சௌகார்...
சரி... இறங்குகிறேன்...



நதியின் ஆழத்தில் ஒரு பிலத்துவாரம்...
இதன் வழி போவோமா?
பாதாள உலகில்...
யார் இது! என்ன சிம்மாசனத்தில் ஒரு முஸ்லிம் மன்னர்! நம்மைத் தண்டிப்பாரோ! எல்லாம மாயா ஜாலமாயிருக்கே!
பயந்து போன சௌகார்...
நாமதேவா! காப்பாற்று!
சௌகார் காதில் நாமதேவர் குரல் ஒலித்தது...
அஞ்சாதே! அவர் பெருமாள் தான்! விழிகளை மூடி அவரைப் பிரார்த்தனை செய்!
சௌகார் அவ்வாறே செய்தார். மறுபடி இமை திறந்த போது...
அட, பண்டரிபுரத்து சந்திர பாகை நதியல்லவா இது!



வீடு சென்றடைந்தார் சௌகார். ... மனைவி...
என்ன கடனை வசூலிச்சீங்களா?
உம்... கங்கையில் மூழ்கி சந்திர பாகையில் எழுந்தேன்.
என்ன சொல்றீங்க? ஒண்ணும் புரியலையே!
நாமதேவர் பெரிய மகான்!
சரி, சரி, இதென்ன வஸ்திரத்தில் முடிச்சு...?
தெரியலையே! அவிழ்த்துப் பார்ப்போம்!
அட, ஒரே ஒரு வராகன்!
உம்... என் விதியின் அளவாகப் பொன் கிடைத்தது. நான் திருந்தினேன். நாமதேவரே என் குரு.
பண்டரிபுரம் திரும்பிய நாமதேவர்.
பெருமானே! என் பொருட்டு சிறுமியாகவும், சௌகாரைத் திருத்த செல்வம் மன்னராகவும் தோன்றி, எங்களைக் காத்தீரோ! சரணம்! சரணம்!



முத்துப் பந்து

போர்னியோ நாட்டுக் கதை
தமிழில்: தம்பி சீனிவாசன்

கினாபாலூ என்ற மலை மிகவும் செங்குத்தான பல கரடு முரடான உச்சி முகடுகள் நிறைந்த மலை. அதன் உச்சியில் மிகவும் பயங்கரமான ஒரு யாளி இருந்தது. சிங்கம் போன்ற தலையும் நீண்ட நாக்கும், மலைப்பாம்பு போன்ற உடலும் கொண்ட அந்த யாளியைப் பற்றித் தூர தூர நாடுகளுக்கெல்லாம் தெரியும். அது இரவு பகல் எந்த நேரமும் ஒரு பந்தை உருட்டி உருட்டி ஆடிக் கொண்டிருக்கும். அந்தப் பந்து வெறும் சாதாரணப் பந்து அல்ல. நம்ப முடியாத அளவு பெரிதான வெண் முத்து அது! உலகத்தின் செல்வங்களில் மிக உயர்ந்த செல்வம் அந்த முத்து. அதன் மதிப்பு யாருக்குத் தெரியும்! பயங்கர யாளி பிரபலமான அளவுக்கு அந்த விலை மதிப்பில்லாத முத்துப் பந்தும் பிரபலமாகியிருந்தது. முத்துப் பந்துக்கு ஆசைப்படாதவர்களும் இருப்பார்களா? எல்லோருக்கும் அதை அடைய அளவில்லாத ஆசை.

ஆனால் அதை வைத்துக் கொண்டு சதா சர்வ காலமும் விளையாடும்

யாளியின் பயங்கரமான உருவத்தை எண்ணியதும் அந்த ஆசை ஓடிப் போய் விடும்!

''அந்த அற்புதமான விலைமதிப்பே இல்லாத முத்துப் பந்து இருக்க வேண்டிய இடம் நமது அரண்மனையல்லவா! எப்படியாவது ராட்சச யாளியைக் கொன்று அதனிடமிருந்து முத்துப் பந்தை அபகரித்து வாருங்கள்!'' என்று ஆசையை அடக்க முடியாது கட்டளை விட்டார் சீன மாமன்னர்.

சீன மாமன்னருக்கு இரண்டு ராஜ குமாரர்கள். பெரியவன் வீ. பிங், சிறியவன் வீ-சன். இருவரையும் நூறு வீரர்களுடன் பன்னிரண்டு பெரிய கப்பல்களில் அனுப்பி வைத்தார் சீன மாமன்னர்.

கிளாபாலூ மலையடிவாரத்தை அடையும்போதே எல்லோருக்கும் என்பாடு உன்பாடு என்று ஆகி விட்டது. பயணம் அத்தனை கடுமையாக இருந்தது. ஏற வேண்டிய மலை உச்சியோ மேகத்தைக் கிழித்துக் கொண்டு உயரமாக நின்றது! மலை ஏறுவதோ, ராட்சச யாளியைப் பிடிப்பதோ, பந்தைக் கவர்வதோ மலைப்பாக இருந்தது. வீரர்கள் தவித்தார்கள். அரசரின் கட்டளையை மீற முடியுமா? சிலர் துணிந்து அந்தக் கரடுமுரடான மலையில் ஏறினர். யாளி வெகுண்டு சீறியது. அவ்வளவுதான். அத்தனை பேரும் கருகி இறந்தனர்!

''முத்துப் பந்தைக் கவர இது சரியான வழி அல்ல. தந்திரம் செய்தே காரியத்தை முடிக்க வேண்டும்'' என்றான் இளையராஜகுமாரன் வீ-சன். அவன் தீவிரமாக யோசித்தான். முத்துப் பந்தைப் போலவே போலி முத்து உருண்டை ஒன்றை மலைக் கல்லிலே செய்தான். ஓர் ஆளை மட்டும் தாங்கும் வலுவுடைய காற்றாடி ஒன்றையும் தயாரித்தான்.

எப்போதும் பந்து ஆடிக் கொண்டிருக்கும் அந்த அசுர மிருகத்துக்கும் பசி ஏற்படும் அல்லவா? அது எப்போது உணவு தேடப் போகிறது என்று தினமும் மறைந்திருந்து கவனித்தான் இளைய ராஜகுமாரன். எப்போது வெளியே போகிறது, எப்போது திரும்பி வருகிறது என்பதைக் கவனித்த பிறகு தனது ஆட்களை அழைத்து என்ன என்ன செய்ய வேண்டும் என்று வரிசையாகக் கட்டளையிட்டுக் கீழே அனுப்பினான். திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தான்.

அசுர யாளி உணவு தேடி வெளியேறியதும், விடுவிடுவென்று அதன் இருப்பிடம் போய் போலி முத்துப் பந்தை அங்கே வைத்து விட்டு, நல்ல முத்துப் பந்தைக் கையில் எடுத்துக் கொண்டான். உச்சி முகட்டுக்குப் போய், காற்றாடியில் தன்னைப் பிணைத்துக் கொண்டு, கயிற்றைச் சுண்டி இழுத்து கீழே உள்ள வீரர்களுக்கு சமிக்ஞை கொடுத்தான்.


அந்த சமிக்ஞைக்குக் காத்திருந்த வீரர்கள் காற்றாடியைப் பறக்க விட்டு மெல்ல மெல்ல நகர்த்தினார்கள்; கடலோரம் போய்க் கீழே இழுத்தார்கள். ராஜகுமாரன் முத்துப் பந்தை கவனமாக அணைத்தபடி காற்றாடியுடன் இறங்கினான். அவசர அவசரமாக எல்லாரும் படகுகளில் ஏறி விரைந்தார்கள்.

மலை உச்சியில் வழக்கப்படி உணவை முடித்துக் கொண்ட யாளி திரும்பி வந்து முத்துப் பந்தை உருட்டி விளையாட ஆரம்பித்தது. ஆனால்

''பன்றியெல்லாம் உண்ணாவிரதம் இருக்கா! ஏன்?''

''ஊருக்கு ஒரு 'கூவம் நதி' அமைக்க வேண்டுமாம்!''

– கே. சோமசேகர்.





பந்தின் ஒளியிலும் உருளும் வேகத்திலும் அதன் எடையிலும் ஏதோ வித்தியாசம் இருப்பதை அது உணர்ந்தது. கவனமாகச் சோதித்துப் பார்த்தது. சற்று நேரம் கழித்தே தனது அபூர்வமான முத்துப் பந்து களவாடப்பட்டு விட்டது. தன் கையில் உள்ளது அதைப் போன்ற ஒரு போலி என்பது அதற்குத் தெரிந்தது.

மலை முகட்டில் இருந்து கீழே உற்றுப் பார்த்தது.

கடலிலே தூரத்தில் ஊர்ந்து செல்லும் படகுகள் அதன் கூரிய கண்ணுக்குத் தெரிந்தன. ஓர் ஊகத்தில் தனது முத்துப் பந்தைத் திருடியவன் முத்துடன் அந்தப் படகிலேதான் போகிறான் என்று எண்ணிய யாளி உடனே செயல்பட்டது.

மடமடவென்று மலையுச்சியிலிருந்து தரையிலே ஊர்ந்து, கடலிலே தாவியது. நீந்தியும் தாவியும் ஓடியும் பாய்ந்தோடி, படகை எட்டி விட்டது யாளி!

வீரர்கள் பயந்து விட்டனர். மறுபடியும் இளைய ராஜகுமாரன் எல்லோருக்கும் அபயம் சொன்னான். ''தீ மூட்டுங்கள்'' என்றான். புகழ்பெற்ற சீன பீரங்கி குண்டுகளைப் பழுக்கக் காய்ச்சி, பீரங்கியில் வைத்து யாளியை நோக்கி எறிந்தான்.

பளபளவென்று ஒரு பந்து பாய்ந்து வரக் கண்ட யாளி அதுவே தனது முத்துப் பந்து என்று எண்ணி விட்டது! வாயை 'ஆ'என்று திறந்து ஒரே விழுங்காக அதை விழுங்கி விட்டது! பழுக்கக் காய்ச்சிய பீரங்கிக் குண்டல்லவா? யாளியை அப்படியே அழித்து விட்டது. கடலிலே மூழ்கி இறந்தது அசுர யாளி.

பீ-பிங், வீ-சன் இருவரும் தங்கள் தந்தையார் சீன மாமன்னரிடம் முத்துப் பந்தைச் சேர்த்து, பணிவுடன் வணங்கினர். அன்றே தனது அரண்மனையில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார் மாமன்னர். மந்திரி பிரதானிகளும் மேட்டுக்குடி பிரபுக்களும் கூடிய அந்த சபையிலே மூத்த ராஜகுமாரன் எவ்வளவு கஷ்டப்பட்டு கிளாபாலூ மலைக்குப் போனோம், எவ்வளவு பாடுபட்டுப்



முத்துப் பந்தைக் கவர்ந்தோம், எவ்வளவு சாகசமாக அசுர யாளியைக் கொன்றோம் - என்றெல்லாம் பெருமை பொங்கக் கூறினான்.

ஆனால் பேச்சின் நடுவே, தம்பி வீ-சன் தந்த யோசனையால்தான் முத்துப் பந்தை அடைய முடிந்தது. அவன் சாகசத்தால்தான் யாளியை ஏமாற்ற முடிந்தது; அவனது வீரச் செயலால்தான் அதைக் கொன்று போட முடிந்தது என்று சொல்லவில்லை. தம்பியின் பெயரைக் கூடக் குறிப்பிடவில்லை! எல்லாவற்றையும் தானே செய்ததாகப் பெருமையடித்துக் கொண்டான்.


தம்பிக்கு முகம் வாடி விட்டது. ஆனாலும் குறுக்கிட்டு ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தான். எங்கும் கோலாகலமாக இருக்க, எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்க சிறியவன் மட்டும் உற்சாகமில்லாதிருப்பதைக் கவனித்தார் மாமன்னர். ஆனாலும் ஒன்றும் கேட்கவில்லை.

சபையோர் பெரியவனைப் பாராட்டினார்கள்.

இத்தனை ஆண்டுகளாகப் பாசத்துடன் பழகிய அண்ணன், தன் உயிரைப் பணயம் வைத்து முடித்த அரிய செயலை வெளியிடாது இவ்வளவு சுயநலத்துடன் நடந்து கொள்கிறானே என்று இளையவன் பொருமினான். ஆனாலும் ''என்ன நேர்ந்தாலும் அண்ணனுடன் சண்டையிடலாகாது'' என்று மனதைத் தேற்றிக் கொண்டு மௌனமாகவே இருந்தான்.


சபையிலே மாமன்னர் அறிவித்தார் ''இவ்வளவு சூரத்தனத்துடன் முத்துப் பந்தை நமது நாட்டுக்குக் கொண்டு வந்த மூத்த ராஜகுமாரன் வீ-பிங் நமது பாராட்டைப் பெறுகிறான். பயங்கர யாளியைக் கொன்று இத்தனை மதிப்புள்ள பொருளை நமக்குத் தந்தவனுக்கு நாம் என்ன பரிசு அளிப்பது! இந்த ஒப்புயர்வு இல்லாத முத்துப் பந்தையே அவனுக்குப் பரிசாகத் தந்து விடுகிறேன்'' என்று அறிவித்து விட்டார்.

விருந்தெல்லாம் முடிந்தது. அதற்குப் பிறகு இளைய ராஜகுமாரனைத் தனியே சந்தித்த மாமன்னர் அவன்




''புலிக்கு முன்னாலே பயமில்லாம திரியறியே! காளையாரே....?''

''புலி பசித்தாலும் "Bull" ஐத் திங்காதாமே அதான்!''



''நரியாரே! என் பெயரை அசிங்கம்ன்னு சொல்லிட்டிருந்தாயாமே!''

''அரசே, உங்க தந்தை பெயர் ''அரிமா''ன்னு நீங்களே சொல்லியிருக்கீங்க. அதான் அ ங்கற உங்க இனிஷியலோட சேர்த்து பெயரைச் சொன்னேன்.



''என்னடா வாய் சிவந்திருக்கு இந்த வயசிலேயே வெற்றிலைப் போட ஆரம்பிச்சுட்டியா....?''

''இல்லேம்மா....! மருதாணியைத் தின்னுட்டேன்!''

தோளைத் தொட்டார். ''பையா! உன் மனத்தில் ஏதோ இருக்கு. அதை என்னிடம் சொல்லா விட்டால் பரவாயில்லை. ஆனால் ஒன்று. இதோ பார். இந்த முத்துப் பந்து போன்ற பொருள்கள் வரும், போகும். ஆனால் அண்ணன் தம்பி என்ற பாசம் எல்லாப் பொருள்களுக்கும் மேலானது. அதற்கு ஈடாக உலகத்தில் எதுவுமே இல்லை. இதை மறந்து விடாதே. உனக்கும் ஒரு முத்துப் பந்து தருகிறேன். அது அசல் இது நகல்'' என்று சொல்லி ஒரு போலி முத்துப் பந்தை அவனுக்கு வழங்கினார்.

நாளாக ஆக இளையவன் முற்றிலும் உற்சாகம் இழந்தான். எவருடனும் பேசாமல் யாருடனும் பழகாமல் தனிமையிலே பொழுதைப் போக்கினான். திடீரென்று ஒருநாள் ''இங்கு நான் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?'' என்று படகில் ஏறி நாட்டை விட்டுப் போர்னியோ நாடு சென்று இறங்கினான்.

போர்னியோ நாட்டின் மன்னன் அழகும் வீரமும் மிக்க இளைஞன். பூனி கல்தான் என்று பெயர். அவன் சீக்கிரமே வீ-சன் ராஜகுமாரனுக்கு நண்பனாகி விட்டான்.

கல்தானுக்கு ஒரு தங்கை இருந்தாள். பேரழகி. அபாரமான புத்திசாலி. அவளுடன் பழகிய வீ-சன் மெல்ல மெல்லத் தனது ஏமாற்றத்தையும் சோர்வையும் மறந்தான். மறுபடியும் உற்சாகமுள்ள வீர வாலிபனாக மாறினான்.

இவர்களுடைய மனதை அறிந்து கொண்ட கல்தான் பூனி இருவருக்கும் திருமணம் செய்வித்தான். ''இத்தனை மகிழ்ச்சியாக இருவர் இருக்க முடியுமா?'' என்று உலகத்தார் வியக்கும்படி சந்தோஷமாக வாழ்ந்தார்கள் ராஜகுமாரனும் போர்னியோ ராஜகுமாரியும்.

ஆனால் பாவம். உண்மையான முத்துப் பந்தை வைத்திருந்த சீன, மூத்த ராஜ குமாரன் வீ-பிங் உண்மை மகிழ்ச்சி என்பதை அறவே இழந்தான். நியாயமாகத் தம்பிக்குக் கிடைத்திருக்க வேண்டிய பெருமைகளை அவனை ஏமாற்றி நானே அடைந்தேனே. அவன் மனம் வைத்திருந்தால் எனது பொய்யை உலகறியச் செய்து என்னைத் தலை குவிய வைத்திருக்கலாம். ஆனால், சகோதர பாசத்தால் அவன் என் மோசடியைத் தாங்கிக் கொண்டு, ஏமாற்றத்தைத் தாங்காது நாட்டை விட்டே சென்று விட்டான். பெருமைக்காக அவன் உழைப்பையும், பெருமையையும் எனதாக்கிக் கொண்டு, சகோதர பாசத்தைக் கூட அழித்துக் கொண்டேன். ஆனால் அவனோ சகோதர பாசத்திற் காக எல்லாவற்றையும் இழந்து உயர்ந்து விட்டான் எனக் கலங்கினான்.


''இங்க் ரொம்ப விலையாப்பா?''

''இல்லையே. ஏன் கேட்கிறே?''

''அம்மாவோட பட்டுப் புடவையிலே கொஞ்சம் சிந்திடுச்சி... அதுக்குப் போய் இப்படிக் கத்தறாங்களே?''


- ஜெயஸ்ரீ ராஜகுமார்.





யாருக்கு யார் நண்பர்கள்?

விடை : A-F, B-G, D-I, E-H. C க்கு நண்பர் இல்லை!



தேள் கொடுத்த தண்டனை!

பி. ஆர். பார்த்தசாரதி

முத்துசாமி, துரைசாமி, ராமசாமி, ரத்தினசாமி நால்வரும் சகோதரர்கள்.

முதல் மூவரும் வட்டிக்குப் பணம் கொடுப்பது, பிறரை ஏமாற்றிச் சொத்து சேர்ப்பது போன்ற தில்லுமுல்லுகள் செய்து நிறையச் சொத்து சேர்த்தார்கள். மூவரும் லட்சாதிபதிகள்.

ஆனால் நாலாமவன் இரத்தினசாமி பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் கிடைக்கும் வருமானத்தை வைத்து மகிழ்ச்சியாக; எளிய முறையில் குடும்பம் நடத்தி வந்தான்.

அவன் மனைவி இலட்சுமி ஒரு முறை அவனுக்குத் தெரியாமல் லாட்டரிச் சீட்டு வாங்க, அதில் இலட்சம் ரூபாய் விழுந்தது. ரத்தினசாமிக்கு மனைவி மேல் ஒரே கோபம்!

"லட்சுமி... நீ செய்தது பெரிய தப்பு. உழைப்பினால் வரும் பணமே நிலைக்கும். மனம் நிறைந்த பயனைத் தரும். இந்த இலட்ச ரூபாய் பல பேருக்குச் சொந்தமானது. அவர்களை வஞ்சித்து ஏமாற்றி இது நம்மிடம் வந்திருக்கிறது. இது நமக்கு வேண்டவே வேண்டாம். அரசாங்க கஜானாவில் கட்டி விடுவோம்" என்றான் இரத்தினசாமி.

இலட்ச ரூபாயை யாராவது வேண்டாம் என்பார்களா? இலட்சுமிக்கு அழுகை வந்தது.

"நான் செய்தது தப்புத்தான். என்னை மன்னித்து விடுங்கள். இனி இத் தவறைச் செய்ய மாட்டேன். இதற்காக இந்த இலட்ச ரூபாயை நாம் இழக்கக் கூடாது" என்றாள்.

"சரி... என்ன செய்யலாம்? என்று அவளையே" கேட்டான் இரத்தினசாமி.

"நமக்கு இரண்டு பெண்கள். இன்னும் ஐந்து வருடத்தில் இருவருக்கும்

கல்யாணம் செய்ய வேண்டும் டிரங்கு பெட்டி அடியில் லாட்டரிச் சீட்டு இருக்கிறது. நாளை அதை எடுத்துக் கொண்டு போய்ப் பணமாக்கி பாங்கில் போட்டு விடுவோம். ஐந்து வருடம் கழித்துப் பணத்தை எடுத்து இரண்டு பெண்களின் கல்யாணத்தையும் நடத்தி விடுவோம்'' என்றாள் லட்சுமி. இரத்தினசாமி தலையாட்டினான்.

இரவு படுக்கப் போன போது வாசல் கதவைத் தடதடவென யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

''யாராக இருக்கும்'' என்ற சந்தேகத் துடன் இரத்தினசாமி போய்க் கதவைத் திறந்தான்.

அங்கே -

முத்துசாமி - துரைசாமி - ராமசாமி மூவரும் நின்றிருந்தார்கள்.


வெகுளியான இ ர த் தி ன சா மி, ''வாங்க... வாங்க அண்ணே'' என்று மகிழ்ச்சியுடன் உபசரித்து உ ள் ளே அழைத்துப் போனான்.


இலட்சுமிக்கு அவர்கள் பார்வை வித்தியாசமாகப் பட்டது.

''நாளைக்கு சந்தைக்கு மாடு வாங்கப் போகிறோம். இரவு உன் வீட்டில் படுத்து விட்டுப் போகலாமே என்று வந் தோம். வா தூங்கப் போகலாம்'' என் றனர் மூன்று அண்ணன்மார்களும்.

ஆனால் -

மூவரின் பார்வையும் 'டி ர ங் கு பெட்டி' இருந்த பக்கமே சென்றதை இலட்சுமி பார்க்கத் தவறவில்லை.






''பூனையாருக்கு பிடிச்ச பேனா எது சொல்லு...?''

'''பால்' பாயிண்ட் பேனா!''

- மொரப்பூர், ச. உமர்கான்.



''என்ன டாக்டர்! எனக்கு 'ஆயில் தண்டணையா?''

''ஆமாம். உங்க இரத்தத்துல கொழுப்பு அதிகம். இனிமே ஆயிலே யூஸ் பண்ணக் கூடாது.''

- சோமசேகர்.



''மாணவறெல்லாம் தேங்காய் விலையை குறைக்கச் சொல்லி ஊர்வலம் போறாங்களா! ஏன்?''

''பரீட்சை வரப் போகுதே. சாமிக்கு வேண்டிண்டு உடைக்க தேங்காய் வாங்கணுமே. அதான்!''

- ராஜிராதா.

இரவு. அறையில் நல்ல இருட்டு!

ஒரு மணி இருக்கும்.

பெரியவன் முத்துசாமி மெதுவாக எழுந்தான்.

அவன் எழுந்திருப்பதைப் பார்க் காத துரைசாமியும் மெதுவாக எழுந் தான்.

இருவரும் எழுந்துள்ளதை அறியாத ராமசாமி தானும் மெதுவாக எழுந்தான்.

டிரங்குப் பெட்டி உள்ள இடத்திற்கு ஒருவர் அறியாமல் மற்றவர்கள் தட்டுத் தடவிச் சென்றனர்.

டிரங்குப் பெட்டியைத் திறந்து உள்ளே கைவிட்டனர்.

உடனே -

''ஆ!'' என்ற சப்தமும்

''ஐயோ.. தேள் கொட்டி விட் டதே'' என்ற... அலறலும் கேட்டுத் திடுக்கிட்டு விழித்த இரத்தினசாமி விளக்கைப் போட்டான்.

அங்கே -

அவனது மூன்று அண்ணன்களும் கைகளை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு ''ஐயோ... தேள் கொட்டி விட் டதே... வைத்தியரைக் கூப்பி டேன்'' என்று துடித்தனர்.

இரத்தினசாமியும் வேகமாக வைத் தியரைக் கூப்பிடப் போனான்.

அடுத்த அறையில் இதைப் பார்த் துக் கொண்டிருந்த இலட்சுமி, ''நீங்கள் வந் திருப்பது லாட்டரிச் சீட்டைத் திருடத்தான் என்று ஊகித்து அதை எடுத்து வைத் துக் கொண்டு, நான்தான் நாலைந்து தேளைப் பிடித்துப் பெட்டிக் குள் போட்டேன். வெகுளியான உங்கள் தம்பிக்குத் துரோகம் செய்ய நினைத்தீர்கள். ஆனால் அவரோ உண்மை அறியாமல் உங்க ளுக்கு வைத் தியம் பார்க்க வைத்தியரை அழைக்கப் போயிருக்கிறார். இனியாவது யாருக் கும் துரோகம் செய்யா தீர்கள். மற்றவர் பொருளுக்கு ஆசைப் படாதீர்கள்'' என்றாள்.

மூவரும் அசடு வழிந்தபடி தலை குனிந்தனர்! இப்பொழுது மூவரும் யார் சொத்துக்கும் ஆசைப் படுவதில்லை.



என்ன செய்கிறார்கள்?


- போட்டி முடிவு


இந்த முறையும் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தைக் கடந்து திகைக்க வைத்து விட்டது. எல்லோருமே சரியான விடை எழுதியிருந்ததால் பரிசுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுப்பதில் குலுக்கல் முறையே கை கொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ஜி. கார்த்திக். கல்கத்தா
2. பி. கௌரி, மதுக்கரை
3. கே. நீபன் துரை, கொங்கணாபுரம்
4. எஸ். கணேஷ், மணலி புதூர் - 600 103
5. எம். அப்துல் கபூர், உப்பிலிபாளையம்
6. எஸ். ரகுநாதன், இடையூர் ஊ.ழ.
7. டி. ராஜா, தலைச்சங்காடு
8. எம். அப்துல் மஜீன், சூரமங்கலம்
9. எஸ்..ஆர். சோம சுந்தரம், செண்பகராய நல்லூர் தெற்கு
10. எம். மதன் டார்வின், பொன்னேரி
11. ஜி. தேவகி, தும்பவனம், காஞ்சிபுரம்
12. ஏ. முகமத் கமருதீன், சென்னை - 7
13. க.க. அண்ணாமலை, அம்பத்தூர்
14. ஆர். செல்வம், பாளையம்கோட்டை
15. இரா. இராதிகா, நெய்வேலி - 2

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்! கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!





★ விக்டோரியா மகாராணி பயணம் செய்த ரயில் லண்டனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வெளியே மழை. எங்கும் பனி விழுந்து படர்ந்திருந்தது. ஓர் கருத்த உருவம் எதிரே பயங்கரமாகக் கைகளை அசைப்பதை ரயில் டிரைவர் பார்த்தார். என்னவென்று புரியாது ரயிலை நிறுத்தினார். சிப்பந்திகள் கீழே இறங்கி, பாதையைச் சோதித்தனர். 200 மீட்டருக்கு அப்பால் பெருமழையில் ஒரு பாலம் இடிந்து கிடந்தது தெரிய வந்தது! எச்சரிக்கை செய்த கரிய உருவம் காணப்படவில்லை. டிரைவர் எதேச்சையாக என்ஜின் விளக்கைப் பார்த்தார். ஒரு பெரிய வண்டு அதில் ஒட்டிக் கொண்டு இறந்து கிடந்தது. உயிரோடு இருந்தபோது அதன் கால்கள் அசைந்ததுதான் கரிய உருவமாக நிழலில் தெரிந்திருக்கிறது. ராணியின் உயிரைக் காத்த அந்த வண்டு பாதுகாக்கப்பட்டு பிரிட்டிஷ் மியூசியத்தில் இன்றும் உள்ளது.

நல்லாவலம் காசிநாதன்.




★ குடையை ஆங்கிலத்தில் அம்பரெல்லா (Umbrella) என்று சொல்கிறோம். இந்தச் சொல் 'அம்பரா' என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது. கிரேக்க மொழியில் 'அம்பரா' என்றால் 'நிழல்' என்று அர்த்தம்.

- ரமா ராமநாதன், நாகர்கோவில்.




★ தானியங்களில் எந்தக் காலத்திலும் கெட்டுப் போகாமல் எப்போதும் உயிர்ப்புடையதாக மக்கிப் போகாமல் இருக்கும் தனித்திறன் வரகு ஒன்றுக்கே உள்ளது. மேலும் இடியையும் தாங்கக்கூடிய சக்தியைப் பெற்றுள்ள தானியம் வரகு! அதனால்தான், எத்தனையோ தானியங்கள் இருந்தும் வரகையே, எல்லாத் திருக் கோயில்களிலுமுள்ள கோபுர கலசங்களில் நிரப்பி வைக்கிறார்கள்.

- மு. இளவரசு, நல்லாலம்.




★ எழுத்தாளர்கள் அனைவரும் நீலம், பச்சை, கறுப்பு போன்ற பல்வேறு நிறமுடைய பேனாக்களின் மூலம்தான் தங்கள் படைப்புகளை உருவாக்கி உள்ள னர். ஆனால் பென்சில் மூலமே தனது அனைத்துப் படைப்புகளையும் எழுதியவர் எர்னஸ்ட் ஹெமிங்வே என்ற புகழ்மிக்க எழுத்தாளர் மட்டுமே. வேறு எந்த எழுத் தாளருக்கும் இப் பழக்கம் இல்லை.

- எஸ். ஜெயஸ்ரீ, திருச்சி.



★ 91'ம் வருடம் ஸ்பெயின் நாட்டில் புதுமையான பந்தயம் ஒன்று நடைபெற் றது. அகில உலக நத்தைகள் ஓட்டப் பந்தையம்தான் அது. உலகெங்கிலுமிருந்து சுமார் இருநூறு நத்தைகள் ஓட்டப் பந்தயப் போட்டியில் கலந்து கொண்டன. எழுபது செண்டி மீட்டர் தூரத்தை ஐந்து நிமிடங் களில் ''ஓடி!'' ஸ்பெயின், போர்த்துகல் ஆகிய இரு நாடுகளின் நத்தைகள் முதல் பரிசைப் பகிர்ந்து கொண்டன!

- முஸ்தபா, தக்கோலம்.



● சிகரெட் பாக்கெட், சிகரெட் பற்ற வைக்கும் லைட்டர் போன்ற பொருட் களை யாருக்கும் அன்பளிப்பாக அளிக்கக் கூடாது. இப்படி ஒரு சட்டம் சவுதி அரேபி யாவில் உள்ளது.


● 1855- ஆம் ஆண்டில்தான் சென் னையில் முதன் முதலாகத் தபால் பெட்டி வைக்கப்பட்டது. வைக்கப்பட்ட இடம் - மௌபரீஸ் சாலை.

● உலகத்தில் எந்த ஆலயத்துக்கும் இல்லாத சிறப்பு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்துக்கு உண்டு. இங்கே முப்பத்து மூன்றாயிரம் சிற்பங்கள் இருக்கின்றன.

● கேரளம் என்ற மாநிலத்தின் பெயர் எப்படி வந்தது தெரியுமா? கேரா என்ற சொல்லிலிருந்து வந்தது. கேரா என் பதற்கு தேங்காய் என்று பொருள்.

- ஸ்ரீமனோபாரதி, பாண்டிச்சேரி - 13.

நிறம் மாறும் சிலந்திகள்!



★ நிறம் மாறும் வித்தகன் என்றவுடன் நம் நினைவுக்கு வருவது பச்சோந்திதான். ஆனால், சில சிலந்திகளும் கூட இடத்திற்கு ஏற்றவாறு தங்கள் நிறத்தை மாற்றிக் கொள்ளும் திறன் வாய்ந்தவையாக இருக்கின்றன. இதை சோதித்துப் பார்க்க வெள்ளை நிறச் சிலந்தியை மஞ்சள் நிறக் காகிதத்தில் போட்டுப் பார்த்ததில், சிலந்தி மஞ்சள் நிறமாகி விட்டது! அதே போல் சிகப்பு நிறச் சிலந்தியும் வெள்ளைத் தாளில் வெள்ளை நிறமாக மாறி விடுகிறதாம். ஆனால் இந்த நிறம் மாறும் தன்மை ஓரிரு நாட்கள் கழித்தே நடைபெறுகிறது.

- நல்லாலம் சிவா.



மொபெட் வந்தது எப்படி?

★ இப்போது மொபெட் வண்டிகள் இல்லாத இடமே இல்லை. இவ் வண்டிக்கு மொபெட் என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா?

'Motor and pedal' என்பதின் சுருக்கம் தான் 'Moped'.

- தா. ஷேக் உசேன், செஞ்சி.




கை கொடுத்த நாடு.

★ அல்ஸ்டர் என்ற வட அயர்லாந்துப் பகுதியைக் கைப்பற்ற ஒஜீல் என்பவன் கப்பலில் புறப்பட்ட போது, போட்டியாக மற்றொருவனும் கிளம்பினான். அயர்லாந்து மண்ணில் யாருடைய கை முதலில் படுகிறதோ அவரே அந்த நாட்டுக்கு அரசராவது என்று இருவரும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வந்தனர்.

இருவரது கப்பல்களும் போட்டி போட்டுக் கொண்டு சென்றன. மற்றவன் முதலில் கரையேறி விடுவான் போலத் தோன்றவே ஒஜீல் தமது வலது கரத்தை வெட்டிக் கரையில் வீசினார். நிபந்தனைப்படி அவரது கரமே முதலில் அயர்லாந்து மண்ணைத் தொட்டதால் அவரே அரசரானார். வலது கரம் அரசாங்கச் சின்னமாயிற்று. இன்றும் கூட அதுவே நிலைத்திருக்கிறது!

- சிவா, நல்லாலம்.

கிரிக்கெட் துணுக்குகள்



★ ஸ்டம்புகளின் மீது வைக்கப்படும் 'பெய்ல்ஸ்' முதன் முதலில் 1814ல்தான் அறிமுகப்படுத்தப்பட்டது!

1774ல் ஒரு ஓவருக்கு நான்கு பந்துகளும், 1889-ல் ஐந்தும், 1900 முதல் ஆறு பந்துகளும் வீசப்படுகின்றன.

1889-ல் டிக்ளேர் செய்வது மூன்றாம் தினத்தன்றுதான் அனுமதிக்கப்பட்டது!

- தா. ஷேக் உசேன், செஞ்சி.

பிருந்தாவனம் பகுதிக்கு அனுப்புவோர் அதற்கான ஆதார நூல்களைக் குறிப்பிட வேண்டும்.



● 8524 வெடிக்காத குண்டுகள், 16 லாரிகள், 8 டாங்கிகள், 104 படகுகள், 10 பெரிய கப்பல்கள், 15 விமானங்கள் இவை ஒருசேர எங்கே கிடைத்தன தெரியுமா? சூயஸ்கால்வாயைத் தூர் வாரிய போது தான்!

● முப்பத்தைந்து ஆஸ்கார் பரிசு பெற்ற ஒரே மனிதர் வால்ட்டிஸ்னிதான்.

● குழந்தைகள் பயன்படுத்தும் எழுது பலகையை (slate) அதிகமாகத் தயாரிக்கும் மாநிலம் ஹரியானா.

- ஸ்ரீமனோபாரதி, பாண்டிச்சேரி - 13.



★ விஞ்ஞானி சர் ஐசக் நியூட்டன் இருபது வருடங்களாகப் பல மணி நேரங்கள் கண் விழித்து ஆராய்ச்சி செய்து அவற்றையெல்லாம் குறிப்பெடுத்து வைத்திருந்தார். ஒருநாள் ஆராய்ச்சி சம்பந்தமான குறிப்புகளை மேஜை மீது வைத்து விட்டு உலாவுவதற்காக வெளியே சென்றார். மேஜை மீது ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. நியூட்டனின் செல்லப் பிராணியான டயமண்ட் (Diamond) என்ற நாய் மேஜை மீது ஏறி விளையாடியதால் மெழுகுவர்த்தி விழுந்து அவருடைய விலைமதிப்பற்ற ஆராய்ச்சிக் குறிப்புகள் தீப்பற்றி எரிந்து விட்டன. திரும்பி வந்த விஞ்ஞானி அதிர்ச்சியடைந்தார். இன்னொருவராக இருந்திருந்தால் நாயை அடித்திருப்பார். ஆனால், நியூட்டனோ அதைத் தட்டிக் கொடுத்து 'என்ன காரியம் செய்தாய்?' என்று கேட்டார். திரும்பவும் ஆராய்ச்சிக் குறிப்புகளைத் தயாரிக்க அவருக்குப் பல வருடங்கள் ஆயிற்று. அவருடைய மூளையைப் போலவே மனதும் உயர்ந்ததாய் இருந்தது.

- ஜி. இந்திரா, திருச்சி - 1




● எவரெஸ்ட் சிகரத்தை ஆக்ஸிஜன் வாயுவைப் பயன்படுத்தாது ஏறிய முதல் இந்தியர் டோர்ஜி என்பவர்.

● குளிர்காலப் பனியில் எவரெஸ்ட் மீது தனியாக ஏறியவர் ஜப்பான் நாட்டவரான யாகவோ கடோ.

● இமயமலையிலுள்ள கலபத்தர் சிகரத்தின் மீது ஜப்பான் நாட்டவரான யோசியா என்பவர் ஏறிச் சாதனை புரிந்தார். இதிலென்ன அதிசயம் என்கிறீர்களா? இவருக்கு இரண்டு கால்களும் இல்லை!

- மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

> பிருந்தாவனப் பகுதிக்கு எழுதுவோர், அறிவியல் செய்திகளாக இருப்பினும் சரி, விந்தைச் செய்திகளாக இருப்பினும் சரி, அதற்கான ஆதாரங்களைக் குறிப்பிட வேண்டும். இயன்றவரை தமிழ்நாட்டில் வெளியாகும் ஆங்கில தமிழ்ப் பத்திரிகைச் செய்திகளையே எடுத்து எழுதுவதைத் தவிர்க்கவும்.
>
> - ஆசிரியர்.



அரசையே ஆட்டிப் படைத்தவர்!

ஜானகிமணாளன்

"ஓடாதே அலெக்ஸ்... கீழே விழுந்து விடுவாய்....." என்று எல்லாச் சிறுவர்களும் எச்சரித்தனர். ஆனால் அவன் அதை லட்சியம் செய்யவில்லை.

அலெக்ஸை பார்த்துக் கொள்ள இரண்டு பணியாட்கள் இருந்தனர். அவன் எங்கு சென்றாலும் கூடவே போக வேண்டும். அவன் உடலில் சிறு குண்டூசிக் காயம் கூட ஏற்பட்டு விடாமல் பாது காக்க வேண்டும். ஆனால், சமயத்தில் அவன் அவர்களுக்கு டிமிக்கி கொடுத்து விடுவான்.

அலெக்ஸ் ஓடிச் சென்று ஒரு மரத்தில் ஏறிவிட்டான். பணியாளர் இருவரும் பதறினர். "நாங்கள் இறக்கி விடுகிறோம்... வா...." என்றனர். சிறுவன் கேட்பதாக இல்லை. கிளையிலிருந்து கீழே குதித்து விட்டான். ரத்தம் கசிந்தது.

பெற்றோருக்குத் தகவல் பறந்தது. தந்தை துடித்துப் போனார். தாய், "ஐயோ அலெக்ஸ்...! கடைசியில் எது நடக்கக் கூடாது என்று நினைத்தேனோ, அதுவே நடந்து விட்டதே...! என்ன செய்வேன்...?" என்று அரற்றினாள்.

'அடி பட்டால், என்ன? மருந்து போட்டால், சரியாகிவிடுகிறது... இதற்கு ஏன் இத்தனை பதற்றம்...?' காரணம் இருந்தது. சாதாரணமாக வெளிக்காற்றுப் பட்டவுடன், காயத்திலிருந்து வெளிவரும் ரத்தம் உறைந்து ரத்தக் கசிவு நின்று விடும். ஆனால், அலெக்ஸிக்கு அப்படி ஆகாது. அவன் ரத்தத்தில், உறையும் திறன் கிடையாது. நிற்காமல் கசிந்து கொண்டே இருக்கும். அது ஒரு பரம்பரை நோய். 'ஹேமோஃபிலியா' என்று பெயர். இன்றைக்கும் கூட அதற்குச் சரியான மருத்துவம் கிடையாது. இது நடந்தது இந்நூற்றாண்டின் துவக்கத்தில். எனவேதான் அலெக்ஸ் கவனமாகக் காயம்படாமல் பாது காக்கப் பட்டான். ஆனால், கடைசியில் அது நடந்து விட்டது. அனைவரும் பதறினர்.

அலெக்ஸ் ருஷ்ய நாட்டு இளவரசன். 'ஜார்' மன்னன் நிக்கோலசின் மகன். 'ஜார்' என்றால் சக்ரவர்த்தி என்று பொருள். அலெக்ஸின் தாயின் பெயர் 'அலெக்சாண்டிரா'. அவள் ஜெர்மானிய அரசகுமாரி. அவர்களுக்கு முதல் நான்கும் பெண்கள். ஐந்தாவதுதான் அலெக்ஸ். நாட்டின் ஒரே ஆண் வாரிசு.

அரண்மனை வைத்தியர்கள் பறந்தோடி வந்தனர். காயத்தைப் பரிசோதித்தனர். ரத்தக் குழாய் சிதைந்திருந்தது. மருந்திட்டுக் கட்டினர். கசிவை நிறுத்த முடியவில்லை. வெளியூர் மருத்துவர் பலர் வந்தனர். அவர்களும் கையை விரித்தனர். ஜாரும், ஜாரினாவும் செய்வதறியாது தவித்தனர்.

ஜார் நிக்கோலஸ் அமைச்சர்களை அழைத்தார். ஆலோசனை செய்தார். எவராலும் எதுவும் செய்ய முடிய வில்லை. அப்போது, யாரோ ஒருவருக் குத் திடீரென்று ஒரு நினைவு.

''அரசே....' போக்ரோஸ்க்கோ என்று ஒரு கிராமம். அங்கு ஒரு துறவி இருக்கிறாராம். அவர் கை பட்டால் போதுமாம். எந்த வித நோயும் குணம் ஆகுமாம்.... குருடன் பார்க்கிறானாம்! ஊமை பேசுகிறானாம்! முடவன் நடக் கிறானாம்...!'' என்றார் அவர்.

அரசர் மகிழ்ந்தார். ''அப்படியா....? உடனே ஆளை அனுப்புங்கள்... அந்தத் துறவியைக் கையோடு அழைத்து வரச் சொல்லுங்கள்....'' என உத்திரவிட்டார்.

அத்துறவியின் பெயர் ரஸ்புடீன். தாடிக்கார நாடோடி. மன்னரின் அழைப்பை உடனே ஏற்று ஓடி வந்தார். குழந்தையை நீங்கள்தான் 'காப்பாற்றித் தரவேண்டும்' என்று கெஞ்சினார் மன்னர்.

அலெக்ஸுக்கு அப்போது நல்ல காய்ச்சல். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. படுக்கை அருகில் நின்ற ரஸ்புடீன் சற்று நேரம் தியானத் தில் ஈடுபட்டார். பிறகு சிலை ஒன்றை எடுத்தார். அருகில் ஒரு மேசை. அதன் மீது வைத்தார். இரண்டு மெழுகுவர்த்தி களைப் பக்கத்துக்கு ஒன்றாக ஏற்றி வைத்தார். அதன் முன் மண்டியிட்டு, ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டார். அர சனும் அரசியும் பக்கத்தில் தவித்தபடி நின்றிருந்தனர். நேரம் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. துறவி கண்களைத் திறக்கவே இல்லை. உதடுகள் மட்டும் அசைந்தன. ஏதோ மந்திர முணு முணுப்பு!

இரவு இரண்டு மணிக்கு மேல் ஆகி விட்டது. ரஸ்புடீன் மெல்லக் கண் திறந் தார். மன்னர் ஓடிச் சென்று வணங் கினார்.

''இனி அஞ்சத் தேவையில்லை... உம் மகன் சாவின் பிடியிலிருந்து



விடுபட்டு விட்டான்....'' என்றார் ரஸ்புடீன்.


அரசி ஓடிச் சென்று மகனை அன்புடன் தடவிக் கொடுத்தார். காய்ச்சல் முற்றிலுமாகக் குறைந்திருந்தது! அதைவிட ஓர் ஆச்சர்யம்! அலெக்ஸின் காயத்தில் இருந்த ரத்தக் கசிவு நின்று போயிருந்தது!

ராணி எழுந்து போய் ரஸ்புடீனின் கால்களைப் பற்றிக் கொண்டார். ''நீங்கள்தான் எங்கள் தெய்வம்... இனி எங்கும் போகக் கூடாது. எங்களுடனேயே தங்கிவிட வேண்டும்....'' என்று கெஞ்சினாள். துறவி ரஸ்புடீன் உடனே சம்மதித்துவிட்டார். ஏனெனில், அவர் மனத்தில் ஒரு கபடத் திட்டம் உருவாகியிருந்தது.

அன்று முதல் அந்த அரச குடும்பத்தில் ரஸ்புடீனும் ஒருவன் ஆனார். வெகு விரைவில் அவர் மன்னருக்கு மிகவும் நெருங்கிய நண்பன் ஆகிவிட்டார். மன்னரை விட ராணி அவருக்கு அடிமையாகவே ஆகி விட்டாள். அந்த நெருக்கத்தைப் பயன் படுத்திக் கொண்ட ரஸ்புடீன் மெல்ல மெல்லத் தனது கபட நாடகத்தை அரங்கேற்றினார். நல்லவர்களை எல்லாம் நிர்வாகத்தை விட்டு விரட்டினார். நேர்மையற்ற அதிகாரிகள் பலரை அந்த இடத்தில் நியமித்தார். அரண்மனை முழுதும் ரஸ்புடீன் சொல்லியபடி ஆடியது.

முதியவர்கள் ஒன்று கூடி மன்னரிடம் முறையிட்டனர். ''ரஸ்புடீனின் கொட்டத்தை நீங்கள் அடக்கித்தான் ஆக வேண்டும்'' என்று வேண்டினர்.

அதற்கு அரசன், ''எனக்கு எல்லாம் புரிகிறது... ஆனாலும் வேறு வழி புலப்படவில்லையே... என்ன செய்வேன்? ரஸ்புடீனைக் கண்டித்தால் அரசி கோபிப்பாளே...! அதுமட்டுமல்ல... நம் இளவரசருடைய பழைய வியாதியை சந்நியாசி மீண்டும் ஏற்படுத்திவிட்டால் என்ன செய்வது?'' என்றார்.



எனவே முதியவர்களின் முயற்சி செவிடன் காதில் ஊதிய சங்காகப் போயிற்று.

அதற்குப் பிறகு, ரஸ்புடீன் மேலும் துணிவு பெற்றார். அத்துடன் முதல் உலகப் போரும் சேர்ந்து கொண்டது. அவரது செல்வாக்கு வானளாவ உயர்ந்தது. அரசிக்கு அவரே ஆலோசகன் ஆனார். திறமை உள்ளவர்களுக்குக் கல்தா. தகுதி அற்றவர்களுக்குப் பெரும் பதவிகள். நாட்டின் நிர்வாகமே சீர்குலைந்தது. எங்கு பார்த்தாலும் கொந்தளிப்பு! அதன் விளைவாக ரஷ்யா உலகப் போரில் தோற்றதுடன், உள் நாட்டிலும் லெனினின் போல்ஷ்விக் புரட்சி தோன்றி பிற்பாடு வெற்றி பெற்று, ருஷ்யாவில் மன்னர் ஆட்சிக்கே ஒரு முடிவு கட்டியது.

இவ்விதம் ருஷ்ய நாட்டு அரசையே ஆட்டிப் படைத்த ரஸ்புடீன் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இடம் ருஷ்யாவின் யூரல் மலைப் பகுதியில் உள்ள கிழக்கு ஸ்டெப்பி புல்வெளிப் பிரதேசம். அங்கு பாயும் 'டூரா' நதிக்கரை கிராமமாகிய 'போக்ரோஸ்க்கோ' வில் 1872 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை பெயர் கிரிகோரி எஃபிமோவிச்.

சிறு வயதில் ரஸ்புடீன் செய்யாத ரௌடித்தனங்கள் கிடையாது. சதா சண்டை. முறை தவறிய செயல்களில் ஈடுபடுவான். பிழைப்புக்குச் சில காலம் சத்தவண்டி ஓட்டினான். அப்போதுதான் திருமணம் நடந்தது. மனைவி பெயர் 'ப்ராங்கோவ்யி.' நான்கு குழந்தைகள் பிறந்தன. பிற்பாடு வண்டி ஓட்டுவதை நிறுத்தி விட்டு, விவசாயத்தில் ஈடுபட்டான்.

ஒரு நாள்.

ரஸ்புடீன் வயலில் உழுது கொண்டிருந்தான். அவன் முன் ஒரு திவ்ய உருவம் தோன்றியது. அது, ''கிரேக்க நாட்டில் உள்ள 'ஏதான்' மலைக்குப் புனிதப் பயணம் செல்.. உன் வாழ்வில் நல்ல மாற்றம் ஏற்படும்...'' என்றது.

அவ்வாறே ரஸ்புடீன் 3200 கி.மீட்டர் தூரம் நடந்தே சென்று அந்த மலையை அடைந்தான். அங்கு ஒரு மடாலயம். அதில் இரண்டு ஆண்டுகள் தங்கினான். அப்போது அவனுக்குப் பல அற்புதச் சக்திகள் கை வரப்பட்டன. அங்கிருந்து ஒரு புது மனிதனாக அவன் கிராமம் திரும்பினான்.

ருஷ்ய அரசியலில் அவன் ஈடுபட்ட பிறகு அவனுக்குப் பல எதிரிகள் தோன்றினர். அவர்கள் அவனுக்கு விஷம் வைத்துக் கொல்லவும் முயன்றனர். 'சயனைடு' எனப்பட்ட கொடிய நஞ்சால் கூட அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை! எனவே அவனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று, உடல்-கை, கால்களைக் கயிற்றால் கட்டி 'நேவா' என்ற பனியாற்றில் தூக்கி எறிந்து விட்டனர். இது நடந்தது 1916 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் நாள்.

தனக்குக் கிடைத்த அற்புத சக்திகளை மட்டும் ரஸ்புடீன் மக்கள் நன்மைக்காகப் பயன் படுத்தி, அடக்கத்துடன், நேர்மையுடனும் ஒழுக்கத்துடனும் வாழ்ந்திருந்தால் அவன் மாபெரும் மக்கள் சக்தியாகவே மாறி சாதனைகளைப் புரிந்து மனித குல வரலாற்றில் வணங்கிப் போற்றுதற்குரிய இடத்தைப் பெற்றிருப்பான். ஒழுக்கமின்மை அவனையும் படுகுழியில் தள்ளி, நாட்டின் தலை விதியையும் மாற்றியது!



நம் ஊரில் குழந்தைகள் காப்பகம் இருப்பது போல், ரஷ்யாவில் வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகள் காப்பகம் உள்ளது. பிராணிகளின் சொந்தக்காரர்கள் வெளியூர் செல்லும்போது தங்கள் செல்லப் பிராணிகளை அவற்றின் சொந்தக்காரர்கள் இந்தக் காப்பகத்தில் விட்டுச் செல்லலாம். இதற்கென்று தனிக் கட்டணத்தை காப்பகத்தார் வசூலித்துக் கொள்கின்றனர். - அ. முஸ்தபா

சவுக்கால் அடி!



இன்னும் சற்று நேரத்தில் ஒரு அதிர்ச்சியான செய்தி காத்திருக்கிறது என்ற உண்மை அந்த நொடியில் அருணுக்குத் தெரியாது.

அடுத்த மாதம் செல்ல இருக்கும் பள்ளிச் சுற்றுலா பற்றி அப்பாவிடம் சொல்லி, அதற்கு அனுமதியும் பணமும் வாங்க வேண்டும் என்ற யோசனை மனத்தில் பளிச்சிட....

அப்பாவின் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அறை உள்புறமாக தாளிடப்பட்டிருந்தது. மூன்று நான்கு பேர், சன்னமான குரலில் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

என்ன பேசுகிறார்கள்?

எதேச்சையாகக் கவனிக்க ஆரம்பித்த அருண் அடுத்த நொடியில் திடுக்கிட்டான்.

கையில் இருந்த பத்தாவது ஆங்கிலப் புத்தகம் அதிர்ச்சியில் நழுவ...

சுதாரித்து அதைப் பிடித்துக் கொண்டான்.

அவன் அப்பாவா இப்படி? எப்படி அப்பா இப்படிக் கல் நெஞ்சம் உடையவரானார்!

அவனால் நம்பவே முடியவில்லை.

அப்பொழுது....

"அருண்."

பின்னால் கேட்ட அம்மாவின் குரலில் கவனம் கலைந்து, டக்கென அந்த இடத்தை விட்டு விலகி, "என்னம்மா?" என்றான்.

"உனக்கு பள்ளிக்கு நேரம் ஆயிடுச்சே. வா டிபன் சாப்பிட."

"இதோ வரேம்மா."

அறையில் கேட்டதை அம்மாவிடம் சொல்லி விடலாமா?

கூடாது. சொல்லவே கூடாது. சொன்னால் அம்மாவால் தாங்க முடியாது. நாம்தான் எப்படியாவது யோசனை செய்து அப்பாவின் மனத்தை மாற்ற வேண்டும்.

எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மௌனமாக டிபன் சாப்பிட ஆரம்பித்தான் அருண்.

பிற்பகல். நான்காவது பாட வேளை.

வழக்கமாக ஆசிரியர் நடத்துவதைக் கூர்ந்து கவனிக்கும் அருணுக்கு இன்று அப்படிச் செய்ய முடியவில்லை.

அப்பாவை எப்படித் திருத்துவது?

யோசித்து யோசித்துக் களைத்திருந்த அவன் மூளை செல்களில் திடீரென அந்த யோசனை உதயமாயிற்று.

அவன் முகத்தில் லேசான மலர்ச்சி!

இந்த யோசனையைச் செயல்படுத்தினால், ஒன்று அப்பா திருந்தி விடுவார். இல்லை தனக்கு நிறைய அடி கிடைக்கும். இரண்டில் ஒன்று உறுதி.

எப்பொழுது வகுப்பு முடியும் என்று ஆவலோடு காத்திருந்தான் அருண்.

இரா. வசந்தராசன்

ஒரு வழியாக வகுப்பு முடிந்ததும்....

வீட்டுக்கு வேகமாக ஓடினான்.

''அம்மா... அப்பா எங்கே?''

''நம்ப மெடிகல் ஷாப்புக்கு போயிருக்கார். ஏன், என்ன விஷயம்?''

''ஒண்ணும் இல்லேம்மா. சும்மா கேட்டேன்.''

''சரி... ஒரு பத்து நிமிஷம் வீட்டைப் பாத்துக்கோ. பக்கத்து வீட்டுக்குப் போய் ஒரு நிமிஷத்தில் வந்துடறேன்.''

''சரிம்மா.''

அம்மா போனதும்....

மனதுக்குள் போட்டிருந்த திட்டத்தை நிறைவேற்ற வேகமாக இயங்க ஆரம்பித்தான் அருண்.

மறுநாள்.

அருண் அறிவியல் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அம்மா சமையலறையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். அப்பா அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்தார்.

துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, டூத் பிரஷை எடுத்தார். ''அருண், நேற்றே பேஸ்ட் தீர்ந்து போச்சுன்னு சொன்னேனே. வாங்கிக்கிட்டு வந்தியா?'' என்று கேட்டார்.

''வாங்கிட்டு வந்து தயாரா ஷெல்பில் வைச்சிருக்கேம்பா'' என்றான் அருண். அவன் மனம் பரபரத்தது. அவன் அப்பாவுக்கு பல் கூச்சம். அதனால் அவருக்கு மட்டும் தனி டூத் பேஸ்ட்.

ஐந்து நிமிஷங்களில் அப்பாவின் கத்தல் கேட்டது.

''என்னடா அருண். பேஸ்ட்டை எங்கே வாங்கினே? ஏதோ கலப்பட



பேஸ்ட் போல இருக்கே. ஈறெல்லாம் எரியுதே... பாவிங்க எதுலதான் கலப் படம் பண்றதுன்னு கணக்கு இல்லாமே போச்சே! இவனையெல்லாம் உயி ரோடு குழி தோண்டிப் புதைக்கணும். நாற்சந்திகளில் நிக்க வைச்சு சவுக்கால அடிக்கணும்.''

ஓடிவந்த அருண் ஒரு கணம் தயங்கினான்.

''அப்பா... நான் ஒரு விஷயம் சொன்னா கோவிச்சுக்க மாட்டீங் களே...''


அப்பாவின் முகத்தில் குழப்பம்!

''என்னடா சொல்லப் போறே? சொல்லு!''

''இது க ல ப் ப ட பேஸ்ட்டுனு தெரிஞ்சுதான் வாங்கினேன். இன்னும் கேட்டால் கலப்பட பேஸ்ட் வேணும் கறதுக்காக சுத்தி அலைஞ்சு வாங்கி வந்தேன்.''

அப்பாவின் முகம் கோபத்தில் சிவந் தது.

''ஏன்டா... இப்படி செஞ்சே?''



அருண் தலைகுனிந்து மௌனமாக நின்றான்.

''சொல்லுடா?''

''உ ங் க ளை த் திருத்தறதுக்குத் தாம்பா.''

இதய மையத்தில் ஒரு பெரிய அதிர்ச்சியை வாங்கினார் அருணின் தந்தை.

''என்னடா உளர்றே?''

''நல்லா யோசிச்சுப் பாருங்கப்பா. நான் உளரலே. இரண்டு நாளைக்கு முன்னால, உங்க வியாபார நண்பர்களோட, நீங்க மெதுவான குரலில் பேசிக்கிட்டு இருந்ததை தற்செயலா நான் கேக்கற மாதிரி ஆயிடுச்சி. நம்ப மெடிக்கல் ஷாப்ல போலி மாத்திரைகளைக் கலந்து வித்தா அதிக இலாபம் வரும். அதுக்கான ஏற்பாடுகளை அடுத்த மாதத்துல இருந்து செய்யப் போறேன்னு நீங்க சொன்னதை நான் என் காதால கேட்டேன்...''

அருணின் தொண்டை கரகரத்தது.

''நினைச்சிப் பாருங்கப்பா. கலப்படமான ஒரு டூத் பேஸ்ட்டை வச்சேன். அதுவே உங்களை இந்தப் பாடு படுத்தியிருக்கு. இதையே உங்களால தாங்கிக்க முடியலே. கடைக்காரனைக் கண்டபடி திட்டினீங்க. உயிரோடு குழி தோண்டிப் புதைக்கணும்னு குதிக்கறீங்க! நீங்க போலி மருந்துகளை விற்கப் போறீங்களே, உங்களை எப்படித் தண்டிக்கிறது? இலாபத்துக்காக போலி மாத்திரைகளை வித்தா எத்தனை உயிர் இழப்புகள் ஏற்படும்னு யோசிச்சுப் பாருங்கப்பா. அந்தப் பாவம் எல்லாம் நமக்குத் தேவைதானா? நீங்க திட்டின மாதிரி எல்லாக் குடும்பத்தினரும் உங்களைத் திட்டணுமா? நீங்க கடைக்காரனை இப்ப திட்டின மாதிரித் தானே உங்களை எல்லாரும் திட்டுவாங்க?''


அப்பா எந்தப் பதிலும் சொல்லவில்லை. இரண்டு நிமிடங்கள் மௌனமாக நின்றார். பிறகு.....

''அருண்... என்னை மன்னிச்சிடு. என் மனசு மாறிடுச்சி. கலப்பட மாத்திரைகளை நம்ப மருந்துக் கடைல கலக்க மாட்டேன். இது உறுதி.''

அருண் மறைத்து வைத்திருந்த நல்ல பேஸ்ட்டை எடுத்து அப்பாவிடம் கொடுத்தான் மகிழ்ச்சியுடன்!

கொசுத் தொல்லையா? கவலையே வேண்டாம். ஜப்பான் நாட்டில் கொசுத் தொல்லையிலிருந்து தப்பிப்பதற்கென ஒரு துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கியின் விசையை அழுத்தினால் ஒருவித வாயு வெளிவரும். இது கொசுக்களை மயக்கிக் கொன்றுவிடும்!

- மு. பூபாலன்,
மூஞ்சூர்பட்டு - 57



தன் வாழ்நாட்கள் முழுவதும் உட்கார்ந்தபடியே ஆட்சி செய்த மகாராணி யார் தெரியுமா? ஆஸ்திரியப் பேரரசின் மகளும், ஹங்கேரி, போஹிமியா நாடுகளின் மகாராணியுமான 'மேரியா தெரசா' என்பவர்தான். மாளிகையின் ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குக் கூட ஒரு நாற்காலியில் உட்கார வைத்துத்தான் இந்த அரசியாரைத் தூக்கிச் செல்வார்களாம். கொடுத்து வைத்த மகாராணி இவர்தான்.

- தக்கோலம் அ. முஸ்தபா





"ஒரு கொலையோ அல்லது கொள்ளையோ நடந்து விட்டால் அங்கு விரைந்து வரும் போலீஸார் முதலில் செய்யும் காரியம் 'திருடனின் கைரேகைகளை அழிந்து விடாமல் காப்பதும், அதனைச் சேகரிப்பதுமாகும்' என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. இந்த கைரேகைகளைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் நுணுக்கம் இன்று நேற்று கண்டு பிடிக்கப் பட்டதல்ல. சுமார் 1500 - 1600 வருடங்களுக்கு முன்பே இது இருந்து வந்திருக்கிறது என்றால் உங்களுக்கெல்லாம் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

13 - ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீன தேசத்தில் நடைபெற்ற ஓர் கொலைக்காக 5 பேர் கைது செய்யப்பட்டிருந்தார்கள். இவர்களில் உண்மையான கொலைகாரன் யார் என்று கண்டு பிடிப்பது சிரமமாக இருந்தது. இந்தக் கொலை நடந்த இடத்தில் கை ரேகைகள் நன்கு பதிந்திருப்பது தெரிய வந்தது. அதன் உதவியைக் கொண்டு உண்மையான குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டான். வரலாற்று அடிப்படையில் கைரேகைகளைக் கொண்டு குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்ட முதல் வழக்கு இதுதான்! (13 - ஆம் நூற்றாண்டு!)

இதற்குப் பிறகு கைரேகைகளின் தனித்தன்மை பற்றி எத்தனையோ பேர் ஆராய்ச்சி செய்தார்கள். ஆனால் யாராலும் அதைத் தொடர்ந்து முயன்று அறிவியல் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. இந்த முயற்சி எல்லா நாடுகளிலும் மேற் கொள்ளப் பட்டது. 16 - ஆம் நூற்றாண்டில் இத்தாலியைச் சேர்ந்த விஞ்ஞானி கோஸ்மி என்பவர் கைரேகைகளைப் பற்றிய முறையான ஆராய்ச்சியை மேற் கொண்டார். கி.பி. 1800 - ஆம் ஆண்டு வாக்கில் டோக்கியோவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதில் முழு ஆர்வம் காட்டியதன் பலனாக இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து இதில் ஆராய்ச்சிகளை மேற்கு கொண்டனர்.

கி.பி. 1800 - ஆம் ஆண்டின் இறுதியில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி வில்லியம் என்பவர் ''ஃபிங்கர் பிரிண்ட் டயரக்டரி'' எனும் கைரேகை சம்பந்தமான அகராதி ஒன்றை எழுதி வெளியிட்டார். இப்புத்தகமானது உலகம் முழுவதிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதன் பின்னர் இந்திய ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து இங்கிலாந்து விஞ்ஞானி எட்வர்டு ஹென்றி எழுதிய ''கைரேகைகள் மற்றும் குற்றவாளிகள்'' எனும் நூலானது முதன் முறையாக




அறிவியல் சோதனை அடிப்படையில் ஒரு உண்மையை உலகிற்குத் தெளிவு படுத்திக் காட்டியது. ஒருவருடைய கை ரேகை மற்றவர்களிடமிருந்து மாறுபடு வது மட்டுமல்லாது இறந்த பின்னரும் கூட மாறாமல் அப்படியே இருக்கும் என்பதுதான் அவர்கள் கண்ட உண்மை. இதன் பின்னர் இத்துறையில் பலரும் ஆர்வம் காட்டினர். கைரேகை சம்பந்த மான பல்வேறு அலுவலகங்கள் உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் திறக் கப்பட்டன.


தற்போது இருப்பதைப் போன்ற முழுமை பெற்ற கைரேகை அமைப்பு 1902 - ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப் பட்டது. இம்முறையால் ஒரு வழக்கில் 55 குற்றவாளிகளின் கைரேகைகள் பதிவு செய்யப்பட்டு உண்மையான கொலையாளி கண்டு பிடிக்கப் பட்டான். ''திடீர் திடீரென போலீஸார் வருகிறார்கள் எங்களுடைய கைரேகை களை சந்தேகத் தின் பேரில் பதிவு செய்து கொண்டு செல்கிறார்கள். இது எங்களை அவமதிப்பது போல உள்ளது'' என்று ஒரு அமைப்பு அமெரிக்காவில் போராட்டத்தில் குதித் தது. எனவே இதைத் தவிர்க்க, 1920 - ஆம் ஆண்டில் ஓர் அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டு, கைரேகை களைப் பதிவு செய்ய போலீசுக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டது. உலகில் அதிக எண் ணிக்கையிலான கைரேகை களைப் பாது காத்து வருவது அமெரிக்க அரசுதான்.


இன்று நம் நாட்டில் நூறுரூபாய் கடன் வாங்கினாலும் 'பைனான்ஸ்... பத்திரங்களில் கைரேகை வாங்கிக் கொள்ளகிறார்கள். பத்திரங்களைப் பதிவு செய்யும் போதும் கைரேகை வாங்கப் படுகிறது. இன்னும் சொல்லப் போனால் ''ஆஸ்பத்திரிகளில் பிறக்கும் குழந்தைகள் மாறி விடாமலிருப்பதற் காகவும் கூட அப்பிஞ்சுக் குழந்தை களின் கைரேகைகள் இன்று பதிவு செய்யப் படுகின்றன.


''ஒட்டகச் சவாரிக்கு படகு வலிக்கிற துடுப்பை எடுத்திட்டு வரியே!''
''ஒட்டகம் பாலை வனக் கப்பல்ன்னு நீங்கதானப்பா சொன்னீங்க.....!''




முன் ஜாக்கிரதை முத்து!


மதுரை செல்லும் பேருந்தில் முத்துவும், மூர்த்தியும் பயணம் செய்தனர்.
கதை :- R. வெங்கடா-சலம்.
அமைப்பு :- 'ரே'..
படம் :



மதிய உணவுக்கு திருச்சியில் பேருந்து நின்றதும் டிரைவருடன் பயணிகளும் இறங்கினர்.
ஹோட்டல்..




அப்போது—முத்து—
மூர்த்தி நாமும் டிபன் சாப்பிட-லாம் வா!
பஸ் போயிட்டா?!
நாம டிரைவர் பின்னாலேயே போய் சாப்பிடலாம்! அவர் இல்லாம பஸ் எப்படிக் கிளம்பும்? தைரியமா வா.!
இருவரும் டிரைவருக்கு அருகில் அமர்ந்து டிபன் சாப்பிட்டனர்.


அரை மணி நேரத்துக்கு பின்- டிரைவர் பேப்பரை படிப்பதைக் கண்ட முத்து....
என்ன டிரைவர் சார்! மதுரை பஸ்ஸை எடுக்கலே? அரை மணி நேரம் ஆச்சே!
எனக்கு ஷிப்ட்டு முடிஞ்சு போச்சு! வேற டிரைவர் எடுத்துக்கிட்டு அப்பவே போயிட்-டாரே...!
ஹா!
ஹா!


பிருந்தாவனக் கவியரங்கம்







நிலா மாமா!





நிலா மாமா நிலா மாமா என்ன செய்றீங்க?
நாங்க அங்கே வந்திடவா என்ன சொல்றீங்க?
தலா நாங்க பத்துக்காக போட்டு வைச்சோங்க
தங்களையே கண்டு போக பயணச் சத்தமுங்க!

நாங்கள் அங்கே வந்து விட்டால் தொல்லை இல்லைங்க!
நன்றாய் ஆடிப் பாடிடலாம் மகிழ்ச்சி தானுங்க
தங்கி அங்கே வாழ்ந்திடவே துடிக்க நின்றோங்க
தயவு பண்ணி எங்களையும் தூக்கிப் போயிடுங்க!

- கே.எஸ். நரேந்திரன்



உலகம்

கிழக்கே ஞாயிறு உதிக்கிறது
குளிரும் பனியும் போகிறது
அழகாய் பறவைகள் பறக்கிறது.
அயர்வும் களைப்பும் மறைகிறது

செடிகளில் மலர்கள் மலர்கிறது
சந்தடி எங்கும் நிறைகிறது.
படிப்பும் உழைப்பும் சேர்கிறது.
பாங்காய் உலகம் வாழ்கிறது.


- கே.வி. ஜெயஸிம்ஹன்

பாரதி

பாரதி பாடலைப் படித்தாயா?
பாடலின் இனிமை சுவைத்தாயா?
வீரத்தின் வேகம் கண்டாயா?
வீணாம் பயத்தை ஒழித்தாயா?

சுதந்திரம் உழைப்பு அறிந்தாயா?
சீலம் தியாகம் கேட்டாயா?
புதுமை உணர்வு கொண்டாயா?
புதிய பாரதம் படைப்பாயா?

- க. ராமநாதன்



பயணம்



ஓடும் பஸ்ஸில் ஏறாதே
உயிரைப் பணயம் வைக்காதே
படியில் நின்று தொங்காதே
பள்ளம் உருள்வாய் மறவாதே!

தாவி பஸ்ஸில் ஏறாதே
தவறி விழுவாய் அறிவாயே
பாவி இவனே என்றேதான்
பயணிகள் சபித்திட வைக்காதே!

ஒழுங்காய் கட்டணம் தந்து விடு
ஓட்டுநர் பணியைச் செய்யவிடு
எழுதாச் சட்டம் இருக்கிறது
எழுந்து முதியோர் அமரவிடு!

- அழ. சண்முகம், கண்டனூர்.

பிருந்தாவனக் கவியரங்கம்



பம்பரம்

பம்பரமாம் பம்பரம்
பளபளக்கும் பம்பரம்
சோம்பல் சிறிதும் இன்றியே
சுழன்று ஆடும் பம்பரம்

நூலைக் கட்டி இழுத்திட்டால்
நன்கு சுழலும் பம்பரம்
தலையைச் சாய்த்து ஓடியே
தோற்றுப் போன பம்பரம்!

நண்பர் போடும் குத்தினை
நன்றாய் வாங்கும் பம்பரம்
தண்டனை யாய் வட்டத்தில்
தவிக்கும் அழகுப் பம்பரம்!

- ஆர். முகமதுமியான்தாத்.
சென்னை - 16.




பரதம் ஆடுவாயே!

குட்டி குட்டி மானே,
குறும்புப் பார்வை மானே
துள்ளி ஓடும் மானே
தொல்லை தரா மானே

கூடி வாழும் மானே
கொஞ்ச ஓடி வாயேன்
பாடிக் காட்டு வேனே
பரதம் ஆடு வாயே

- கே. தணிகைவேல்,
சென்னை - 2.





தஞ்சை!

வளம் கொழிக்கும் தஞ்சை
வளவன் ஆண்ட தஞ்சை
நிலம் செழிக்கும் தஞ்சை
நல்லோர் நிறைந்த தஞ்சை

கலைகள் கொஞ்சும் தஞ்சை
காவிரி பாயும் தஞ்சை
உலகே வியக்கக் கோவில்
உயர்ந்து நிற்கும் தஞ்சை!

- அ. துர்க்கா தேவி



நாய்க்குட்டி

நாலு நாளாய் அடம்பிடித்து
நானும் வாங்கிய நாயுங்க!
காலையில் நன்கு குளிப்பாட்டி
கட்டிப் போட்ட நாயுங்க!

ஜிம்மி என்றே அழகாக
செல்லப் பெயரை இட்டேங்க
பள்ளி சென்று திரும்பியதும்
பார்த்தால் அதனைக் காணங்க!

வீட்டின் அருகே வீதியிலே
விரைந்து சென்றே பார்த்தேங்க
கட்டிப் போட்ட நாய்க்குட்டி
குப்பையில் கிடந்து புரளுதுங்க!

- கே. யுவராஜ, ஆரணி.





உங்கள் நூலகம்

தங்கத் தம்பி – புவனை கலைச்செழியன் – பக். 96, ரூ 15/- குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், (மூவரசம் பட்டு அருகில்), சென்னை – 600 091.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறுவர் இலக்கியம் படைத்து வரும் பண்பட்ட எழுத்தாளரின் படைப்பு இந்த நாவல். மாமியின் கொடுமை தாங்காது வீட்டை விட்டு வெளியேறும் சுந்தரம் தனது உண்மை உழைப்பு நாணயம் காரணமாக கடைக்காரரின் அன்புக்குப் பாத்திரமாகி உயர்ந்து இறுதியில் தனக்குத் தீமை செய்தவர் களுக்கும் நன்மை செய்து பண்பில் உயர்ந்து தங்கத் தம்பியாகிறான். நல்ல நடை. அருமையான நாவல்.

பாப்பா மகிழ பத்து கதைகள் – எஸ். ஆர். ஜி. சுந்தரம், பக். 96, ரூ 12/- பாற்கடல் பதிப்பகம், 12, ஆறுமுகம் சந்து, சென்னை – 600 005.

பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு ஏற்ற கதைகள் இல்லை என்ற குறையைப் போக்க வந்த சிறுகதைத் தொகுப்பு. கதை கேட்கும் குழந்தைகளுக்கு நல்ல விருந்து. அவர்களுக்கு ஏற்ற வகையில் பெரிய எழுத்து. கண்கவர் படங்கள். மனத்தை ஈர்க்கும் கதைகள். குருவிக் கூட்டில் சிலிங்கிக் குட்டி நல்ல அழகான கற்பனை. பரிசளிக்க ஏற்ற நூல்.

மாயா ஜாலக் கதைகள் – எஸ். ராமமூர்த்தி – பக். 76 – ரூ. 10/-, மீனா புத்தகப் பண்ணை, 5, பார்த்தசாரதி லே அவுட், கே. கே. ரோடு, விழுப்புரம் – 605602.

இரண்டு மந்திர தந்திரக் கதைகள். சாபத்தால் உருமாறி அரக்கனிடம் சிக்கியிருக்கும் அரச குமாரிகளை மீட்டு, முத்தையன் அரசனாவது முதல் கதை. தன்னைப் பலியிட முயலும் மந்திர வாதியையே பலியிட்டு ஆனந்தன் பெருமை யடைவது இரண்டாவது கதை. மாயாஜால, மந்திர தந்திரக் கதைகளை விரும்புவோர்க்கு நல்ல விருந்து. ஒரு கதைக்கு ஒரு படமாவது இருந்திருக்கலாம்.

அறிவியல் வெளிச்சங்கள் – முனைவர் மலையமான் – பக். 136, ரூ 17/- ஒளிப் பதிப்பகம், 63 டாக்டர் ரங்காச்சாரி சாலை, சென்னை – 18.

மேகங்களில் எத்தனை வகைகள் என்பது உங்களுக்குத் தெரியுமா? கருண் மேகம், குவியல் மேகம், அடுக்கு மேகம், கருள் குவியல் மேகம், அடுக்கு குவியல் மேகம், உயர் குவியல் மேகம், உயர் அடுக்கு மேகம், மழை அடுக்கு மேகம், குவியல் மேகம் இப்படி அருமையான பல்வேறு அறிவியல் தகவல்களை ஆசிரியர் தந்திருக்கிறார். ஏவிஎம் அறக்கட்டளையின் பரிசு பெற்ற நூல் என்றாலே இதன் சிறப்பு விளங்கும்.

பச்சைக் கிளி – தெ. சி. தெய்வசிகாமணி, பக். 72, ரூ. 9/- பாவை பதிப்பகம், 309, லிங்கி செட்டி தெரு, சென்னை – 600 001.

சிறுவர் இலக்கியத்தில் தனி முத்திரை பதித்துள்ள பழம்பெரும் எழுத்தாளரின் உன்னதமான 9 மணிக் கதைகள் அடங்கிய அழகுத் தொகுப்பு. ஒவ்வொரு கதையும் ஒரு புதிய கதைக்களம். சிறுவர் இலக்கியம் படைக்க விழைவோருக்கு வழிகாட்டியாக அமையும் கதைகள். கதைக் களம், நடை, அச்சு, படங்கள் என்று எல்லாமே அழகாக அமைந்துள்ள புத்தகம். பரிசளிக்கப் பொருத்தமானது. ஆசிரியருக்கு ஏற்றமளிப்பது.

தபால் தலையின் கதையும், சேகரிப்போருக் கான குறிப்புகளும் பக். 100, ரூ. 14/- மணி மேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை – 600 017.

PHILATELY என்ற தபால் தலை சேகரிக்கும் பொழுதுபோக்கைப் பற்றி தமிழில் விரிவான நூல் இல்லை என்ற குறையை இந்த நூல் போக்குகிறது. தபால் தலைகளின் வரலாறு, எப்படி செல்லாம் சேகரிப்பது, எப்படி ஒழுங்குபடுத்துவது, பாதுகாப்பது போன்ற பல தகவல்களை நூல் தருகிறது. ஆல்பம் செய்முறை கூட உள்ளது என்றால் என்ன கூற வேண்டும்? இத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் மட்டுமல்லாது மற்றவர் களும் வாங்கிப் படிக்கலாம். பயனுள்ள பதிப்பு.

தங்கச் சுரங்கத்திற்கு ஒரு சாவி – பூதலூர் முத்து – பக். 132, ரூ 14/- வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, சென்னை – 17.


கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் 14 மணியான சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தனியான கதைக் களன்; தனித்தனிப் பண்பை வலியுறுத்துபவை. சிறுவர் இலக்கியத்தைச் செழுமையுறச் செய்து வரும் ஆசிரியரின் முத்தான படைப்பு. பாதிக் கதை களுக்கு மேல் கோகுலத்தில் வெளிவந்தவை. (இதை எங்கேயாவது குறிப்பிட்டிருக்கலாம்.) படங்கள் நூலுக்கு அழகுசேர்க்கின்றன. பரிசு வழங்க ஏற்ற நூல்.

அப்பாவை அழைத்து வா! மா. கமலவேலன் – பக். 108, ரூ 14/- விடியல் வெளியீட்டகம், 109, மேலைத் தெரு, கிருட்டிணராயபுரம், 639 102, திருச்சி மாவட்டம்.

கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமான ஆசிரியரின் மணியான ஏழு நாடகங்கள் இதில் உள்ளன. எல்லாம் பிள்ளைகள் பள்ளியில் நடிக்க ஏற்றவை. இதில் உள்ள பல நாடகங்கள் கோகுலத்தில் வெளியாகி, வாசகர் களின் பாராட்டைப் பெற்றவை என்றால் நூலின் சிறப்பைப் பற்றி வேறு என்ன கூற வேண்டும்? சிறுவர்களுக்கு நாடக நூல்கள் இல்லை என்ற குறையை இது போக்கும்.

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர் லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண் டும். சிறுவர் நூல்களும், பொது அறிவியல் நூல்களும் மட்டுமே இப்பகுதியில் மதிப்புரை செய்யப்படும். மற்ற நூல்களை அனுப்ப வேண்டாம்.

புலி பசித்தால் ஜாங்கிரியும் தின்றும்!



பொன்னையா என்று கேட்டால் யாருக்கும் தெரியாது. பாயசம் பொன்னையா என்று கூறினால் உடனே எல்லோரும் கூறிவிடுவார்கள். பொன்னையாவும் பாயசமும் அவ்வளவு பிரபலம்!

பொன்னையா ஏழாவது வகுப்பில் படித்து வந்தான். பாயசம் என்றாலே சிறுவர்களுக்கு விருப்பம்தான். ஆனால் பொன்னையாவின் அளவுக்கு பாயச வெறி கொண்டவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். பிள்ளையார் சதுர்த்திக்கு கொழுக்கட்டை பண்ணுவதைப் பற்றியோ, கிருஷ்ண ஜெயந்திக்கு முறுக்கு சீடை செய்வதைப் பற்றியோ அவனுக்கு அக்கறை இல்லை. பாயசம் இருந்தால் அது போதும் என்று அம்மாவிடம் சொல்லி விடுவான். தினமும் பாயசம் பண்ணினால்கூட பொன்னையா சலிக்காமல் சாப்பிடுவான்.

பொன்னையாவின் மாமாவுக்கு வேலை கிடைத்தது. அதைக் கொண்டாட அவர் அவனையும் அழைத்துக் கொண்டு மிகப் பெரிய ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குப் போனார். ''பொன்னு, உனக்கு என்ன வேணுமோ கேள். எதைக் கேட்டாலும் வாங்கித் தரேன். விலையைப் பற்றி யோசிக்காதே'' என்று கூறினார். வெயிட்டர் வந்து அச்சடித்த பலகார வகை லிஸ்டைத் தந்தார். பொன்னு அதை வாங்கிப் பார்த்தான். அவன் முகம் ஏமாற்றத்தால் நிறைந்தது.

''என்ன வேணும் பொன்னு?'' என்று கேட்டார் மாமா.

''எனக்கு முக்கியமா வேண்டிய இனிப்பு, இந்த லிஸ்டில் இல்லையே மாமா!'' என்றான் பொன்னையா.

''என்ன தம்பி! சவால் விடற மாதிரிக் கேட்கிறே? எங்க ஓட்டல்ல இல்லாத இனிப்பும் பலகாரங்களும் இனிமே யாராவது கண்டு பிடித்தால் தான் உண்டு. உனக்கு என்ன வேணும் சொல்லு?'' என்று கேட்டார் வெயிட்டர்.

கசங்காத உடையணிந்து மிடுக்காக நின்ற வெயிட்டரைப் பார்த்து, ''எனக்கு வேண்டியது பாயசம். அது உங்க லிஸ்டில் இல்லையே?'' என்று கேட்டான் பொன்னையா.

வெயிட்டர் அசந்து போனார். பிறகு, ''தம்பி, பாயசம் ஒரு பலகாரம் இல்லை தம்பி. அது ஒரு சாப்பாடு அயிட்டம். அதனால் சாப்பாடு லிஸ்டில் தான் அது இருக்கும்'' என்றார்.


''சாப்பாட்டோட ஜாங்கிரி போடறீங்க. கேக் போடறீங்க. சில சமயம் சப்பாத்தி கூடப் போடறீங்க. இதெல்லாம் பலகார அயிட்டம்தானே? இதையெல்லாம் சாப்பாட்டு லிஸ்ட்டுல

சின்னபாபு

போடும்போது, சாப்பாடு லிஸ்டில் இருக்கும் பாயசத்தை ஏன் பலகார லிஸ்டில் சேர்க்கக் கூடாது?'' என்று கேட்டான் பொன்னையா.

வெயிட்டர் வாயடைத்துப் போனார். ''தம்பி, நீ பேசற போக்கைப் பார்த்தால், பாயசத்தைப் பலகார அயிட்டங்களோட சேர்க்கணும்னு ஒரு போராட்டாம நடத்தினாலும் நடத்துவே போல இருக்கே! பாயசம், சாப்பாட்டுப் பிரிவில்தான் கிடைக்கும். இருந்தாலும் உனக்காக ஸ்பெஷலாக ஒரு கப் வரவழைத்துத் தரேன்'' என்று தப்பித்துக் கொண்டார்!

பொன்னையாவுக்கு பாயசம் என்றால் அவ்வளவு விருப்பம்! அவனுக்கு வகுப்பில் உள்ள, ஏன் அந்தப் பள்ளியில் உள்ள அத்தனை மாணவர்களின் பிறந்த தேதியும் அத்துபடி! காரணமாகத்தான் அதைத் தெரிந்து வைத்திருந்தான். அந்த மாணவனின் பிறந்த நாள் வருவதற்கு ஒரு வாரம் முன்பே, அவனை நேரில் சென்று பார்ப்பான், ''டேய் உனக்கு அடுத்த புதன்கிழமை பிறந்த நாள் வருதே!'' என்று பொன்னு கேட்டதும் அந்த மாணவன் அசந்து போவான்! அவனுக்குக்கூட அது மறந்திருக்கும். ''அன்னிக்கி உங்க வீட்டில் பாயசம் பண்ணுவாங்க



இல்லே? எனக்கு ஒரு கப் கொண்டு வாயேன். நான் யாருக்கும் தெரியாம குடிச்சிடறேன். உனக்குக் கஷ்டமா இருக்கும் என்றால் சொல்லு, நானே உங்க வீட்டுக்கு வந்து பாயசம் வாங்கிக் குடிக்கிறேன்'' என்பான்.

இப்படி பொன்னு பாயசம் சாப்பிடாத நண்பர்கள் வீடே கிடையாது! அவன் அதற்காகக் கூச்சப்படவும் மாட்டான். தேர்வுக்குக் கூட அப்படி திட்டம் போட்டுப்படிக்கமாட்டார்கள். ஆனால் பொன்னு, அடுத்த வாரம் யார் யார் வீட்டில் பாயசம் கிடைக்கும் என்பதை முன்னதாகவே லிஸ்ட் போட்டு ஒரு திட்டமும் தீட்டி வைத்துக் கொள்வான். எந்த நண்பர்கள் வீட்டில் கல்யாணம் என்றாலும் பாயசம் குடிக்க போய் விடுவான். எப்படியும் வாரத்தில் ஒரு நாளாவது பாயசம் கிடைக்கும்படி அவன் பார்த்துக் கொள்வான்.

ஒரு முறை, பத்து நாட்களுக்கு மேலாகியும் பொன்னையாவுக்குப் பாயசம் குடிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அந்த வாரத்தில் அவன் நண்பன் ஒருவனுக்குப் பிறந்த நாள். பத்து நாட்களுக்கு முன்பே அட்வான்ஸ் வாழ்த்துக் கூறி, பாயசம் கிடைக்க ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் எதிர்பாராத விதமாக அந்த நண்பனுக்கு உடம்பு சரியில்லாது போகவே, அவன்



பிறந்த நாளைக் கொண்டாட முடியாமல் போயிற்று. அதனால் பொன்னையாவுக்கும் பாயச வாய்ப்புத் தவறியது. யாரைப் பிடித்தால் பாயசம் கிடைக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தான் பொன்னு.

"பொன்னு, எங்க மேலதிகாரிக்கு பதவி உயர்வு கிடைத்து மாற்றலாகிப் போகிறார். அவருக்கு நாங்க இன்னிக்கி ஒரு டீ பார்ட்டி தரோம். நீயும் வாயேன்" என்று அழைத்தார் அப்பா.

"டீ பார்ட்டியில் என்ன தரப் போறீங்க? ஒரு துண்டு கேக் இல்லே ஜாங்கிரி. போண்டா, பகோடா, காப்பி. கூட ஒரு ஐஸ்கிரீம் இருக்கும். அவ்வளவுதானே? பாயசம் இல்லாத ஒரு பார்ட்டியும் பார்ட்டியா? நான் மட்டும் அமைச்சர் ஆனால், பாயசம் இல்லாம யாரும் பார்ட்டி தரக் கூடாது என்று சட்டம் போடுவேன். நான் வரலே. பாயசம் கிடைக்கலேன்னா இந்த புலி பட்டினி கிடந்தாலும் கிடக்கும் தவிர, ஜாங்கிரி கேக்குன்னு அல்பத்தனமானதை எல்லாம் திங்காது" என்று ஜம்பமடித்தான் பொன்னையா.

"போடா பாயசப் பைத்தியம்" என்று போய் விட்டார் அப்பா.



"நல்ல முகூர்த்த நாள். ஊரில் உள்ள எல்லாச் சத்திரங்களிலும் கல்யாணம் நடக்கிறது. ஒன்றிலாவது நமக்குத் தெரிந்தவர்கள் யாரும் கண்ணில் படலையே!" என்று எண்ணியபடி எல்லாச் சத்திரங்களையும் நோட்டம் விட்டான் பொன்னு. எல்லாம் ஒரே ஏமாற்றம். தெரிந்த முகமாக யாருமே தெரியவில்லை.

பொன்னு ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருந்தான். எதிரே ஒரு சைக்கிள் ரிக்ஷா. அதில் ஆள் உயரத்தில் மூடப்பட்ட அண்டா இருந்தது. அதைப் பிடித்துக் கொண்டு ஒரு குண்டு ஆசாமி உட்கார்ந்திருந்தார்.

பொன்னையாவைக் கண்டதும் குண்டு, "தம்பி மணிகண்டன் திருமண மண்டபம் எங்கேப்பா இருக்கு?" என்று கேட்டார்.

"நீங்க அதைத் தாண்டி வந்துட்டீங்களே! இப்படியே வந்த வழியிலேயே போய், இடது பக்கம் திரும்பினால் மூன்றாவது கட்டடம்" என்று கூறிய பொன்னு, "என்ன சார் அண்டாவிலே! ஒரேயடியா வாசனை ஜமாய்க்கிறதே?" என்று அடக்க முடியாத ஆவலுடன் கேட்டான்.

"இது நிறைய மலையாளத்து இடித்துப் பிழிந்த பாயசம். அந்தக் கல்யாணத்துக்குத்தான் போகுது. இந்தப் பாலக்காட்டு ரங்கன் பாயசம் வைச்சால், பட்டி தொட்டியெல்லாம் மணக்கும். தெரியுமா?" என்று பீற்றிக் கொண்டார் குண்டு.

ரிக்ஷா திரும்பியது. வேகமாக ஓடியது. மறைந்தது.

பாயச வகைகளில் பொன்னு கரை கண்டவன். வெல்லப் பாயசம், கல்கண்டுப் பாயசம், முந்திரிப் பாயசம், சேமியாப் பாயசம், தேங்காய்ப் பாயசம், கேரளத்து சக்கைப் பிரதமன் என்று அவன் சுவைக்காத பாயச வகைகளே கிடையாது. மலையாளத்து இடித்துப் பிழிந்த பாயசத்தை அவன் சாப்பிட்டதே கிடையாது. ஆனால் அதன் பெருமையை அவன் நிறையக் கேள்விப்பட்டிருந்தான். ஒரு முறையாவது அதைச்




கவைக்க வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு இருந்தது. ஆனால் அதற்கு அதிகச் செலவாகும் என்பதோடு, அதிகமாகப் பாடுபடும்படி இருக்கும் என்பதால் யாருமே அதைக் கல்யாணங்களுக்குப் பண்ணியதாகத் தெரியவில்லை. இப்பொழுதுதான் அது அவனை நெருங்கி வந்திருக்கிறது! துணியால் வாயைக் கட்டி, தாம்பாளத்தைப் போட்டு மூடி அண்டாக்குள் வைத்திருக்கும் போதே இந்த வாசனை அடித்தால், அதைச் சாப்பிட்டால் எப்படி இருக்கும்?

இடித்துப் பிழிந்த பாயசத்தின் மேல் இருந்த அடக்க முடியாத ஆசையால், அவசியமானால் அந்த குண்டுவுக்கு எடுபிடியாக வேலை செய்யவும் தயாராகிவிட்ட பொன்னு, 'சார் சார்' என்று கத்திக் கொண்டே ரிக்ஷாவின் பின்னால் ஓடினான். ரிக்ஷா பறந்து விட்டது. அதனால் என்ன வந்தது? கல்யாண மண்டபமோ தெரியும். குண்டு தன்னைப் பாலக்காட்டுக்காரன் என்று பீற்றிக் கொண்டது நினைவுக்கு வந்தது.

பாயச ஆசை உந்தித் தள்ள, வந்தது வரட்டும் என்று பொன்னு ஒரு முடிவுக்கு வந்தான். அடுத்த பத்தாவது நிமிஷம் அவன் திருமண மண்டபத்தில் இருந்தான்.

இரண்டு மூன்று வாண்டுகள் பன்னீர் தெளித்து, சந்தனம் கொடுத்து, கல்கண்டும் தந்தார்கள். சமையல் பகுதி எங்கே இருக்கிறது என்று நோட்டம் விட்டபடி உள்ளே வந்தான் பொன்னு. முந்தின தினத்தன்றுதான் ஏதோ திருடு போயிருந்ததால், நாலைந்து பேர் வருகிறவர்களைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் கண்ணில், சமையல் கட்டை நோட்டம் விட்ட பொன்னையா பட்டுவிட்டான், ''வா தம்பி. பெண்ணுக்குச் சொந்தமா? பிள்ளைக்கு உறவா?'' என்று கௌரவமாகக் கேட்டார்.

பொன்னுவுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. சரி, இன்று தருமஅடி



''இன்னைக்கு எப்படியும் உன்னை நேராகப் படம் பிடிக்காமல் விட மாட்டேன்!''

கிடைக்கப் போகிறது என்ற முடிவுக்கு வந்துவிட்டான். பயத்தில் குண்டுவின் பெயர் மறந்து விட்டது.

கேட்டவருக்கு சந்தேகம் வந்து விட்டது. பேச்சில் பணிவும் மரியாதையும் போய் விட்டது. ''யார்ரா நீ? உன் பேர்என்ன?'' என்று சட்டையைப் பிடித்துக் கொண்டார். கூட்டம் கூடிவிட்டது.

''என் பேர் பொன்னையா. பொன்னு'' என்று திக்கித் திணறினான் பொன்னு.

''பொண்ணுக்கோ, பிள்ளைக்கோ சொந்தமா? இல்லே வேண்டியவனா? கல்யாணப் பத்திரிகை வைச்சிருக்கியா?'' - பிடித்தவர் கையை ஓங்கி விட்டார். அவர் ஒன்று போட்டு விட்டால் அதைத் தொடர மற்றவர்கள் தயாராக இருந்தனர்.

பொன்னுவின் கண்கள் பயத்தால் நிலை குத்தின 'பாயச ஆசையால் பரிதாபமாக அடிபட்ட சிறுவன்' என்று கொட்டை எழுத்தில், உடம்பு முழுக்க காயங்கள் நிறைந்த கோலத்தில் செய்தித்தாளில் அவன் படம் வருவது போன்ற கோரம் கண்ணில் தெரிந்தது!

இதற்குள் ஓர் அபயக் குரல் கேட்டது. ''சார் சார், அடிக்காதீங்க. பையன் பெயரைப் பொன்னையன்னு தானே சொன்னான்? இது எனக்கு உதவியா ஃப்ளாஷ் லைட் பிடிக்க வந்த பையன் சார். சாதாரணமாக வரும் பையனுக்கு இன்னிக்கி உடம்பு சரியில்லை. அதனால, நண்பர் ஒருவரோட பையனை அனுப்பச் சொல்லியிருந்தேன். நீங்க பண்ணின கெடுபிடில பையன் அரண்டு போயிட்டான்'' என்று கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்தார் வீடியோ காமிராக்காரர்.

'மன்னிச்சுக்க தம்பி' என்று எல்லோரும் விலகிக் கொண்டு சென்றனர். 'அப்பாடி தப்பித்தோம்' என்று பெருமூச்சு விட்டான் பொன்னு.

''தம்பி, நான் உன்னைப் பார்த்தது இல்லே. உங்கப்பா சிங்காரத்திடம் சொல்லி உன்னை உதவிக்கு அனுப்பி வைக்கச் சொன்னேன். நல்ல வேளை. வா..வா.. ஹெட் லைட்டைத் தூக்கிப் பிடி, இன்னும் இரண்டே மணி நேரம் தான்,'' என்று அவனை அழைத்துச் சென்றார் காமிராக்காரர்.

'சிங்காரம் பிள்ளை பொன்னையா, என் பெயர் கொண்ட நீ வாழ்க. எக்கச்சக்கமா இங்கே வந்து இன்னும் குழப்பாம, நீ இன்னிக்கி வராமலேயே இரு' என்று வாழ்த்தியபடி காமிராக்காரரைப் பின் தொடர்ந்தான் பொன்னு.

பொன்னுவை மிரட்டியவர், ''இருங்க சார், டிபன் சாப்பிட்டு வரட்டும்'' என்று தானே அவனை அழைத்துச் சென்று டிபன் சாப்பிட உட்கார வைத்தார். பொன்னு சமையற்கட்டை ஒரு நோட்டம் விட்டான். குண்டுவைக் காணோம். பாயச அண்டா அடுப்பில் ஏறியிருந்தது.

''சார், இப்போ பசிக்கலே. சாப்பாடு ஆனதும் முதல் பந்தியில் சாப்பிட்டு விடுகிறேன்'' என்றான் பொன்னு. பாயசம் கிடைக்குமே!

''சாப்பாட்டுப் பந்தியை வீடியோ எடுக்கணும். எப்படி உன்னால முதல் பந்தியில சாப்பிட முடியும்? காலையில் வந்த உடனேயே உங்க வீடியோ காமிரா மேன், எனக்கும் வரப்போகும் என் உதவியாளருக்கும் எந்த அயிட்டமும்

சறுக்கு மரம் ஏறலாம்!
சறுக்கி சறுக்கி மகிழலாம்!
அட்டையில் சறுக்கு மரம்
சறுக்குபவர்கள் :
ஐஸ்வர்யா, பிரசாத்
வண்ணப்படம் : யோகா

விட்டுப் போகாமல் எடுத்து வைச்சிருங்க. நாங்க எல்லாத்தையும் படமெடுத்து முடிச்சதும் மொத்தமா சாப்பிடறோம்னு சொல்லிட்டார்,'' என்று கூறினார் மிரட்டியவர்.


பாயசம் நிச்சயம் என்ற நினைப்பில் காமிராக்காரருக்கு, ஹெட் லைட்டைத் தூக்கிப் பிடித்து பொழுதைக் கழித்தான் பொன்னு. இடையிடையே, அந்த இன்னொரு பொன்னய்யா வந்து விடுவானோ என்ற உதைப்பும் இருந்து கொண்டே இருந்தது!

'தூக்கிப்புடி.', சாச்சுப்புடி என்று காமிராமேன் இரண்டு மணி நேரம் அவன் பெண்டைக் கழற்றி வேலை வாங்கினார். பாயச ஆசையில் சகித்துக் கொண்டான் பொன்னு. ஒரு வழியாக சாப்பாட்டுப் பந்தி எல்லாம் முடிந்தது. காமிராவை மடக்கி உறைக்குள் போட்டு மூட்டை கட்டினார் காமிரா மேன். இருவரையும் தனியாக சாப்பிட உட்காரவைத்துப் பரிமாறினார்கள். எல்லா அயிட்டமும் வந்தது. பாயசம் வரவில்லை! கடைசியில் வரும் என்று எண்ணியிருந்த பொன்னுவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கடைசிவரை பாயசமே வரவில்லை.

''ஏன் சார், பாயசம் வரலையே?'' என்று காமிரா மேனிடம் கேட்டான் பொன்னு.

''நான்தான் வேண்டாம்னு சொன்னேன் தம்பி. எனக்கு சர்க்கரை வியாதி. சொல்லும் போது உன் நினைப்பு வரலே'' என்று பரிதாபமாக பதிலளித்தார் காமிராமேன். உள்ளே ஓடிப் போய் விட்டுத் திரும்பிய சமையல்காரர், ''பாயச அண்டாவும் காலி. இடித்துப் பிழிந்த பாயசமா, எனக்குக் கொடு, உனக்குக் கொடுன்னு, எல்லாரும் டம்ளர் டம்ளரா வாங்கிக் குடிச்சு காலி பண்ணிட்டாங்க'' என்றார்.

பாவம் பொன்னு. எடுபிடியாக இருந்ததுதான் மிச்சம்! ஜாங்கிரியைக் கையில் எடுத்தான்! பசித்தால் புலியும் ஜாங்கிரி தின்னும்!



தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டத்தை
எட்டிக் கொஞ்சம் பாருங்கள்!
உங்கள் கருத்தைச் சொல்லாக்கி
உரிய பெயரைச் சூட்டுங்கள்!

திசைகள் பலவே அதற்கேற்ப
சிரிக்கும் மலர்கள் பற்பலவாம்;
அசைந்து காற்றில் தலையாட்டி
அழைக்கும் அழகு வெகுநேர்த்தி.

சிவப்பு ரோஜா ஒரு பக்கம்;
சீராய் முல்லை மறுபக்கம்;
குவிந்து காணும் குடைமல்லி
குறுக்கும் நெடுக்கும் தலையாட்டும்.

வாடா மல்லி நிறம் வேறு;
மஞ்சள் நிறத்தில் அரளிப் பூ;
ஊடே தெரியும் மற்றொரு பூ
ஊதா நிறத்தில் கண்சிமிட்டும்.

பலவாய்ப் பூக்கள் இருந்தாலும்,
பாத்தி பிரித்து வைத்தாலும்
நிலத்தின் பெயரோ ஒன்றேதான்
நெஞ்சைக் கவரும் பூந்தோட்டம்.

நமக்குள் பேதம் பலவாகி
நமக்குள் எல்லை வகுத்தாலும்
நமக்குப் பெயரோ ஒன்றேதான் -
நானும் நீயும் மனிதன்தான்.

ரு. துளசிதாஸ்



உலகெங்கும் கேட்கும் உன்னத மணியோசை!


அதிகாலை நேரம். வானொலியைப் போட்டு லண்டன் ஒலிபரப்பை வைக்கிறோம். நிகழ்ச்சிகள் தொடங்கு முன் அருமையான கடிகார மணி ஓசை கேட்கிறது. மனத்தை என்னவோ செய்கிறது. அவ்வளவு அடக்கமான, அதே நேரத்தில் கம்பீரம் குறையாத மணியோசை! அதைக் கேட்டுப் பார்த்தவர்களுக்கே அதன் அருமை புரியும்!

இந்த அற்புதமான மணி ஓசையைத் தரும் கடிகாரத்தின் பெயர்தான் பிக்பென். உலகத்தின் பெருமைமிக்க மிகப் பெரிய கடிகாரங்களில் இதுவும் ஒன்று.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயங்கி வரும் வெஸ்ட் மினிஸ்டர் கட்டடத்தை ஒட்டிய கிழக்குப் பகுதியில் இந்த கடிகாரத்தின் மணிக்கூண்டு அமைந்துள்ளது. இதை அங்கு நிறுவப் பாடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் சர் பெஞ்சமின் ஹால் என்பவர். இவர் லண்டனின் பொதுப் பணித்துறை தலைமைக் கமிஷனராக இருந்தவர். வெஸ்ட் மினிஸ்டர் கட்டடமும், வானுயர் கோபுரக் கடிகாரமும் தேம்ஸ் நதிக்கரையில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புகழ்மிக்க கோபுரக் கடிகாரத்தை 1854 ஆம் ஆண்டிலேயே செய்து முடித்து விட்டார்கள். ஆனாலும் 1859 - ஆம் ஆண்டில்தான் இது கோபுரத்தில் பொருத்தப்பட்டது. இந்தக் கடிகாரத்தைச் செய்து முடிக்க அந்தக் காலத்திலேயே 22,000 பவுன்கள் செலவாயிற்றாம்!

பிக்பென் கடிகாரத்தின் முகம் 22 அடி விட்டமுடையது. தொடக்க காலத்தில் இதற்கு வாரம் ஒரு முறை சாவி தர இரண்டு மணி நேரம் பிடித்தது. பிற்காலத்தில் இது மின்சாரத் தால், புகழ்பெற்ற கிரீன்விச் கடிகாரத்துடன் இணைக்கப்பட்டு, மிகவும் துல்லிய





மாக மணி காட்டத் தொடங்கியது. இதன் பெண்டுலத்தின் நீளம் பதிமூன்று அடிகள்! ஒவ்வொரு கடிகார முள்ளின் எடையும் 101 கிலோ. நீளம் 4.3 மீட்டர். இந்த கடிகாரத்தைத் தாங்கும் கோபுரத்தின் உயரம் 55 மீட்டர்!

இந்தக் கடிகாரம் உருவாகக் காரணமான சர் பெஞ்சமின் ஹாலின் நினைவுக்குப் பெருமை கூட்டவே 'பிக்பென்' என்று பெயரிடப்பட்டதாகப் பலரும் கூறினாலும், புகழ்பெற்ற பிரிட்டிஷ் குத்துச்சண்டை வீரர் பெஞ்சமின் காண்ட் என்பவரின் நினைவாகவே பெயரிடப்பட்டதாகவும் கூறுகிறார்கள். எது எப்படியோ, இந்த இரண்டு பெஞ்சமின்களில் ஒருவருடைய பெயரைக் கொண்டு இந்த பிக்பென் உயர்ந்து நிற்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தக் கடிகாரத்தை அரும்பாடுபட்டு வடிவமைத்து வெற்றி கண்டவர் ஈ.பி. டென்ஷன் என்பவர். இவரது பெயரை எல்லோரும் மறந்து விட்டிருக்கின்றனர்.

இதன் மணிக்கூண்டு உச்சியை அடைய 374 படிகள் இருக்கின்றன. கிரீன்விச் கடிகாரத்திற்கு இணையாக, மிகத் துல்லியமாக மணிகாட்டும் பிக் பென், இதுவரை ஒருமுறை கூடப் பழுதடைந்ததில்லை. இரண்டாம் உலகப் போரில் பகை நாட்டு விமானங்கள் லண்டன் மாநகரில் குண்டு மழை பொழிந்து தள்ளியது. பல கட்டடங்கள் தரைமட்டமாகிவிட்ட போதும், பிக்பென் எந்தவிதமான சிறு சிராய்ப்பும் கூட இன்றித் தப்பியது!


லண்டன் வானொலியில் காலையில் முதல் நிகழ்ச்சிகளைத் தொடங்கும் முன், இந்த மனங்கவரும் 'பிக்பென்' மணி ஓசையை ஒலிபரப்புகிறார்கள்! ஒரு நாள் பிக்பெனின் மணியோசையை லண்டன் வானொலியில் கேட்காவிட்டால் மக்கள் தவித்துப் போவார்கள். தங்கள் கடிகாரத்தை அது ஒலிக்கும் மணிக்கு ஏற்ப மாற்றி வைத்துக் கொள் வார்கள்! லண்டன் பி.பி.சி. வானொலி மூலமாக பிக்பென்னின் மனங்கவர் மணியோசை உலகமெங்கும் ஒலித்து மக்களைக் கிறங்க வைக்கிறது.

பழுது என்ற பேச்சையே அறியாத இந்த நூற்றி முப்பத்தைந்து வயதுக் கடிகாரம், சீரமைக்கும் தவிர்க்க இயலாத பணிகளுக்காக 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 முதல் 17 வரை நிறுத்தி வைக்கப்பட்ட போது, இந்த பிக்பென்னின் மணியோசையைக் கேட்க முடியாது மக்கள் தவித்த தவிப்பு அதிசயிக்கத் தக்கது. வேறு வழியின்றி பதிவு செய்து வைத்திருந்த பிக்பென்னின் மணியோசையை, வானொலியில் ஒலிபரப்பினார்கள். மக்கள் சமாதானமடைந்தார்கள்! இந்த அளவுக்கு உலக மக்களை அடிமையாக்கி வைத்திருக்கிறது பிக்பென்!

லண்டன் நகரின் அழகுக்கு அழகு சேர்க்கும் இந்தப் பெருமைமிக்க பிக்பென் மணிக்கூண்டை, தங்கள் பெரிய எள்ளுப் பாட்டி (கொள்ளுப் பாட்டியின் அம்மா!) 'கிரேட் கிராண்ட் மா' என்று செல்லமாகக் குறிப்பிடுகின்றனர்!

– அப்துல்

பிருந்தாவனக் கவியரங்கம்



சுதந்திரக் கொடி

எங்கள் நாட்டின் உரிமைக்கொடி!
எழுந்தது வானில் என்றுபடி!
பொங்கும் வளங்கள் சேர்த்தகொடி!
பூத்தது வானில் என்றுபடி!

அடிமை விலங்கை முறித்தகொடி!
அறத்தின் வலிமை உரைத்தகொடி!
மிடிமை அகற்ற வந்தகொடி!
மேன்மை நிகழச் செய்தகொடி!

அண்ணல் காந்தி கண்டகொடி!
அன்பர் குமரன் காத்தகொடி!
இன்னும் நலங்கள் சேர்க்கும்கொடி!
இதைநீ என்றும் போற்றிப்பிடி!

வளமை நேர்மை தியாகமென
வாழ்வில் உணர்த்தும் வண்ணக்கொடி!
உலகோர் வியக்க உயர்ந்தகொடி!
ஒன்றாய்க் காப்போம் இணைந்தபடி!

- ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

நூலகம்

நூலகம் போகலாம்
நாளெல்லாம் இருக்கலாம்.
அறிவியல் நூல்களை
அயராது படிக்கலாம்.

சிறுவர் நூல்களை
கதையாகப் படிக்கலாம்
அனுபவப் பாடங்கள்
ஆயிரம் படிக்கலாம்

அறிவியல் வளர்க்கலாம்.
அகிலத்தில் உயரலாம்!
- வே. பூங்குன்றன்



மலையே...

மலையே உன்னைப் போற்றுகிறோம்
மழையை நீயும் தருவாயே.
இலையே உன்போல் நண்பர்கள்
இதனை என்றும் மறவோமே.

செடியும் கொடியும் மரவகைகள்
செழித்து வளர்வது உன்னிடமே
ஓடும் நதியும் அருவிகளும்
ஒலிலாய் பிறப்பது உன்னிடமே.

ஓடி வந்திடும் மேகத்தை
உடலால் நீயும் தடுக்கின்றாய்
வாடும் உயிர்கள் தழைத்திடவே
வள்ளல் மழையை தருகின்றாய்!

மா. திலீப்குமார், சென்னை - 2.



மணலிலிருந்து புதுப் பொருட்கள்!



கூழாங்கல்லும் மணலும் ஒரே வகைதான். எளிமையானவைதான் ஆயினும் இவற்றையே மூலப் பொருளாக வைத்துக் கொண்டு எத்தனை விதமான புதுப்புது ரசாயனப் பொருள்களைச் செய்கிறார்கள் தெரியுமா? அவற்றுக்கெல்லாம் 'ஸிலிக்கோன் பொருள்கள்' என்பது பொதுவான பெயர். ஏனெனில் மணலில் கூழாங்கல்லில் உள்ள ஒரு முக்கியமான பொருள் 'ஸிலிக்கன்' என்பதாகும்.

இன்று ஸிலிக்கோன் பொருள்கள் நுழையாத இடமே இல்லை எனலாம். வீட்டில் பயன்படும் கருவிகள், தொழிற்சாலைத் தளவாடங்கள், கார்கள், விமானங்கள், ஏவுகணைகளில் எல்லாம் ஸிலிக்கோன்கள் பயன்படுகின்றன.


ஸிலிக்கன், பிராணவாயு இரண்டும் கலந்து உருவானதுதான் மணல். மணல், பாறை இவற்றை மின்விசை உலையில் இட்டு மாற்றி ஸிலிக்கோன் ரப்பர், ஸிலிக்கோன் பிசின் முதலியவை இன்று செய்யப்படுகின்றன.


தலைக்குத் தேய்க்கும் எண்ணெய், முகத்துக்குப் போடும் பவுடர், புண்ணுக்குப் போடும் களிம்பு முதலிய பொருள்களில் ஸிலிக்கோன்களைச் சேர்க்கிறார்கள்.

விபத்தில் மூக்கு உடைந்தால், காது போனால், ஸிலிக்கோன் பொருளால் ஆன உண்மையான மூக்கு, காது போலவே - மூக்கும் காதும் வைத்துப் பொருத்திக் கொள்ளலாம்.

இவற்றுக்கெல்லாம் மூலப்பொருள் மணல்தான் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

– சிவரஞ்சன், ஆற்காடு.





சார் தபால்!

★ பலூன்களில் இத்தனை வகைகளையும், படத்துடன் வெளியிட்டுத் தந்திருந்தது பாராட்டுக்குரியது.
என். இராஜலெட்சுமி, மேலப்பாடி.

★ 'படாபேபி' என்ற பகுதி மிகவும் அருமை. தற்காலக் குழந்தைகள் எந்த அளவுக்குப் புத்திசாலிகள் என்பதை மிகவும் தெளிவுபடக் கூறியிருக்கும் விதம் மற்றும் படங்கள் மிகவும் அருமையாக இருந்தன.
பி. முத்துக்குமரன், குற்றாலம்.

சிறந்த படிப்பினை!

★ ஆயிரக் கணக்கான மழலையரின் 'பொன் மனம்' எனும் மாளிகை விழாவும், தற்போது பொன் விழா மாளிகையிலும் குடியேறிவிட்ட 'எங்கள்' கோகுலத்திற்கு வாழ்த்துகளும் வரவேற்புகளும்! காணிக்கை ராஜின் சிரிப்புத் துணுக்குகள் தொடர்ந்து கோகுலத்துக்கு சுவை சேர்த்து வருகிறது.
ப.கா. மணிமொழியன், நாகமலை.

★ சின்ன பாபுவின் கதைதான் சிரிப்பூட்டுகிறது என்றால் உமாபதியின் படம் அதற்கு மேல் இருக்கிறது. ஆக 'சிரிப்புலக சூப்பர்ஸ்டார்கள்.
சி. அருண் மணி, சந்தப்பட்டி.

★ குழந்தைகள் பத்திரிகைகளில் குழந்தைகளின் படைப்புகளுக்கு மிக அதிக வாய்ப்புத் தருவது கோகுலம்தான் என்பதில் எங்களுக்குப் பெருமிதம்.
கோகுலம் சிறுவர் சங்கம், முத்துராமலிங்கபுரம்.

★ நண்டு மரமேறும் என்ற செய்தியை ரேவதி அவர்களின் கட்டுரை மூலம்தான் அறிய முடிந்தது. பாராட்டுகள்.
ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.

★ பிருந்தாவனக் கவியரங்கம் பிருந்தாவனத்திற்கே அழைத்துச் சென்றது.
ஆர். சத்தியன், அகரக்கடம்பனூர்.

★ "கேளுங்கள் சொல்லப்படும்" பகுதிக்கே நாங்கள் கொடுக்கும் மூன்று ரூபாய் சரியாய்ப் போய்விட்டது...! மற்றவையெல்லாம் கோகுலத்தின் இலவச இணைப்புகள்தான்.....!
பி.எஸ். சுரேஷ்பாபு, பரங்கிப்பேட்டை.

★ பீரங்கி பற்றிய செய்திகள் பிரமிக்க வைத்தன. பீரங்கி குழாய் அருகில் கம்பீரமாய்க் காட்சியளித்து சல்யூட் அளிக்கும் ஸ்ரீராம், ரேணுவின் வண்ணப்படம் எண்ணத்தை விட்டு அகலவில்லை.
எஸ். நாகராஜன், மேலப்பாடி.

★ "மந்திரக்கத்தி" ஏமாற்றுபவன் என்றாவது ஒரு நாள் ஏமாற்றப்படுவான் என்ற கருத்தை உணர்த்தியது.
ஜெ. நெடுமாறன், குடியாத்தம்.

★ "முட்டாள் ராஜகுமாரன்" படக்கதை மிகவும் அருமையாக இருந்தது.
வே. பாரதி, வடமாதிமங்கலம்.

★ பிருந்தாவனக் கவியரங்கத்தில் வெளியாகியுள்ள அத்தனை கவிதைகளும் அருமை. அட்டைப் படம் அசத்தல் ரகம்.
ப. ராகவன், சென்னை - 19.

★ முல்லாவின் கதைகளை மட்டும்தான் நான் இதுவரை படித்திருக்கிறேன். ஆனால் 'கோகுலம்' மட்டுமே முல்லாவின் வரலாற்றை வாசகர்களுக்கு அளித்திருக்கிறது. ஆசிரியருக்குப் பலகோடி நன்றிகள்.
ப. கணேஷ், சென்னை - 57.

★ பரதனின் குரலை இனி யாரும் கேட்கப் போவதில்லை என படித்ததும் என் கண்கள் குளமாக மாறிவிட்டன.
ச. பிரசன்னா, சென்னை - 58.

★ "எங்கப்பா காய்க்காரர்" ஒரு அருமையான படைப்பு. சிறுவர் சமுதாயத்திற்கு சிறந்த படிப்பினை ஊட்டும் வண்ணம் அமைந்துள்ளது.
பி.அ. முஸ்தபாகமால், தக்கோலம்.

★ 'காணாமல் போன சங்கிலி' சிறுகதை வெகு அருமை. வேதாளம் சொன்ன கதைக்கு விக்ரமாதித்தன் விடையளிப்பது போல கம்ப்யூட்டர் சொன்ன கதைக்கு சேகர் பதில் அளிப்பது - வித்தியாசமான, சுவாரஸ்யமான கற்பனை. ஆயிரக் கணக்கான டாலர்கள் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் - பிங்க் குருவிகளின் வசதிக்கு வி.ஐ.பி. ரூமை ஒதுக்கித் தந்த வால்டர்-விக்டர் சகோதரர்களின் இரக்க குணத்தை எண்ணி உவந்து போனேன்.
மொரப்பூர் அ. நிஷாம், மொரப்பூர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈகாடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம்: 2345624; சர்க்குலேஷன் மானேஜர்: 2345623; விளம்பரம் - சந்தா: 2345622; டைரக்டர்: 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-

துடிப்பூட்டும் சக்தி இதோ!





டர்போ!
சத்தான பால் கொண்டு
தயாரிக்கப்பட்ட
புத்துணர்வூட்டும்
சாக்கலேட் பார்.

சக்தியளிக்கும் சாக்கலேட்!

இந்தியாவின் மிகப்பெரிய, மிக நவீன ஆலை அளிப்பது
காம்ப்கோ லிமிடெட், மங்களூர்

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

